மே 22 – 28, 2005
May 22 - 28, 2005
16.00
24 பக்கங்கள்
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்





## கண்டி மாநாட்டிலும் இனவாதக் கூச்சல்கள்



## வெற்றிக் களிப்பில் ஜெயலலிதா!

## ஜே.வி.பியும் சந்திரிக்காவும்





## திருமலையை ஆக்கிரமிக்கும் பேரினவாதம்

# அரசியல் வம்பு தும்பு



அம்பி

### எப்படி ஆதரிப்பது?

*ஜே.வி.பியினருக்கு இப்போது காலநேரம் அவ்வளவு நல்லதாக இல்லை என்று தான் கூறவேண்டும். முன்னர் போன்று அரசியலில் காய்நகர்த்தல்களை அவர்களால் இலகுவில் செய்ய முடிவதில்லையாம். அண்மையில் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக கொழும்பில் ஜே.வி.பி நடத்திய எதிர்ப்புக் கூட்டத்தில் எதிர்பார்த்த சனம் இல்லையாம். சனத்தை அதிகமாக காட்டும் வகையில் மேடை மற்றும் இதர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தனவாம்.*

*எல்லாவற்றையும் எதிர்த்துக் கொண்டுபோனால் மக்கள் வெறுக்க ஆரம்பித்து விடுவார்கள். சிலவற்றை ஆதரிக்கத்தான் வேண்டுமென்று ஜே.வி.பியின் தலைவர்கள் சிலர் கட்சிக்குள் கூறிக்கொண்டு வருகிறார்களாம். ஆனாலும் முன்னர் எதிர்த்த விடயத்தை பின்னர் எப்படி ஆதரிப்பது? இதுதான் ஜே.வி.பிக்குள் பெரும் பிரச்சினையாம். பொதுக்கட்டமைப்பிலும் இதுதான் அடிப்படை.*

### சபாஷ் சந்திரிகா

*பொதுக்கட்டமைப்பு விடயம் குறித்து ஜே.வி.பியுடன் சந்திரிகா அம்மையார் பேச்சு நடத்தியபோது பொதுக்கட்டமைப்பு தொடர்பில் மாற்று யோசனை ஒன்றை ஜே.வி.பி முன் வைத்தது. இந்த பேச்சு முடிந்து ஜே.வி.பியினர் ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறியதும் ஜனாதிபதி தனது ஆத்திரத்தை வார்த்தையால் பொரிந்து தள்ளினாராம்.*

*''பொதுக்கட்டமைப்பில் தமிழர் தரப்பு தமிழ் கூட்டமைப்பினரை சேர்க்கச் சொல்கிறது ஜே.வி.பி. இது 10 வருடங்களுக்கு முன்னர் மாகாண சபை அமைக்க எடுத்த முயற்சிபோல் உள்ளது. மாகாண முறையை ஜே.வி.பி. மறைமுகமாக சொல்கிறது. 10 வருடத்துக்கு முன்னரான மாகாண முறையை இப்போது சரியென கூறும் ஜே.வி.பி. இனி 10 வருடத்தின் பின்னர் பொதுக்கட்டமைப்பு போன்ற யோசனையை அமுல்படுத்த கோரும். இவையெல்லாம் வேலைக்குதவாதவை'' என்றாராம் ஜனாதிபதி. சரியான கணிப்பு சபாஷ் சந்திரிகா.*

### குழப்பிவிட்டீர்களே?

*இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு சம்பந்தமான பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுபறியாக தொடர்ந்து செல்வது குறித்து ஜனாதிபதி ஆத்திரம் கொண்டுள்ளாராம்.*

*ஏற்கனவே இந்த பிரச்சினையை மிக லாவகமாக கையாண்டுவந்த ஜனாதிபதியிடம், இப்பிரச்சினையை தீர்ப்பதாக கூறி பொறுப்பேற்ற திறைசேரிச் செயலருக்கு இப்போது என்ன செய்வதென்று தெரியாமல் உள்ளதாம்.*

*''என்னிடம் விட்டிருந்தால் இந்தப் பிரச்சினையை நான் கையாண்டிருப்பேன். இப்போது எல்லாவற்றையும் குழப்பியடித்துவிட்டு தடுமாறிக்கொண்டிருக்கிறீர்கள். முடியாவிட்டால் முன்கூட்டியே உண்மையைச் சொல்லிவிடுங்கள்'' என்று ஜனாதிபதி சம்பந்தப்பட்டவர்களை சாடுகிறாராம்.*

### பனிப்போர்

*இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருக்கும், அதன் கண்டி எம்.பிக்குமிடையிலான பனிப்போர் இன்னும் ஓயவில்லையாம்.*

*தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் கொழும்பில் திறந்து வைக்கப்பட்டபோது எல்லோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள். ஆனால், குறிப்பிட்ட கண்டி எம்.பி.மட்டும் கலந்து கொள்ளவில்லை.*

*''தோட்டத் தொழிலாளர்கள் இ.தொ.காவின் அடிமைகளாக இருப்பது போல் நான் அடிமையாக இருக்கமாட்டேன். இம்மாத இறுதிக்குள் ஒரு தீர்மானத்தை எடுத்துவிடுவேன்'' என்கிறாராம் கண்டி எம்.பி.*

*முஸ்லிம் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சராக அவர் எப்போது பதவியேற்பார் என்பதுதான் இப்போதைய கேள்வி.*

### தீர்வு தெரியாதவர்கள்

*''பொதுக்கட்டமைப்பு உருவாக்கம், மின்சாரசபை மறுசீரமைப்பு இந்த இரு விடயங்களையும் செய்ய முடியாமற் போனால் நாடாளுமன்றத்தை கலைத்து விடுவேன்'' என்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற பேச்சு ஒன்றின்போது சந்திரிகா கூறினாராம்.*

*''தற்போதுள்ள வாழ்க்கை செலவு அதிகரிப்புக்கேற்ப நாடாளுமன்றத்தை கலைத்தால் மக்கள் எம்மீது கல்லெறிவார்கள். எனவே எதிர்க்கட்சியிடம் ஆட்சியை ஒப்படையுங்கள்'' என்றாராம் பிரதமர் மஹிந்த.*

*இவை அமைச்சர்கள் மட்டத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது வெளியிடப்பட்ட கருத்துக்கள். இந்த சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க பிரதமரினதும், ஜனாதிபதியினதும் கூற்றுக்கள் குறித்து தனக்கு நெருக்கமானவர்களிடம் அதிருப்தி வெளியிட்டாராம்.*

*''பிரச்சினைகளை தீர்க்கத் தெரியாதவர்கள்'' என்றும் கூறுகிறார் அனுரா. பாம்பின் கால் பாம்பறியும்.*

### வாங்க ஜப்பானுக்கு

*கொழும்புக்கு வந்த ஜப்பான் பிரதிநிதி அகாசி முதலில் ஜே.வி.பியினரை சந்தித்தபோது பொதுக்கட்டமைப்பு பற்றிய தங்களின் நிலைப்பாட்டை அகாசியிடம் விளாசித் தள்ளியது ஜே.வி.பி.*

*நிர்வாகம், அரசு என்பன பற்றியெல்லாம் அகாசிக்கு விளக்கம் நடந்ததாம். ஜப்பானியர்களுக்குரிய மௌனத்துடன் எல்லாவற்றையும் தலையாட்டிக் கொண்டு கேட்டுக்கொண்டிருந்த அகாசி இறுதியில் ஜே.வி.பியின் தலைவருக்கு, ஜப்பானுக்கு வந்து தமது நாட்டின் நிர்வாகத்தை, செயற்பாட்டை பார்க்கும்படி அழைப்பு விடுத்தாராம்.*

*அரசு, நிர்வாகம் பற்றிய ஜே.வி.பி தலைவரின் லெக்சர் எல்லாம், அகாசியின் இந்த அழைப்பினால் புஸ்வாணமாகியது. இலங்கை வந்து நான்கு நாட்கள் இருந்தபோதும் ஜனாதிபதியை சந்திக்க முடியாதிருந்த அகாசிக்கு எமது நாட்டு நிர்வாகத்தை பற்றி சொல்லிக்கொடுக்கவா வேண்டும்?*

# திருமலைத் துறைமுக அலுவலகமும் இடமாற்றும் ஜே.வி.பியின் தந்திரமும்

திருகோணமலைத் துறைமுக அலுவலகங்களை சீனன் குடாவுக்கு இடம் மாற்றுவதற்கு ஜே.வி.பியினர் மீண்டும் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலை, உட்துறைமுக வீதியில் இயங்கிவரும் அலுவலகங்களை சிங்களவர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் சீனன்குடாவுக்கு இடமாற்றம் செய்வதற்கு காலம்காலமாக பெரும்பான்மை சமூகத்தால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பை அடுத்து இது சற்று இடைநிறுத்தப்பட்டது.

இப்போது ஜே.வி.பியினரின் ஆட்சி அதிகாரம் உள்ளதால் பேரினவாதிகள், இந்த அலுவலகங்களை சிங்களவர் பகுதிக்கு கொண்டு வந்து தமிழர்களை மேலும் அடிமைப்படுத்த துடிக்கின்றனர்.

திருகோணமலைத் துறைமுகம் இப்போது வேலைகள் எதுவுமின்றி வருவாய்குன்றி காட்சி தருகின்றது.

இங்கு கடமைபுரியும் ஊழியர்களுக்கு வருவாய் குன்றி பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் துறைமுகத்தில் தங்கள் ஆதிக்கத்தை மேலோங்கச் செய்வதற்காக பெரும்பான்மை இனத்தவர் பலத்த பிரயத்தனத்தில் இறங்கியுள்ளனர்.

இந்த முயற்சி இன்று நேற்றல்ல, ஆரம்பகாலம் தொட்டே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அப்போதைய சூழ்நிலையில் இந்த இடமாற்ற முயற்சி காலத்துக்கு ஏற்றதாக இருக்கவில்லை. எனினும் 1997 முதல் மீண்டும் சூடுபிடித்தது. உட்துறைமுக வீதியில் இருக்கின்ற துறைமுக அலுவலகத்தை சீனன் குடாவுக்கு இடமாற்றம் செய்ய முற்பட்டனர். இதனை நாடாளுமன்ற உறுப்பினர் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி தடுத்து நிறுத்தினார்.

சீனன்குடா சிங்கள மக்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட பகுதி. அதனை அபிவிருத்தி செய்து தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு துறைமுக அலுவலகத்தை சீனன்குடாவுக்கு மாற்றம் செய்ய வேண்டிய தேவை பெரும்பான்மை இனத்துக்கு இருக்கின்றது. இதன் காரணமாக இரா.சம்பந்தன் எம்.பியினால் தடுத்த நிறுத்தப்பட்ட இடமாற்றத் திட்டத்தை 1999ஆம் ஆண்டு அவர் இலங்கையில் இல்லாதபோது நடைமுறைப்படுத்துவதில் வெற்றி கண்டார்கள். இவ்வாண்டு செயற்பாட்டுப் பிரிவு (Operation Division) சீனன்குடாவுக்கு இடம்மாறியது. ஏனைய பிரிவுகளான பிரதான அலுவலகத்தையும் நிதிப்பிரிவையும் இடமாற்றம் செய்ய முற்பட்டபோது அம்முயற்சி இரா.சம்பந்தன் எம்.பி.யால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இப்போதைய அரசில் ஜே.வி.பியினர் ஆதிக்கம் செலுத்துவதால் அவர்கள் பலத்தைப் பெருக்கவும், தொழிற்சங்கத்துக்கு ஆட்களைத் திரட்டவும் தமிழர்களின் செல்வாக்கை குறைத்து அவர்களைப் பலவீனப்படுத்துவதற்காகவும் முன்னர் செய்யமுடியாது போன அலுவலக இடமாற்றத்திட்டத்தை நிறைவேற்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயத்தில் ஜே.வி.பியினருக்கு அனைத்து பெரும்பான்மை தரப்பினரினதும் ஆதரவு இருந்து வருகிறது. சுனாமியால் துறைமுக ஊழியர்கள் பாதிப்புற்று வேதனைச் சுமைகளுடன் அலுவலகப் புனரமைப்பில் ஈடுபட்டிருந்தபோது, அங்கு விஜயம் செய்த நிறைவேற்றுப் பணிப்பாளர் துக்கம் விசாரிப்பதை விடுத்து அலுவலகத்தை மாற்றுவதற்கு தயாராக இருங்கள் என்று கூறிய கூற்றை இதற்கு சிறந்த உதாரணமாகச் சொல்லலாம். மேலும் சிங்களத் தரப்பு மேற்கொண்ட கையெழுத்து வேட்டையும் இதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

அமைதிநிலை உறுதிப்படுத்தபடாத நிலையில் அலுவலக இடமாற்றம் நடைபெறுவது தமிழ் ஊழியர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே அமையும். திருகோணமலையில் தமிழர் பலத்தைக் குறைக்கும் முயற்சிகளில் இந்த இடமாற்றத்திட்டம் முக்கியமான தொன்றாகும்.

தற்போது சீனன் குடாவில் இடம் மாற்றலாகிப் போய் இருக்கும் செயற்பாட்டுப் பிரிவின் தமிழ் ஊழியர்கள் கொத்தடிமைகளாகக் கூனிக்குறுகி நிற்கின்றனர். இந்த பயந்த வாழ்வுக்கு காரணம் சீனன் குடாவில் பெரும்பான்மை இனத்தவர்கள் வாழும் சூழலாகும்.

ரஹ்மான்

கடந்த காலங்களில் — குறிப்பாக கடந்தவருடம் — ஏற்பட்ட கலவரங்களின்போது சீனன் குடாவில் பணிபுரியும் தமிழ் ஊழியர்கள் தமது அலுவலகம் செல்ல முடியாது திணறியதோடு சிங்களவர்களால் வழியில் தாக்கப்பட்டும் இருந்தனர்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் தான் தமிழ் ஊழியர்கள் பிரதான அலுவலகம் சென்று தமது வரவைப் பதிவுசெய்தனர். நிலைமை இப்படி இருக்கும்போது உட்துறைமுக வீதி அலுவலகங்களை மாற்றுவது திட்டமிட்டு தமிழர்களை பலிக்கடாவாக்கும் முயற்சி என்றே வர்ணிக்கப்படுகின்றது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

**சுடர் ஒளி வாரமலரில் விரைவில் எதிர்பாருங்கள்!**

ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் எழுதிய

**தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்**

**(The Fall and Rise of the Tamil Nation)**

★ சுதந்திரத்தின் பின் தென் இலங்கை அரசியல்வாதிகளால் நயவஞ்சகத்தனமாக ஏமாற்றப்பட்ட தமிழ்த் தலைவர்கள்.

★ பேரினவாதிகளால் நசுக்கப்பட்ட அஹிம்சைவழிப் போராட்டங்கள்.

★ தமிழ் தேசத்தின் எழுச்சிக்கு வித்திட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம்.

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம்வரை இடம் பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது தமிழ்த் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்.

இதன் தொகுப்பு, தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வாரா வாரம் வெளிவரவிருக்கிறது.

# வாசகர் இதயம் பேசுகிறது

அன்பின் சுடர் ஒளியே!

அவனியில் ஆயிரம் பத்திரிகைகள் வந்தாலும் நமது முதல் தரப்பத்திரிகை நீதான். நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அத்தனையும் முத்துக்கள். கட்டுரைகள், சிறுகதை, கவிதைப்புனல், பித்தன் பதில், மருத்துவம், சினிமா எல்லாமே தரமாக உள்ளன. உன் சேவை தொடர எனது உளங் கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

*மணிமாறன், யாழ்ப்பாணம்.*

சுடர் விடும் சுடர் ஒளியே!

வாரம் தோறும் உன் வரவை எதிர்பார்த்து காத்துநிற்கும் எண்ணற்ற வாசகர்களில் நானும் ஒருவன். அரசியல் நிலவரங்களை, அதிகரிக்கும் குற்றங்களை, இலக்கியப் படைப்புக்களை, இன்பக் கவிதைகளை அள்ளிவழங்கும் சுடர்ஒளியே! உன் சுடர் மேலும் ஒளிவீச இன்றைய விஞ்ஞான உலகின் தலைசிறந்த துறையான அறிவியல் விடயங்களையும் நமக்காக வழங்கினால் சிறப்பாக இருக்கும்.

*சிவருபன், மட்டக்களப்பு.*

வாரம்தோறும் எம் கரங்களில் தவழும் அன்பான சுடர் ஒளியே! உன்னில் தவழ்ந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் தரமானவை. அதிலும் அரசியல் அம்பலம், பித்தன்பதில், அரசியல் கட்டுரைகள், தொடரும் தவிப்பு, மிஸ்ரர் வேதாளம் போன்றவை என்னை மிகவும் கவர்ந்த ஆக்கங்கள்.

மேலும் பல ஆக்கங்களை வாசகர்களாகிய எமக்கு தந்து எமது அறிவை மென்மேலும் பெருக்க வேண்டும் எனக் கேட்பதுடன் உனது சேவை தொடர எனது இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

*அ.அஜந்தன்,*
*முள்ளிவாய்க்கால்-கிழக்கு.*

# ஆட்டங்காணும் அரச புலனாய்வுப் பிரிவு

இலங்கை அரச புலனாய்வுத் துறையைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் ஆறு பேர் கடந்த வாரம் சிங்கப்பூர் ஊடாக ஐரோப்பிய நாடொன்றுக்கு மிக இரகசியமான முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கல்கிஸ்ஸை தீவிரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நிலாப்தீன், மேஜர் சம்சன் ரட்னாயக்க, கப்டன் நிஸாம், மேஜர் முத்தலிப் மற்றும் இராணுவத்துக்கு தகவல் வழங்குபவர்களான குணபாலன், ராஜேந்திரன் ஆகியோரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

அரச புலனாய்வு விடயங்களில் முக்கிய பங்கு வகித்ததுடன் புலிகளுக்கெதிரான புலனாய்வு நடவடிக்கைகளில் மிகவும் நுட்பமாக செயற்பட்டு வந்தவரும் அரச புலனாய்வுத்துறையின் அனைத்து மூலை முடுக்குகளையும் நன்கு அறியப்பெற்றவருமான கல்கிஸ்ஸை பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப்பிரிவின் பொறுப்பதிகாரி ஜெயரட்ணம் கொழும்பில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட பின்னணியில் இந்த தப்பி ஓட்டம் இடம் பெற்றுள்ளது.

நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் விட அதியுயர் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள கொழும்பு நகரில் வைத்து முக்கியத்துவம் மிக்க ஒரு புலனாய்வுத்துறை அதிகாரியை கடத்தி செல்வது சுலபமான ஒன்றல்ல. அரச புலனாய்வு இந்திரமும் அதன் புலனாய்வு நுட்பங்களும் தந்திரங்களும் வீரியமற்றவையாகக் காணப்படுவதே இதற்குக் காரணமாகும்.

சமாதான காலத்தில் ஏட்டிக்குப் போட்டியாக இடம்பெற்ற புலனாய்வுப் போரில் புலிகளின் உளவுத்துறை குறிப்பிடத்தக்க வெற்றியைக் கண்டுள்ளது. ஆனால், புலிப் புலனாய்வாளர்களின் மூலோபாயத் திட்டங்களுக்கு எதிராக அரச புலனாய்வு இயந்திரத்தால் தந்திரோபாயத் திட்டங்களை தீட்ட முடியாததாகவே உள்ளது.

மருத்துவத் தேவைக்காக கடந்த வாரம் கொழும்பு வந்த விடுதலைப்புலிகளின் உளவுத்துறைப் போராளி நியூட்டன் கடத்தப்பட்டமை தொடர்பாக அரச புலனாய்வு அதிகாரிகள் மார் தட்டியுள்ளனர். இதனைப் பாரிய புலனாய்வு [illegible]ற்றியாக கூற முடியாது. தமது நாட்டி[illegible]ங்களது அதிகாரிகளை பாதுகாக்க திரா[illegible]ியற்று வெளிநாட்டுக்கு அனுப்பி[illegible]டு தனி ஒருவரை பிடித்ததை பெரி[illegible]க தம்பட்டம் அடிக்கும் அவர்களின் போக்கு வேடிக்கையானதாக உள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்ட கடந்த மூன்றாண்டுகளில் அரச புலனாய்வுத்துறையின் பதவிகளில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் நியமிக்கப்பட்டவர்கள். பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் மாற்றப்பட்டனர். எவர் எந்த மாற்றத்தைக் கொண்டு வந்த போதிலும் விடுதலைப்புலிகளின் புலனாய்வு சேவையுடன் ஒப்பிட் முடியாத நிலையிலேயே அரச புலனாய்வுத் துறை காணப்படுவதாக குற்றஞ் சாட்டப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஓர் அமைப்பு என்ற ரீதியில் புலனாய்வுத்துறையை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் முன்னின்று செயற்படுத்த முடிந்த நிலையில், ஒரு நாட்டின் புலனாய்வுச் சேவை தனியாகச் செயற்பட்டும் ஏன் வெற்றியடைய முடியவில்லை என உயர் பாதுகாப்பு மாநாட்டில் வைத்து உயரதிகாரி ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தமை இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும்.

கடத்திச் செல்லப்பட்ட ஜெயரட்ணம் இராணுவ புலனாய்வுப்பிரிவின் சகல மட்டங்களிலுமுள்ள முக்கியஸ்தர்கள் யார் யார் என அறிந்து வைத்துள்ளமையினால் அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு இன்னும் பலர் இலக்கு வைக்கப்படலாம் என்ற அச்சத்திலேயே அவசர அவசரமாக பலர் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

கருணா குழுவைத் தத்தெடுத்து அவர்களை பாதுகாத்து வழிநடத்த முயன்ற அரச புலனாய்வுப்பிரிவு இன்று தன்னையே பாதுகாத்துக் கொள்ள முடியாது வெளிநாட்டுக்கு தப்பி ஓடும் அளவுக்கு ஆட்டம் கண்டு போயுள்ளமை அரச உயர் மட்டத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

இராணுவ தந்திரோபாயத்தில் முக்கியமாக இரு வழிமுறைகள் காணப்படுகின்றன, ஒன்று எதிர்த்து முறியடிப்பது. மற்றது விலகி தப்பித்து ஓடுவது . இதில் இரண்டாவது முறையே தற்போது அரச புலனாய்வுப் பிரிவுக்கு ஏற்பட்டிருக்கிறது. குருணா குழுவினர் மீது கொட்டாவ பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதலோடு அரச புலனாய்வுத் துறையினர் மீதான தாக்குதல் ஆரம்பித்தது. அதனை தொடர்ந்து அரச உளவுப்பிரிவின் கூலிப்படையாக செயற்பட்டு வந்த சில தமிழ் இயக்கங்களின் முக்கியஸ்தர்களும் கொழும்பில் வைத்துக் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

- அனல் வேந்தன் -

கொழும்பில் மட்டுமல்லாது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தாக்குதல்களுக்கு இலக்கான புலனாய்வுப் பிரிவு அவற்றை முறியடிக்க முடியாமல் போய் விட்டது குறிப்பிடத்தக்கது. இந்த சூழ்நிலையிலேயே மேற்படி முடிவை அரச உயர்மட்டம் எடுத்திருப்பதாக இராணுவ உயர் மட்டத்தில் பேசப்படுகிறது.

எதிரியின் கோட்டை எனத் தெரிந்தும் அதற்குள் வந்து ஊடுருவி வேவு நடவடிக்கைகளை கன கச்சிதமாக மேற்கொள்ளும் புலிகளிடமிருந்து தங்கள் கோட்டைக்குள் நின்ற போதும், தப்பி ஓடும் அரச புலனாய்வுப் பிரிவு இன்னும் நிறையப்படிக்க இருக்கிறது என்பதே யதார்த்தமாகும்.


# NATIONAL CHILD PROTECTION AUTHORITY

NO. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura, Sri Lanka.
Telephone: 94-2778911-14, Fax: 94-2778915, E.mail: ncpa@childprotection.gov.lk
Website: http:/www.childprotection.gov.lk


unicef

## சிறுவர்களை தொழிலுக்கு ஈடுபடுத்துவதற்கான தொழிலாளர் சட்டம்

01) ✦ தொழிலாளர் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் சட்டங்கள்
1. பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கு ஈடுபடுத்தும் சட்டம் (1956 இல 47)
2. கடைகள், அலுவலகங்கள், சேவைச் சட்டம் (சேவை மற்றும் கொடுப்பனவை ஒழுங்குபடுத்துதல்)
3. தொழிற்சாலை சட்டங்கள்
4. பெண்களை சுரங்கத் தொழிலுக்கு பயன்படுத்துதல் (1937 இல 13)

02). சிறுவர்களை சேவைக்கு பயன்படுத்துவதற்கான தொழிலாளர் சட்டம்
✦ 14 வயது முதல் 16 வயது வரையானவர்களை சேவைக்கு தொழிலுக்கு பயன்படுத்துவதற்கான நிபந்தனைகள்.
1. 16 வயதுக்கு குறைந்த சிறுவர்களை உணவுநேரம் உட்பட 9 மணித்தியாலங்கள் மட்டுமே சேவைக்கு உட்படுத்துதல் வேண்டும்.
2. சனிக்கிழமை நாட்களில் 5 1/2 மணித்தியாலத்திற்கு மேல் வேலை செய்யக்கூடாது.
3. ஞாயிற்றுக்கிழமை முழுநேர ஓய்வு நாளாக இருத்தல்வேண்டும்.
4. உணவு வேளை உட்பட கிழமைக்கு 50 1/2 மணித்தியாலங்களுக்கு அதிகமாக சேவையில் ஈடுபட்டிருத்தல் கூடாது.

03). 15-18 வயதுக்குட்பட்ட இளைஞர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்
1. கிழமை நாட்களில் 9 மணித்தியாலயங்களை விட மேலும் ஒரு மணித்தியாலயம் சேவையை பெற்றுக் கொள்ளலாம். ஆனாலும் கிழமைக்கு 5 மணித்தியாலயங்களை விட அதிகரிக்கக்கூடாது.
2. உணவு நேரம் உட்பட கிழமைக்கு 55 1/2 மணித்தியாலயத்திற்கு அதிகமாக வேலை செய்யும் நேரம் இருக்கக் கூடாது.

04) சிறுவர்கள் வேலை செய்வது சம்பந்தமான வழக்கு பரிசோதனைகளின்போது கவனிக்க வேண்டியவை:-
1. கிடைக்கப்பெற்ற தகவல்கள் உண்மையானவையா என ஆராய்ந்து பார்த்தல்.
2. விசாரணைகள் அல்லது வழக்கொன்றைக் கையாளும் சந்தர்ப்பங்களில் சிறுவர்களின் நலனை மட்டுமே கருத்திற் கொள்ளுதல்.
3. நீதிமன்றத்திற்கு வழக்கை கொண்டு செல்லுமுன்னர் அனைத்து ஏற்பாடுகளையும் ஒழுங்குப்படுத்திக் கொள்ளுதல் அவசியம்.
4. அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஏனைய அதிகாரிகளுடன் நல்லுறவைப் பேணல்.
5. நீதிமன்றத்துடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ளுதல் அவசியம் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.
6. சட்டம் குறித்த பிரச்சினைகள் இருப்பின் சட்டவல்லுநர்களுடன் கலந்தாலோசித்து ஆலோசனை பெற்றுக் கொள்ளவேண்டும்.

### பரிசுக்கான இவ்வாரக் கேள்வி

1) 4-16 வயதுக்குட்பட்டவர்கள் சேவையில் (தொழிலில்) ஈடுபடுத்தப்படுவதற்கான நிபந்தனைகள் எவை?

✱ அனுப்பப்படும் சரியான விடைகளில் பத்து விடைகள் தெரிவுசெய்யப்பட்டு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் பரிசில்கள் வழங்கப்படும்.

✦ *விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:*
ஊடகப்பிரிவு
தேசிய சிறுவர் பாதுகாப்பு
அதிகாரசபை
330, தலவத்துகொட விதி,

05) சிறுவர் துஷ்பிரயோகம்

A. காலையில் இருந்து வேலை செய்து என் இரு கைகளும் வலிக்கின்றன. இன்று மாலை கொஞ்சம் நித்திரை செய்யக் கிடைக்குமா தெரியாது.

06) சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த அறிமுகம்.
சிறுவர் துஷ்பிரயோகம் என்பது பல நூறு ஆண்டுகள் எமது சமுதாயத்தினுள் ரகசியமாக ஊடுருவியுள்ள பிரச்சினை ஆகும். என்றாலும் இதையொரு பாரிய பிரச்சினையாக உணர்ந்து அதற்கு எதிரான நடவடிக்கைகள் கடந்த சில தசாப்தங்களாகவே மேற்கொள்ளப்படுகின்றன.
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் இருந்து சிறுவர் துஷ்பிரயோகங்களினால் ஏற்படும் குறுகிய கால மற்றும் நீண்டகால கூடாத விளைவுகள் குறித்தும் கவனம் செலுத்தப்படுகிறது.
அத்துடன் சிறுவர்களுக்கு எதிராக நடத்தப்படும் பல விதமான செயற்பாடுகள், கொடூரனமான செயல்களுக்கு எதிராக ஐ.நா. சிறுவர் உரிமை பாதுகாப்பு நிதியத்துடன் இணைந்து இலங்கை செயற்படுகிறது.


தலைவர் - பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா

07) சிறுவர்களுக்கு வழங்கப்படும் உடல் ரீதியான தண்டனைகள் மிகவும் தவறானவை என 1980 களின் மத்திய பகுதியில் இலங்கையில் உணரப்பட்டது. சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்குட்படும்போது கொடூரமான குறுகியகால மற்றும் நெடுங்கால தாக்கங்கள் ஏற்படுகின்றன. இதனால் சமுதாயத்திற்கும், அரசுக்கும் ஏற்படும் பிரச்சினைகள் பாரதூரமானவை. சிறுகீறல் காயங்கள் முதல், கைகால் எலும்புகள் முறிதல் போன்ற உடல் காயங்களினாலும் மரணம் சம்பவிக்கக் கூடிய காயங்கள் போன்றவையினாலும் குடும்பங்களிலும், சமுதாயத்திலும் பலவிதமான முறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் விவரம் தெரிந்த வயதுடைய பிள்ளைகளாயின் தமக்கேற்பட்ட துஷ்பிரயோகம் குறித்து அவர்களே முறைப்பாடு செய்யலாம். பெற்றோர், ஆசிரியர்கள், அயலவர்கள் அல்லது உறவினர் போன்றவர்கள் குற்றவாளிகளாக இருக்கலாம்.

08) உடல்ரீதியான துஷ்பிரயோகம் எனப்படும்போது தண்டனை வழங்குதல் முக்கிய இடம் வகிக்கிறது. பிள்ளைகளை அடித்தல், காயப்படுத்தல் போன்ற கொடூரச் செயல்கள் தண்டனை வழங்குதலில் அடங்கும். அதேபோன்று துஷ்பிரயோகங்களுக்குட்படுத்தப்படும் சிறுவர்களுக்கு பல்வேறு வகையான தாக்கங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன. குற்ற உணர்வு அல்லது கூச்ச சுபாவம்,

09) தன்னம்பிக்கை இன்மை, ஏக்கம், கற்கமுடியாமை, அசாதாரண கவலைகள், தலைவலி போன்ற உடல்ரீதியான விளைவுகள் பற்றி வீட்டில் முறைப்பாடு செய்தல், குடும்பத்தினருடனான உறவு குறைந்து காணப்படுதல், குறைவாக உண்ணுதல் போன்றவற்றை காணக்கூடியதாக இருக்கும்.

சிறுவயதில் இவ்வாறான துஷ்பிரயோகங்களுக்குட்படும் சிறுவர்கள் பிற்காலத்தில் வயது வந்தவுடன் கொடூரமான செயற்பாடுடையவராகிவிடுவர்.

வயது குறைந்த குற்றவாளிகள் சிறுவயதில் பலவிதமான துஷ்பிரயோகங்களுக்குட்படுத்தப்பட்டவர்களாவர். அல்லது கவனியாது விடல், உடல்ரீதியான தண்டனைகளுக்குட்படுத்தப்படுபவர்கள் என்பது விசாரணைகளின் மூலம் தெரியவருகிறது.

10) தற்போது சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக துணிவுடன் செயற்பட உங்களால் இப்போது முடியும். முன்னர் போலன்று சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக நீதித்துறை கடும் நடவடிக்கை மேற்கொள்கின்றது. சிறு பிள்ளைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள், விபத்துகள் குறித்து தேடிப் பார்க்கின்றனர்.

11) சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக இலகுவாக எவ்வித தடையுமின்றி சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். எவ்வளவு பெரியவர்களானாலும் சமுதாயத்தில் உயர் ஸ்தானத்தில் பல முள்ளவர்களாயிருந்தாலும், அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

அப்படியானால் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து அறிந்து கொண்ட நீங்கள் என்ன செய்யவேண்டும்?
சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் பெரியார்கள் பிரிவுக்கு முறைப்பாடு செய்யலாம். தொலைபேசி இலக்கங்களை ஞாபகப்படுத்துவதனால் 2778911, 12,13,14

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தலைவர், பேராசிரியர் ஹரேந்திர த சில்வாவினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட தகவல்களின்படி இவ்வறிக்கையை தயாரித்தவர் குமுதுமாலி மத்துமகே.

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,
தலைவர் - பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா
குறிப்பு : குமுதுமாலி மத்துமகே

# உலக வரலாறும் மனித விடுதலையும்

வரலாறு என்றால் என்ன? அது எப்படி இயங்குகிறது? அது ஓர் அர்த்தபூர்வமான செல்நெறியிற் செயற்படுகிறதா? அதன் இயங்கு விதிகளை இனம் கண்டு கொள்வது சாத்தியமா? மானிடத்தின் உலகானுபவத்தை உள்வாங்கியபடி, மனித சமூக வடிவங்களை ஓர் உயர்ந்த படிநிலைக்கு இட்டுச் செல்லும் பரிணாம வளர்ச்சியை நோக்கி வரலாறு அசைந்து செல்கிறதா? வரலாற்றின் அசைவியக்கத்தை அடையாளம் கண்டு அதன் போக்கை, அது செல்லும் பாதையை, அதன் இலக்கை எதிர்வு கூற முடியுமா? வரலாற்று அசைவியக்கத்தின் இறுதி நோக்கு என்ன? வரலாறு எப்பொழுது நிறைவு பெறுகிறது? அதற்கு ஒரு முடிவு உண்டா?

இன்றைய சமூக சிந்தனை உலகில் இப்படியான பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இவற்றிற்கு விடை அளிப்பதுதான் இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கம்.

வரலாறு என்பது கால ஓட்டத்தைக் குறிப்பது அல்ல. அன்றிக் காலத்தின் கோலத்தைக் கணிப்பிட்டுக் கூறுவதும் அல்ல. வரலாறு என்றால் செத்துப்போன காலத்தின் புதைகுழிக்குள் உக்கிப் போன எலும்புகளைத் தேடுவதும் அல்ல. கடந்து போன நிகழ்வுகளைக் காலவரிசையில் நிரைப்படுத்திவிடுவதும் வரலாறு ஆகிவிடாது. வரலாறு என்பது மனித வாழ்வு பற்றியது. மனித சமூகத்தின் வாழ்வியக்கம் பற்றியது. அந்த அசைவியக்கத்தின் மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் உந்தியல்பான தன்மைகள், சக்திகள், விதிகள் பற்றியது. சாராம்சத்தில் வரலாறு என்பது மானிடத்தின் உயர்நிலை வளர்ச்சிப் போக்குப் பற்றியது.

மானிடத்தின் வரலாற்றைப் பல்வேறு தனித்துவ கூறுகளாகப் பிரித்து, பண்டைய நாகரிகங்கள் என்றும், பண்பாட்டு மையங்கள் என்றும், நாடுகள் என்றும், சமூகங்கள் என்றும், தனி மனிதர்கள் என்றும் மேற்கொள்ளப்படும் சரித்திர ஆய்வுகளும் இல்லாமல் இல்லை. வளர்ச்சி, எழுச்சி, வீழ்ச்சி என்ற முப்பரிமாண விதிகளின் அடிப்படையில் இந்த வரலாற்று ஆய்வுகள் எழுதப்பட்டிருக்கின்றன.



## விடுதலை

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மற்றொரு பரிமாணத்தை - பக்கத்தை - அந்த மனிதருள் புதைந்திருக்கும் இன்னொரு அதிசய ஜீவனை - வெளிப்படுத்துகிறது 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.

இவற்றை மதிப்பாய்வு செய்வது எமது நோக்கமல்ல. நாம் இங்கு எடுத்துக் கொண்ட வரலாற்று ஆய்வு முறைமை வித்தியாசமானது. மனித வரலாற்றைக் கூறுபோட்டு நோக்காமல், மானிடத்தின், அதாவது மனித குலத்தின் ஒட்டுமொத்தமான வரலாறு பற்றியே நாம் இங்கு பார்ப்போம். முழு மனித வரலாறு எனும் பொழுது, எல்லாக் காலங்களிலும், எல்லா மக்கள் சமூகங்களாலும் பெறப்பட்ட உலகானுபவத்தை உள்வாங்கியபடி ஒரு சீரான அசைவியக்கமாக மானிடத்தை ஓர் உன்னத படிநிலை வளர்ச்சிக்கு நகர்த்திச் செல்லும் வரலாறு பற்றியே நாம் குறிப்பிடுகிறோம். இத்தகைய ஓர் ஆழமான வரலாற்றுத் தரிசனத்திற்கு மூல கர்த்தாவாக விளங்கியவர் பிரபல ஜெர்மானியத் தத்துவாசிரியரான ஹேகல் (Hegel) ஆவார். ஹேகலின் வரலாற்றுத் தத்துவத்தை செழுமைப்படுத்தி, விரிவுபடுத்தியவர் கார்ள் மாக்ஸ். ஆகவே, மானிட வரலாறு பற்றிய ஓர் ஆழமான பார்வையை நாம் பெற்றுக் கொள்வதாயின், ஹேகலதும், கார்ள் மாக்சினதும் சிந்தனை உலகங்களைத் தரிசித்துக் கொள்வதும் அவசியம். கார்ள் மாக்சின் வரலாற்றுக் கோட்பாட்டைப் புரிந்து கொள்வதாக இருந்தால் முதலில் ஹேகலின் தத்துவத்தைப் படித்தறிவது அவசியம் என்று லெனின் அடிக்கடி வலியுறுத்துவார். இந்தக் கூற்றில் உண்மை இருக்கத்தான் செய்கிறது.




அன்றைய ஜெர்மானிய கருத்துலகின் திருமூலராக ஹேகல் விளங்கினார். அவர் படைத்த எண்ண உலகம் மாக்ஸ் போன்ற அன்றைய இளம் சிந்தனையாளர்கள் மீது ஆழமான தாக்கத்தைப் பதித்தது. ஹேகலின் தத்துவத்தை மாக்ஸ் கடுமையாக விமர்சித்தார். அகவயமான ஆன்மீகவாதம் எனச் சாடினார். எனினும், ஹேகலின் கருத்துலக ஆதிக்கத்திலிருந்து அவர் முற்று முழுதாக விடுபட்டவராக இல்லை. ஹேகலின் இயங்கியலும், வரலாற்றுத் தத்துவமும் கார்ள் மாக்ஸை வெகுவாக ஆகர்ஷித்துக் கொண்டன. ஆன்மீக உலகத்தில் புதைந்து போயிருந்த ஹேகலின் இந்த சிந்தனைக் கருவூலங்களை, பொருளிய உலகத்தை விளக்கும் அறிவியற் கோட்பாடுகளாக மாக்ஸ் மாற்றியமைத்தார் எனக் கூறுவது பொருத்தமாகும். இதனால் தான் மாக்ஸியத்தை ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு ஹேகலின் தத்துவத்தைப் படிக்க வேண்டும் என லெனின் கூறினார்.

ஹேகலின் தத்துவத்தைப் புரிந்து கொள்வது என்பதும் இலகுவான விடயமல்ல. மிகவும் கனதியான, ஆழமான கருத்துக்களை, மிகவும் தெளிவற்ற பூடகமான வார்த்தைகளில், மிகவும் சிக்கலான முறையில் விவரிப்பதில் அவர் வித்தகர். வரலாறு பற்றி அவர் விளக்கும் Phenomenology of The Mind, Philosophy of History என்ற நூல்கள் இத்தகைய சொற்புதிர்கள் நிறைந்தவை. உதாரணமாக மனம் என்று அவர் பிரயோகிக்கும் சொல் பல்வேறு அர்த்த பரிமாணங்களைக் கொண்டது. அவரது மொழியில் மனம் என்பது சாதாரண மனித மனதை மட்டும் குறிப்பிடுவதல்ல. அது மனித ஆன்மாவைக் குறிப்பிடும். மானிடத்தின் கூட்டு மனதையும் அது குறிப்பிடும். அதே வேளை, அண்டமெங்கும் வியாபித்து நிற்பதாக அவர் கருதும் பிரபஞ்ச மனதையும் அது பொருள்படுத்தும். அதே சமயம் அது மெய்ப்பொருளையும் குறிக்கும். மெய்யுண்மையாக அவர் கருதும் பரிபூரணத்துவத்தையும் குறியீடு செய்யும். தனி மனித மனம், மானிட மனமாக, பிரபஞ்ச மனமாக, ஆத்மாவாக, பரமாத்மாவாக, மெய்யுண்மையாக, சகலத்தையும் உள்ளடக்கிய முழுமையாக, பரிபூரணத்துவமாக, எல்லாம் வல்ல கடவுளாக அர்த்த பரிமாணம் கொள்ளும்.

**ஆதி நாகரிகங்களில் அனைத்து அதிகாரமும் கொண்ட அரசனே சுதந்திர புருஷனாக விளங்கினான். மற்றெல்லோரும் அவனுக்குக் கீழ் அடிமைகளாக உழன்றனர்.**

இந்தப் பிரபஞ்ச மனதின் அசைவியக்கத்தையே வரலாறு என்கிறார் ஹேகல். இந்த அசைவியக்கமானது பிரபஞ்சத்திலிருந்து மனித வாழ்க்கை வரை வியாபித்து நிற்கிறது. அது எல்லாவற்றையும் நகர்த்திச் செல்லும் மாபெரும் இயங்கு சக்தியாக அசைகிறது. இந்தப் பேரசைவு ஒரு முரணிய இயக்கமாக சகலத்தையும் படைத்து, சகலத்தையும் அசைத்து, சகலத்தையும் அழித்து ஒவ்வொரு படிநிலையாக, முழுமையை நோக்கி முன்னேறிச் செல்கிறது. இன்னோர் அர்த்தத்தில் வரலாறு என்பது இறைவனின் பிரபஞ்ச நாடகம்.

பூமியிலும் இந்த நடனம் அரங்கேறுகிறது.

மனித நாகரிகங்கள் தோன்றுகின்றன. சாம்ராஜ்யங்கள் எழுகின்றன. மனித பண்பாட்டு மறுமலர்ச்சி யுகங்கள் பிறக்கின்றன. இவை தோன்றி, வளர்ந்து, மடிந்து போக புதிய நாகரிகங்கள், புதிய சாம்ராஜ்யங்கள், புதிய பண்பாட்டு யுகங்கள் தோன்றுகின்றன. இந்த பிறப்பு, இறப்பு, அழிவு என்ற அசைவியக்கத்தின் ஊடாக மானிட மனமானது முரண்பாடுகள் களையப்பெற்ற முழு நிறைவை நோக்கி நகர்கிறது. சட உலகின் சாரமாக ஈர்ப்பு சக்தி இருப்பது போல ஆன்ம உலகின் சாராம்ச சக்தியாக விடுதலையுணர்வு இயங்குகிறது. எனவே வரலாறு என்பது ஆன்மத்தின் விடுதலை நோக்கிய நகர்வு (History is the movement of the spirit towards freedom) என்கிறார் ஹேகல்.

மெல்ல மெல்ல மானிடப் பிரக்ஞை விழிப்பு நிலை பெறுகிறது. விடுதலை பற்றிய சுயவுணர்வு கொள்கிறது. தளைகளை நீக்கி விடுதலையைப் பெற முனைகிறது. ஆதி நாகரிகங்களில் அனைத்து அதிகாரமும் கொண்ட அரசனே சுதந்திர புருஷனாக விளங்கினான். மற்றெல்லோரும் அவனுக்குக் கீழ் அடிமைகளாக உழன்றனர். காலப் போக்கில் புதிய நாகரிகங்கள், புதிய பண்பாட்டு உலகங்கள் தோன்றி, விடுதலையின் விழிப்புணர்வை மனிதரிடையே வளர்த்தன. வேதங்களாக, தத்துவங்களாக, கலை இலக்கிய வடிவங்களாக, சமூகச் சிந்தனைகளாக, அரசியற் கோட்பாடுகளாக, காலத்திற்குக் காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டுக் கோலங்கள் விடுதலையின் விழிப்புணர்வை விரிவுபடுத்தின. போர், புரட்சி, கிளர்ச்சி என்று மனிதர்கள் விடுதலை வேண்டி எழுச்சி கொண்டனர். இவ்விதம் விடுதலையின் தேடுதலாக மனித வரலாறு நகர்கிறது. இந்த வரலாற்று நகர்வு, யுகங்களை விழுங்கிய நீண்ட பயணமாகத் தொடர்கிறது. இந்தப் பெரும் பயணத்தில், முடிவில்லாது தொடரும் இந்த ஆன்மீக யாத்திரையில், கோடானு கோடி மனிதர்களின், கோடானு கோடி சுயசரிதச் சுவடுகளை உள்வாங்கி வரலாற்று இயக்கம் அசைந்து செல்கிறது.

பிரபஞ்ச பேரான்மாகவாவும், பூவுலக ஜீவான்மாவாகவும், கடவுளாகவும், மனிதனாகவும், ஒன்றோடு ஒன்று சங்கமிக்கும் முழுமையாகவும், சகலதாகவும், சர்வ வியாபகம் கொண்டு பிரம்மன் நடத்தும் திருக்கூத்துப் பற்றி உபநிடதம் படித்தவர்களுக்கு ஹேகலின் வரலாற்றுக் கடவுளைப் புரிந்து கொள்வது சிரமமாக இருக்காது. இந்தப் பிரபஞ்ச பேரான்மாவின் சுயசரிதமாகவே மனித வரலாற்றை எழுதுகிறார் ஹேகல்.

எங்கோ, மனித புலன்களுக்குப் புலப்படாத மறுஉலகிலிருந்து மனித வாழ்க்கை நிச்சயமாகிறது. அண்டம் அளாவிய ஒரு பெரும் தெய்வீகத் திட்டத்தை நிறைவு செய்ய நாம் எல்லோரும் இந்தப் பூவுலக யாத்திரையில் வந்து செல்கிறோம். எமது தனிப்பட்ட வாழ்வும், வரலாறும் ஏதோ ஓர் அர்த்தத்தில், ஏதோ ஒரு நோக்கில், ஏதோ ஒரு காரணத்தில் நெறிக்கப்படுகிறது. அது எமக்குப் புலப்படுவதில்லை. நாம் எமது வாழ்க்கைக்கு கொடுக்கும் அர்த்தங்கள் எல்லாம் அர்த்தமற்றவை. எமது வாழ்க்கையின் அர்த்தத்தை நாம் கண்டு கொள்ள முடியாது. அது பிரபஞ்ச முழுமையின் தரிசனத்தில் மட்டும் ஒளிந்து கிடக்கிறது. அந்த பிரபஞ்ச முழுமையின் தரிசனத்தில் மட்டுமே அதன் உண்மை புலனாகும். முழுமை பெறாத நிலையில், பூரணமற்ற தன்மையில் இருப்பின் இரகசியத்தை நாம் புரிந்து கொள்ள முடியாது. எமக்குப் பின்னாலிருந்து ஏதோ அசைக்க நாம் அசைபடுகிறோம். மனிதப் பொம்மைகளாக நாம் பொம்மலாட்டம் ஆடுகிறோம். சிந்தித்துச் செயல்படுவதாக நாம் எண்ணிக் கொள்வது எல்லாம் அபத்தமானது. வரலாற்றின் அரூப கரங்களால் நகர்த்தப்படும் பகடைக் காய்கள் நாம்.

## மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம் 1

**எல்லாக் காலங்களிலும், எல்லா மக்கள் சமூகங்களாலும் பெறப்பட்ட உலகானுபவத்தை உள்வாங்கியபடி ஒரு சீரான அசைவியக்கமாக மானிடத்தை ஓர் உன்னத படிநிலை வளர்ச்சிக்கு நகர்த்திச் செல்வதே வரலாறாகும்.**

அமைதியும், ஆனந்தமும், ஒழுங்கும் ஒத்திசைவும் நிறைந்த பொற்காலங்களை வரலாறு படைப்பதில்லை. அது உலக வரலாற்று ஏட்டின் வெற்றுப் பக்கங்களாகவே இருக்கும் என்கிறார் ஹேகல். முரண்பாடும், மோதலும், சாவும் அழிவும் நிறைந்த துன்பியல் நாடகமாக வரலாறு இந்தப் பூமியில் அரங்கேறுகிறது. மானிடம் இரத்தம் சிந்தியபடி சிலுவையைச் சுமந்து செல்கிறது. பூரணத்துவம் நோக்கிய பாதையில் மனிதன் இரத்த ஆறுகளைக் கடந்து செல்ல வேண்டும். மனித வாழ்வை, வரலாறு அப்படி விதித்திருக்கிறது. ஒரு சிலர், வரலாற்றினால் அபூர்வமாக தேர்ந்தெடுக்கப்படும் சிலர், வரலாற்று நாயகர்களாகப் பிறப்பெடுக்கின்றனர். அந்த உலக வரலாற்று நாயகர்கள் (world historical beings) வரலாறு விதித்த பணிக்காக அவதாரம் எடுக்கிறார்கள். அவர்கள் மூலம், வரலாறானது தனது நோக்குகளை தந்திரமாக, நுட்பமாக சாதித்து விடுகிறது. மகா அலெக்சாந்தர் தொடக்கம் நெப்போலியன் வரை யுகம் யுகமாக வரலாற்று மனிதர்கள் தோன்றி, வரலாற்றை நகர்த்திச் செல்ல வரலாறு விதிசெய்திருக்கிறது என்கிறார் ஹேகல்.

(அடுத்தவாரம் வளரும்..)

# அன்பைத் தேடி..

பருவ்கால விடுமுறை முடிந்து பாடசாலை இன்று தொடங்குகிறது. விடுமுறை காலத்தில் ஓய்வு என்று சொல்லிக் கொண்டு அங்குமிங்கும் அலைந்து திரிந்து அலுப்படைந்த எனக்கு பாடசாலை தொடங்கப்போவது மனதுக்கு ஒருவித ஆறுதலையும், ஆசிரியர், மாணவர்களைச் சந்திக்கப்போகும் ஆவலையும் தூண்டி விட்டிருந்தது.....

இரவுமுழுக்க தூங்காது எப்ப விடியும், விடியுமென்று காத்திருந்ததால் கண் சோர்ந்து, விடியும் நேரத்தில் நான் அயர்ந்து தூங்கிவிட்டேன்....

நித்திரைவிட்டெழுந்து நேரத்தைப் பார்த்தபோது எனக்கு தூக்கிவாரிப்போட்டது, நேரம் ஏழு மணியாகிவிட்டது.... ஒரு மணித்தியாலத்துக்குள் பாடசாலையில் நிற்கவேண்டும், பாடசாலை தொடங்கும் ஆரம்பநாளில் பிந்திச்செல்வது எனக்கு சங்கடமாகத் தெரிந்தது. விரைவாகக் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு அரக்கப்பரக்க வெளிக்கிட்டு பாடசாலை போனபோது நேரம் 8மணி... நான் போய்ச்சேரவும் பாடசாலை மணி அடிக்கவும் சரியாக இருந்தது...

''என்ன இளந்திரையன் மாஸ்ரர் நல்லாக் கறுத்தும் மெலிஞ்சும் போனியள்'' அதிபர் சவரிப்பிள்ளையின் கேள்வி என்னைத் தடுத்து நிறுத்த.....

''இல்லை சேர்; இம்முறை ஒரே அலைச்சல், வீட்டுவேலைகளும், பொது வேலைகளும்''

''எல்லாருக்கும் தானே மாஸ்ரர் அலைச்சல். காலம்முழுவதும் அலைஞ்ச எங்கடை இனம், இப்ப சுனாமியாலையும் அலையுது''

அதிபரின் கருத்து என்மனதை ஆக்கிரமிக்க, ''அதுதான் சேர் தமிழரின்ரை சாபக்கேடு'' என்று சொல்லிக் கொண்டு மோட்டார்சைக்கிளை ஸ்ராண்ட் போட்டு நிறுத்தினேன்.

''மாஸ்ரர் நான் அலுவலகத்துக்குப் போறன். நீங்கள் வகுப்பறைகளைப் பார்த்துவிட்டு வாங்கோ, எல்லாரும் ஒன்று கூடிச் சிலவிடயங்கள் கதைக்கவேணும்''

அதிபர் இடத்தைவிட்டுச் சென்றார்.....

வகுப்பறை செல்லும் வழியில் பல புது முகங்கள் தென்பட்டார்கள். அதில் பத்துவயது மதிக்கத்தக்க மாணவன் ஒருவன் என்னையே பார்த்துக்கொண்டு நின்றான். அவன் என்னைப் பார்த்தபார்வை என் இதயத்தை ஏதோ செய்தது. ஏன் அப்படிப்பார்த்தான்? நினைவு தொடர வகுப்பறைக்குச் சென்றேன்....

'இன்றைக்கு வகுப்பறைகளை ஒழுங்கு செய்யவேணும், பாடம் நடைபெறாது. உயர்தரவகுப்பு மாணவர்களுடன் சேர்ந்து வகுப்பறைகளை ஒழுங்கு செய்யவேண்டும்.' என் மனம் ஒரு நிலையில் இல்லாது தவித்துக்கொண்டிருந்தது.

அந்த மாணவனின் பார்வை, என் கண்வழியே புகுந்து, இதயத்தில் பதிந்தது. அந்த வேதனைப்பார்வை.... என் உள்ளத்தில் நிறைந்து என்னை அடிக்கடி சஞ்சலப்படுத்திக் கொண்டிருந்தது.

அந்தக் கண்கள் சொல்ல நினைத்த கதைதான் என்ன? அந்தப்பார்வையின் ஏக்கம்தான் என்ன? என்னால் அந்தப்பார்வையை மறக்க முடியவில்லை. எனக்கு புரியாத புதிராக இருந்தது. நான் மத்தியானம் சாப்பிடவில்லை. கன்ரீனில் தேநீர் குடித்துவிட்டு மற்றைய கடமைகளை மேற்கொண்டேன். கடமைகளினூடே அந்த மாணவனின் ஏக்கம் நிறைந்த பார்வை மேலோங்கி நின்றது. பாடசாலைவிட்டு வீடு திரும்பும்போது அந்த மாணவன் எதிரே வந்தான். நான் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே வர அவன் என் மோட்டார் சைக்கிளைப்பிடித்துக்கொண்டு பின்னால் வந்தான்.... சோகம் நிறைந்த ஏக்கப்பார்வையுடன்....

''தம்பி இண்டைக்குத்தான் சேர்ந்தனீரோ?''

''ஓம் சேர்....''

''உமக்கு என்ன பெயர்?''

''அற்புதன்''

''எத்தனையாம் வகுப்பு''


''ஐந்து'' அவன் ஒரே சொல்லில் பதில் சொன்னான்.

அவன் முகத்தைப்போல, கண்களைப் போல, குரலிலும் உற்சாகமில்லை... வேதனையின் சாயல் தெரிந்தது.

''சரி நான் போய்விட்டுவாறன்....'' சொல்லியபடியே மோட்டார் சைக்கிளை 'ஸ்ராட்' செய்து புறப்பட்டேன். அவன் பதில் சொல்லவில்லை. வேண்டாவெறுப்பாக தலையை மட்டும் ஆட்டினான்.

அவன் என்னுடன் ஒட்டி உறவாட விரும்புவது எனக்குப்புரிந்தது. அதுதான் ஏனென்று எனக்குப் புரியவில்லை. அவன் ஏதோ கதைப்பதும், சோகமாகச் சிரிப்பதும், என் பின்னால் வருவதும்......, அவன் என்னிடம் என்ன எதிர்ப்பார்க்கிறான்? அவனை நேரடியாகக் கேட்க வேணுமென்ற எண்ணத்திலை மறுநாள் பாடசாலைக்கு வந்த எனக்கு ஏமாற்றமாய் இருந்தது.

அவன் அன்று பாடசாலை வரவில்லை. தொடர்ந்து மூன்றுநாட்களும் பாடசாலைக்கு வரவில்லை. மூன்றுநாட்களும் எனக்கு மூன்று யுகங்கள் போல கடந்தன. அவனின் சோகம் நிறைந்த அந்தக்கண்கள் அடிக்கடி வந்து



என்மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தின....

சரி திங்கட்கிழமை பாடசாலைக்கு வருவான் என்ற நம்பிக்கையுடன் அன்றைய பொழுதைக் கழித்த நான் கனத்த மனதுடன் வீட்டுக்குச் சென்றால் அங்கும் அவன் நினைவுதான் என்னைவாட்டியது... இரவு விடியாதா விடியாதா என்றிருந்த எனக்கு பொழுது ஒருவாறு விடிந்தது...

பொழுது நந்தைபோல் நகருவதாக என் அவசர போக்குக் காட்டியது. அந்தளவுக்கு அவனைப்பற்றி அறிய என்மனம் அவசரப்பட்டது.

பாடசாலையில் அவனை எதிர்பார்த்துச் சென்ற எனக்கு அவனை நேரில் கண்ட போது – மலர்ச்சி ஏற்பட்டது... அவனும் எதிர்பார்த்துக் கொண்டுதான் நின்றான் ஏக்கப்பார்வையுடன்.

''என்ன தம்பி போனகிழமை பாடசாலைக்கு வரவில்லை?''

''ஓம் சேர்! மாமாவோட.....'' அதற்குமேல் அவன் ஒன்றும் கூறவில்லை....

என் கையைப் பிடித்துக்கொண்டு வந்தான்...

இவன் என்னிடம் என்ன எதிர்பார்க்கிறான்? இவன் யார்? ஏதாவது உதவி இவனுக்குச் செய்யவேண்டும், உறுதியான முடிவுடன் நான் வகுப்பறை நோக்கிச் சென்றபோதும் அவன் என் கையைப் பிடித்துக் கொண்டு வந்தான். அதை ஆசிரியர், மாணவர்கள்கூட விசித்திரமாகப் பார்த்தனர்.

அவனைப்பற்றி அறியவேண்டுமென்பதில் அக்கறையாக இருந்தேன்....

''தம்பி உம்முடைய ஊர் எது?''

''அம்பாந்தோட்டை...''

''அம்மா அப்பாவின்ரை பெயர் என்ன?'' கேட்டவுடன் அவன் ஓவென்று பெருங்குரலெடுத்து அழத் தொடங்கிவிட்டான். நான் சங்கடமான நிலையில் அவன் அழுகையை நிறுத்த முயன்றேன்.

அவன் அழுவதை சக ஆசிரியர், மாணவர்கள் எட்டிப் பார்த்தனர்.

நான் ஏதாவது தவறாகப் பேசிவிட்டேனா? ''தம்பி அழாதையும், அற்புதன் ஏன் அழுகிறீர்?'' அழுகையை நிறுத்தும். நான் கேட்டது தப்பா?

''சரி நான் இனி ஒன்றும் கேட்கமாட்டன், நீர் அழவேண்டாம்''

அவன் அழுவதை நிறுத்தவில்லை. விம்மிக்கொண்டிருந்தான். நானும் சங்கடத்திலிருந்து மீளவில்லை... அவனை அதிபரிடம்கூட்டிச்சென்று நடந்தவைகளைச் சொன்னேன்.

அதிபர் சொன்னகதை என் நாற்பது வருட வரலாற்றில் புரியாத பல பாடங்களை புகட்டி விட்டது. இதுதான் கதை.

சரவணன், அற்புதனின் அப்பா. அம்பாந்தோட்டையில் பெரிய முதலாளி! வர்த்தக நிறுவனங்கள், வள்ளங்கள், படகுகள் கொண்டு தொழில் செய்விப்பவர். பரம்பரை பரம்பரையாக அம்பாந்தோட்டையில் வாழ்ந்து அந்த நகரை வளம்படுத்தியதில் பெரும்பங்கு வகித்தவர். அந்தப் பிரதேசத்தில் அரைவாசிச் சொத்தும் அவருடையதே.

பல எடுபிடியாட்கள். முந்நூறுக்கு மேலான சிங்களக் குடும்பங்கள் அவர் தயவில் வாழ்ந்தன. அந்தளவிற்கு வசதியும் செல்வாக்கும் அவருக்கிருந்தது.

தான் தமிழனென்று சொல்லக்கூட அவரைக் கௌரவம் தடுத்தது. அரசியல்வாதிகள், அரச உத்தியோகத்தர்கள் அவரிடம் உதவிபெற்று தோழமை கொண்டிருந்தனர்.... பௌத்த விகாரைகளும் கட்டிக் கொடுத்திருக்கிறார்.... இந்தளவு செல்வாக்கு உள்ளவர்.

அம்பாந்தோட்டையை சுனாமி தாக்கியபோது தமிழனென்ற காரணத்தால் அவரின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன இறந்த மனைவி தேவியின் உடலில் இருந்த நகைகளைக் கூட சடலத்துக்குச் சொந்தங் கொண்டாடி காட்டுமிராண்டிகள், காடையர்கள் அறுத்தபோது இராணுவம் காடையர்களுக்கு உதவியது.

சரவணன் எவ்வளவு கெஞ்சியும் அவனின் நண்பர்கள் பாராமுகமாக இருந்த காட்சி அவரை பாதித்துவிட்டது...

பிள்ளை அற்புதனைக் கூட்டிக் கொண்டு பொலிஸில் முறைப்பாடு கொடுக்கச் சென்றார்.

அவர்களும் முறைப்பாட்டை ஏற்கவில்லை. சொத்தழிவுக்குப் பதியச் சென்றார். சுனாமி நிதி சிங்கள மக்களுக்குத் தான். காணியும் வீடும் அவர்களுக்குத் தான் என்று சொல்லப்பட்டது.

''நீங்கள் புலிகளிட்டைப் போங்கோ... இங்கை உங்களுக்கு ஒண்டுமில்லை...'' அதிகாரிகள் சரவணனை ஆள் வைத்து விரட்டினார்கள். அவரின் மூளை பாதிக்கப்பட்டதால் பிதற்றத்தொடங்கினார்.

''நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன.. என்னட்டை வாங்கித் திண்டுவிட்டு காட்டிவிட்டாங்களே தங்கடை குணத்தை.. நாம் ஏமாந்து போனோம்.

காலம் காலமாய் எங்களிடம் அடிமைத்தொழில் செய்து பிழைத்தவங்கள் நீங்கள்...

மாத்தயா, மாத்தயா என்று எங்களது காலிலை விழுந்தவர்கள் நீங்கள்...

மீனுக்கும், கருவாட்டுக்கும், புகையிலைக்கும், சுருட்டுக்கும் பின்னாலை திரிந்தவர்கள் நீங்கள்.... பனாட்டையும், பனங்கிழங்கையும் கண்டு நாக்கு நீட்டிப் போட்டு..... இன்றைக்குத் தமிழர்கள் நாடற்றவர்கள், அகதிகள், அநாதைகள் என்று எங்களையே விரட்டுகின்றீர்களா? என்ரை வள்ளத்திலை மீன் பொறுக்கி சீவிச்ச நீங்கள்.... இப்ப என்னையே விரட்டுகின்றீர்களா? பரம்பரை பரம்பரையா நாங்கள் வாழ்ந்த நிலங்களிலே குடியேற்றப்பட்ட நீங்கள், சந்தர்ப்பம் பார்த்து எங்களை விரட்டுகின்றீர்கள்.

என்ரை பரம்பரை காசுக்கு வாங்கி வாழ்ந்த இடத்தை விட்டா துரத்துகிறீர்கள்.

உங்களுக்கு சோறு போட்ட கையடா இது? உங்களை ஆட்சியிலை அமர்த்த கோடி கோடியாகச் செலவழித்த நாங்கள்.... நாங்கள்விட்ட பிழை எங்கடை தாயகத்துக்கு உழைக்காது உங்களை வாழவைத்ததுதான். கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போலை எல்லாத்தையும் உங்களிட்டை கொட்டிப்போட்டு வெறுங்கையோடு போறன்.. எங்கள் முன்னோர் செய்த தவறும் இதுதான். ஈரமண்ணும் சுட்டமண்ணும் ஒட்டாது... இதை உலகம் இன்று புரிந்துவிட்டது.''

**ஏழுமலை மூவேந்தன்**

அவருக்கு பைத்தியம் பிடித்து தற்போது வைத்தியசாலை மனநோயாளர் பிரிவில். மகன் அற்புதன் தாய்மாமன் வீட்டில், வன்னியில்.

தாயை இழந்து, தந்தையின் பாதிப்பால் அன்புக்கு ஏங்குகிறான் அற்புதன். வசதியாக வளர்க்கப்பட்டவன். இப்ப.. சரவணனைப் பார்க்க வேண்டும். அவனுக்கு உதவவேண்டும். அன்பைத் தேடும் அற்புதனின் எதிர்காலத்துக்காகப் பாடுபட வேண்டும்.


அதிபரிடம் விடைபெற்று அற்புதனையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு தெளிந்த உறுதியான முடிவுடன் அற்புதனின் மாமா வீட்டுக்குப் புறப்பட்டேன்.

(யாவும் கற்பனை)


வத்தளை

ஹெலகந்தை

Hope Residencies WATTALA




Prime Home குடிமனைகள் இப்போது விற்பனைக்கு உண்டு

මිහිකතෙන් හොඳම තැනක්.

PRIME LANDS (PVT) LTD.

75, D. S. Senanayake Mawatha, Borella.

Tel: 2665744, 2665745 E-mail: info@primelands.lk

Web: primelands.lk 0777 756013

## சித்திரை என்ன செய்வாள்?

மார்கழி மலர்ந்து – மறையவன் யேசு
மண்ணிலே உதித்த
மாசிலா நாளின்
ஆர்வம் கழியுமுன் ஆழிப்பேரலை
ஆடிய சன்னதம்! மானுடம் அசைந்தது.

ஏர்முனை உயரும் திருநாள் எனவே
ஏற்றமாம் தையதும் இப்புவி வந்தது!
பாரெல்லாம் பஞ்சம் பறந்திடும் என்ற
பழைமையும் கூட பொய்த்தது இப்போ

சுனாமியின் சுடுதுயர் தன்னையும் மீறி
சுமைகளின் அழுத்தம் மனிதரை வதைத்திட
கனாவின் இனிமைகள் கானலாய் மாறிட
கண்ணீரோ இமைகளிற் காய்ந்திடவில்லை!

நெஞ்சம் தணலாய் எரிந்திடும் போது – அற்ப
நிவாரணம் என்ன செய்திடும் இங்கே!
வஞ்சகப் பதர்கள் மலிந்த இவ்வையம்,
மானுடச் சுனாமிகள் மறையும் நாள் என்றோ!

சித்திரைச் செல்வியும் செவ்விதழ் விரித்தனள் – அது
சிந்தையின் துயரினைத் தீர்த்திடும் மருந்தோ
இத்தரை மாந்தரின் இதயமும் மலருமோ!
இலங்கையின் மண்ணிலே சமாதானம் விடியுமோ!

**சண்பகக்கவி ச.சிதரன்,**
**முறக்கொட்டான்சேனை.**

## கருகிய காதல்

மொட்டவிழ்ந்த மலராய்
வனப்புடன் நானிருக்க
வாலிபன் நீயென்னை
வாஞ்சையுடன் சுற்றிவந்தாய்.
இனவெறியின் அச்சுறுத்தல் – அப்போ
பிரிவு எனும் வேதனையில்
நான் – கண்மூடி அழுதிருக்க
சமாதானபுறா வந்து
என் கதவை தட்டியது
நெஞ்சில் நிறைந்த காதல் தன்னை
உன்னுடன் பகிர்ந்து ஊரெல்லாம் சுற்ற
ஓடிவந்தேன், தேடியுன்னை
முகமாலை முகாமை கடந்தேன் நான் –
அப்போது
சந்தோஷவானிலே நான் சிறகடித்துப்
பறந்தேனே.
உன் வீடு நோக்கி ஓடி வந்த என்னை
குருதிபாயக் குண்டொன்று துளைத்தது
இத்தனை துயரையும் தாங்கிய என்னை
இதயவானத்துவெகுமதிஎன்றாய்–இன்றோ
வேறொரு பெண்ணுடன் உனது வாழ்க்கை
ஆமாம் அவளே உன் அன்புள்ள மனைவி
காலம் ஒருநாள் முகாரி பாடும்
முட்டாளே உன் முடிவை எண்ணி

**க.கார்த்தி, நாகபடுவான்.**

## ஆடவனே கேள்!

பொன்னை நாடாது – நல்ல
பெண்ணைத் தேடு!

பணத்தைக் கேட்காது
குணத்தைக் கேள்!

பொன் நகையை விரும்பாது
புன்னகையை விரும்பு!

லட்சங்கள் கேளாது
இலட்சியம் கொண்டிடு!

உன்னை நம்பி வருபவளுக்கு
மஞ்சத்துக்கு முன்
நெஞ்சத்திலே இடம் கொடு!!

**ஏ.சசிரேகா, மல்லாவி.**

## தேடல்

நினைக்கவில்லை
உன்
அமைதிக்குள்
மறைந்திருப்பது
பெண்மையை
மாசுபடுத்தும்
நச்சுக் காற்றென்று

தேடித் தேடி வந்து
உரையாடிய
போதெல்லாம்
இனிமையாகத்தான்
இருந்தது
இந்த முட்டாளுக்கு

உன்னோடு பேசியபின்
என்
விடியல்கள் இருந்தன
அலுவலகத்தில்
உன்
முகம்காண்பதற்காக

தெரியாமல் போயிற்று
முதலிலேயே
இன்னொரு ஜீவனும்
உன் முகம் காண வந்து
கணக்கெழுதுகிறாள்
என்று

நீ
இயந்திரங்களுக்குள்
பதுங்கும் பொழுதுகளில்
நினைப்பேன்
உன் தேடல்கள்
என்னவென்று?

இப்போது புரிகின்றது.
நான்
தொழில் புரியும்
காட்டுக்குள்
நீயொரு
வேடுவனென்று

நிறைய பெண்களுடன்
விளையாடுவாயாமே
ஏன்
உன் உடன்பிறப்புக்கள்
பெண்களில்லையா?
உன்தாயில்
பெண்மையில்லையா?

உன் மீது கோபமில்லை
நீ
ரசிக்கக் கூடிய
மனிதமிருகம்

**பிரம்மவாதினி,**
**கண்டி.**

## மலர்

காலையில் பூத்து
கண்ணைக் கவர்ந்து
மாலை வேளையில் மறைந்திடும்
அந்த செண்பகப் பூவைப்போல்
காலையில் உன் முகம் கண்டபின்
மாலைவரை நான் காத்திருந்தும்
நீ மறைந்திடும் மர்மம் என்ன
பெண்ணே.

**தனபால் விஜயகாந்,**
**கொனன்லிந்துல.**

## நிழல் அல்ல நிஜம்

கல்வியில்
தோற்றுப்
போனதால்
மூலையில்
முடங்குகின்றது
இவள் அறிவு.
இருந்தும்
மறுகல்வி
தொடர்வதற்கு
வேறுவழி
தேடியபோது
அதிலும் ஏனோ
தோல்விகளே!
கல்வி எனும்
கடலை – தகுந்த
நேரத்தில்
கடக்க
முடியாதபோது
இடிபட்ட
மனதோடு
உடைபட்ட
நினைவுக்குள்
அடிபட்டு
உறங்கும்
இவள் காலங்கள்
வசந்தமாக மலர்வது
எப்போ!
அன்பு கொள்ள
உறவுகள் பல
இருந்தும்
அவர்கள் – தம்
தகுதிக்கேற்ப
வேலைதேடி
பல்வேறு திசைகளில்
இவளுக்கோ
இளமை
இருந்தும்
வாழ்க்கையில்
இனிமை இல்லை
விரிந்த
உலகுக்குள்
சுருங்கி
கிடக்கின்றாள்.
தன்னை
நேசித்தவர்களை
நேசிக்க
மறுத்தவள்
இப்போ நேசிப்பது
கல்லறையைமட்டுமே

**வெ.தீபப்ரியா,**
**115,ஆனைவிழுந்தான்.**

## இழப்பு

ஆணழகன் நானில்லை
ஏனடி பெண்ணே நீ
என் இதயத்தை
கொள்ளை கொண்டாய்
கள்ளம் கபடமற்ற
கனிபோன்ற என்
மனத்தை
காதலால் திறந்தவள் நீ
திறந்த மனம்
காத்திருக்க
என் முன்னே ஏன் வந்தாய்
உன் புதிய காதலனுடன்

**தெ.கர்ணன்,**
**விஸ்வமடு.**

## கல்லறை

வாழ்ந்து மடிந்த பின்னும்
வாழ விரும்பும்
மானிடர்க்கு
பரந்த மண்மீது ஒரு
சிறந்த மனை.

**கோபுஜி, தம்பிலுவில் 02.**

## காலம்

சலனமற்ற என் நதியின்
சல சலப்பு நீயாக – இன்று
சாக்கடையாய்
மாற்றிவிட்டாய்

**செ.கின்னி,விசுவமடு.**

## நீதான் என் செல்வம்

என்னுயிர் ஜீவனே!
உன்னைப்
பார்த்த நாள் முதலாய்
நான்
உனக்காகவே
வாழ்கிறேன்.
உண்ணும் போதும்
உறங்கும் போதும்
உன்னை எண்ணாத
நாட்களில்லை
உணர்வுகளில்
என்றும் உன்
நினைவுகளே
உயிர்ப்பாயுள்ள
ஒரு நிமிடமேனும்
உன்னையென்னால்
பிரிந்திருக்க
முடியவில்லை.
உன் சத்தம்
கேட்காமல் – என்
காலை விடிவதில்லை
வஞ்சமான
சொந்தங்களால்
வாடிப்போன
நெஞ்சத்தை
உன் பஞ்சுமேனி
வருடும்போது
சந்தோசம்
கொஞ்சம்
பிறக்குதடா
மௌனமாய் நீ
பேசும் பாஷையில்
தான் பிறக்கின்றன –
என்
புதுக்கவிதைகள்!
விளையாட்டாய்
நீ கிள்ளும்போது
எத்தனை
கற்பனைகள்
எனக்குள்ளே...
ஏய். என்வீட்டுக்
குட்டிப்பூனையே!
உயிருள்ளவரை
நீதான் என் செல்லம்.

**யஸ்மினா.**

## வாழ்ந்து காட்டுவோம் வா அன்பே....

காதலித்து பெற்றோரை எதிர்த்து
கல்யாணம் முடித்து
பெற்றோர் முன்னால்!
வாழ்ந்து காட்டுவோம்
அன்பே வா

உறவினர் உதவி தேவையில்லை
அயலவர் அன்பையும் கேட்கவில்லை
நண்பர்கள் துணையிருக்க
நமக்கென்ன பயம்!
நலமாய் நாங்கள்
பெற்றோர் முன்னால்
வாழ்ந்து காட்டுவோம்
அன்பே வா.

பெற்றோரின் பாசமெல்லாம்
நிரந்தரமாய் நிலைப்பதில்லை
அவரது சாபமெல்லாம்
சாவை எமக்குத் தருவதில்லை – அவர்கள்
பேசித்தரும் மாப்பிள்ளைகள்
காலமெல்லாம் உன்னைக் கண்ணாகப்
பார்ப்பரோ
பெற்றோர்கள் முன்னால் நாம்
வாழ்ந்து காட்டுவோம்
அன்பே வா

காதலர்கள் பிரிவதில்லை
இல்லறமே நல்லறமாய்
வாழ்வதுதான் அவர் வாழ்க்கை – அதனால்
ஓடிவா காதலியே
ஊர் மெச்ச பெற்றோர் பெருமையுற
வாழ்ந்து காட்டுவோம் – வாழ்வில்
ஜெயித்துக் காட்டுவோம்
அன்பேவா.

**எஸ்.பி.லக்குணா, வட்டக்கச்சி.**

## புரியுமா?

விடியுது இல்லையே
வெளியாகி ஊரின் நிலை அறிய
தப்புச் செய்யாமல்
என்னுகிறோம் – கம்பி
நள்ளிரவில் சேவல் கூவும்.
அதிகாலையில் பறவைகள் கத்தும்.
இங்கு விடியும் வேளையில் கேட்கும்
சாவிக் கொத்தோசை
சாவியுடன் ஆறு மணிக்கு
வருவார்கள் அதியாயக்காரர்கள்.
ஆமாம் அவர்கள் தான்
சிறைக் காவலர்கள்
வேதனையிலும் வேதனை
யாருக்குப் புரியும்
எம் நிலைமை!

**நிலாவனை, ம.புவியரசு,**
**களுத்துறை சிறைச்சாலை.**

## காரணம் இதுவோ?

காற்றே! உந்தன்
கலகல ஓசை
அழகிய மெல்லிய
கீதமல்லோ...

வாயின்றிப் பேசும்
உயிரின்றி வாழும்
உருவேயில்லா உறவும்
நீயல்லவோ...

ஒவ்வொரு உயிருக்கும்
உதவும் உனக்கு
உயிரின்றிப் போனது
ஏனோ...?

உயிருடன் நீயும்
உலவிட வந்தால் –
வாழ்வினில்
கலையின்றிப் போகும்
என்றோ...!

**ஜுமானா ஜுனைட்,**
**ஏ.என்.சி.டி.ஈ**

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

* 1945ஆம் ஆண்டு 3000 பவுண்டுகள் மதிப்புள்ள தங்கக் கட்டிகள் ஜெர்மன் 'ரீச்' வங்கியிலிருந்து திருடப்பட்டன. இந்த 'ரீச்' வங்கிதான் ஜெர்மனியின் தேசியவங்கி என்பது குறிப்பிடத்தக்கது. உலகத்தில் இதுவரை நடந்த திருட்டுகளில் இதுதான் மிகப்பெரிய திருட்டு.

* பிரிட்டிஷ் ஜேனல் ஒப் ஒப்தலமோலஜி (British Journal of Optholomology) என்ற பத்திரிகையில் வெளியாகியிருக்கும் தகவலின்படி டை கட்டுவது கண்களைப் பாதிக்கிறதாம். இதுபற்றி அந்தப்பத்திரிகை இப்படிக் கூறுகிறது.

"டையை கழுத்தில் இறுகக் கட்டுவதால் கண்களுக்குள் செல்லும் இரத்தத்தின் அழுத்தம் பாதிக்கப்படுகிறது. அதன் காரணமாய் குளுகோமா (Glucoma) என்ற கண்வியாதி பற்றிக்கொள்கிறது. அதனால் கண் நரம்புகள் பாதிக்கப்பட்டு பார்வையை இழக்கவேண்டிய ஆபத்து ஏற்படலாம்.

"ஆரோக்கியம் நன்றாக உள்ள இருபது ஆண்களையும் குளுகோமா என்ற கண்வியாதியால் பாதிக்கப்பட்ட இருபது ஆண்களையும் அவர்களின் காலரைத் திறந்துவிட்டு பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

அதன்பின் அவர்களை 'டை'யைக் கட்டச் சொன்னார்கள். மூன்று நிமிடங்களுக்குப்பின்னர் அவர்களின் கண்களில் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்தார்கள்.

ஆரோக்கியமாக இருந்தவர்களது இரத்த அழுத்தம் இரண்டு மில்லிமீட்டராகவும் குளுகோமா உடையவர்களின் இரத்த அழுத்தம் நான்கு மில்லி மீட்டராகவும் இருப்பதை மேர்க்கூறி பாதரசம் காட்டியது. அதாவது குளுகோமா உடையவர்களின் இரத்தம் அதிகளவு உயர்ந்திருப்பது தெரிந்தது.

இறுதியில் அந்தப் பரிசோதனையின் முடிவு என்ன வென்றால் பெரிய கழுத்து உள்ளவர்களும் தினமும் டை இறுக்கமாக கட்டுபவர்களும் 'குளுகோமா' என்ற கண்வியாதியால் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஆகவே 'டை'யை அதிகம் இறுக்கிக் கட்டாமல், சற்றுத் தளர்த்திக் கட்டுவதே குளுகோமா வியாதியால் பாதிக்கப்படாமல் எம்மை பாதுகாத்துக் கொள்ள வழி. வெளிப்பார்வையை விடக் கண்பார்வைதானே முக்கியம்.

* ஃபோர்ப்ஸ் என்ற பத்திரிகை வருடம் தோறும் உலகில் உள்ள பணக்காரர்களின் பட்டியலை வெளியிட்டுவருகிறது. அப்பத்திரிகை வெளியிட்டுள்ள தகவலின்படி உலகில் மொத்தம் 587 கோடீஸ்வரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் பில்கேட்ஸ் முதலிடத்தை வகிக்கிறார். அவரது சொத்தின் மதிப்பு $ 46 பில்லியன்களாகும்.

* அமெரிக்க வான்வெளி ஆராய்ச்சியாளர்கள் இந்த அண்டத்திலேயே மிகப் பெரிய வைரக்கல்லைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வைரக்கல் 50 ஒளி வருடத்துக்கு அப்பால் வான்வெளியில் ஒரு நட்சத்திரக் கூட்டத்துக்கு நடுவில் சுற்றிக்கொண்டிருப்பதாக தொலைநோக்குக் கருவியினால் பார்த்து உறுதிப்படுத்தியுள்ளனர். இவ்வைரக்கல் உலகிலுள்ள மிகப் பெரிய வைரக்கல்லின் நிறையைவிட பல்லாயிரம் மடங்கு அதிகமானதாம்

* தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகளில் நடைபெறும் பல்வேறு விழாக்கள் தமிழ் நாட்டின் கலாசார விழாக்கள் போலவே அமைந்துள்ளன. குறிப்பாகத் தாய்லாந்தில் 'சோங்கிரான்' எனப்படும் புத்தாண்டுத் திருவிழாவின் போது இளைஞர்களும் யுவதிகளும் ஒருவர் மீது ஒருவர் தண்ணீரைப் பீய்ச்சி அடித்துக்கொள்கின்றார்கள். இது தமிழ் நாட்டுக் கிராமங்களில் கோவில் திருவிழாக்களின்போது மஞ்சள்நீர் தெளிப்பதை நினைவு படுத்துகிறது.

ஒருகாலத்தில் தமிழ் மன்னர்கள் ஆண்ட கம்போடியா நாட்டில் புத்தாண்டு வேறு மாதிரியாகக் கொண்டாடப்படுகிறது. அந்த நாட்டு இளைஞர், யுவதிகள் ஒருவர் முகத்தில் ஒருவர் வண்ண வண்ணப் பொடிகளை தூவிக்கொள்கிறார்கள். இப்படிச் செய்தால் அந்த ஆண்டு முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பது அவர்கள் நம்பிக்கை. இந்தியக் கலண்டர் முறையைப் பின்பற்றியே கம்போடியர்கள் புத்தாண்டு கொண்டாடுகிறார்கள்.

* ஆபிரகாம் லிங்கனின் கால்கள் மிக நீளமானவை. அவரின் நண்பர் ஒருவர் அந்த நீண்ட கால்களைக் கேலி செய்யும் பொருட்டு லிங்கனிடம் "பொதுவாக மனிதனின் கால்கள் எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்?" என்று கேட்டார். "சாதாரணமாக இடுப்பிலிருந்து தரையைத் தொடும் அளவுக்கு இருந்தால் போதும்" என்றார் லிங்கன் நிதானமாக.




## கட்சி வேலைக்கு வழங்கிய சச்சியாரின் வண்டி கிளப் வாசலில்

மலையகத்தின் காவலன் எனக் கூறிக் கொள்ளும் ஆறுமுகசாமி எப்போதுமே தனக்கு விசுவாசமானவர்களை மிகவும் நன்றாகவே கவனிப்பாராம். அண்மைக் காலங்களில் மலையகத்தின் புரட்சி மணியானவர் மிகமிக விசுவாசமாக இருந்தாராம். இதனால் உண்டியல் பணம் கொட்டும் யூனியனின் நிர்வாகப் பொறுப்பையே ஆறுமுகசாமி புரட்சியாரிடம் ஒப்படைத்துவிட்டாராம்.

அதோடு ஆறுமுகசாமியார் திருப்தி அடையவில்லையாம். அதிஉயர் மன்றில் பிரதிநிதியாக இருக்கும் ஊவா ஆனந்தத்தின் வசம் இருந்த ஒரு வாகனத்தையும் வாங்கி புரட்சி மணியாரிடம் கொடுத்துவிட்டாராம்.

ஆனால் புரட்சிமணியாரிடம் கட்சி வேலைக்கு வழங்கப்பட்ட வாகனம் அவரது வாரிசின் உல்லாச போக நாடகங்களின் அரங்கேற்றத்துக்கே பயன்படுத்தப்படுகின்றதாம். தினம் ஒரு கிளப் வாசலில் இந்த வாகனம் காணப்படுகிறதாம்.

ஆறுமுகசாமியினால் கண்டியில் குடி அமர்த்தப்பட்ட புதுமுகமானவருக்கு ஆரம்பம் முதலே புரட்சிமணியாரின் வருகை பிடிக்கவில்லையாம். எதையும் பைசல் செய்வதில் ஆர்வமான கண்டி புதுமுகம் வாகன விவகாரத்தைப் பெரிதுபடுத்தி மண்டியிட வைத்துவிட்டாராம்.

இந்த விடயம் கூட ஒரு கிளப்பில் வைத்துத்தான் பைசல் செய்யப்பட்டதாம். எதையும் நுணுக்கமாக பைசல் செய்வதையே பெயரில் பாதியாக வைத்திருக்கும் புதுமுகம் நைஸாக ஊசி ஏத்திவிட்டாராம்.

போதையில் இருந்த ஆறுமுகசாமியாருக்கும் தொட்டுக் கொள்ள ஊறுகாயாகி கடைசியில் புரட்சி மணியார் பைட்டாகிவிட்டாராம். நிர்வாகப் பொறுப்பும் பறிக்கப்பட்டு விட்டதாம். இப்போது ஊவாவில் ஆனந்தமானவரிடமிருந்து பறித்துக் கொடுத்த வாகனத்தை புரட்சியாரிடமிருந்து பறிக்க திட்டம் வகுக்கப்படுகின்றதாம்.

எல்லா விடங்களையும் பைசல் பண்ணிகொண்டிருந்தவர் இப்போது ஆறுமுகசாமியிடமே ஆழம்பார்க்க ஆரம்பித்துவிட்டாராம்.

சாமியின் கோட்டையில் இருந்து அமைச்சரான முத்தானவரின் விடயங்களில் மூக்கை நுழைக்கின்றாராம்.

முத்தானவரின் அமைச்சின் மூலம் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டால் தமது சமூகத்தவருக்கு சான்ஸ் கிடைக்காது என்பதால், சரஸ்வதியின் கோட்டைக்குள் ஆட்சி செய்யும் தாராவிடம் ஓதிவிட்டாராம். சமயம் பார்த்துக் கொண்டிருந்த தாரா அம்மையாரும் ஆசிரியர் நியமனங்கள் தன்னாலேயே வழங்கப்பட வேண்டும் என அதிஉயர் அம்மணியிடம் அழுங்குப்பிடியாகப் பிடித்துக் கொண்டாராம்.

இதுவரை ஏனோ தானோ என்றிருந்த தாரா அம்மையார் இப்பொழுது இப்படி அடம் பிடிப்பதற்கான காரணம் கண்டி புதுமுகம் தான் என்பது ஆறுமுகசாமியாருக்கு தெரிய வந்துவிட்டதாம். இப்பொழுது புதுசாக அறிமுகப்படுத்தியவரை எப்படி பைசல் செய்வது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளதாம் ஆறுமுகசாமியின் கோட்டை நிர்வாகம்.

ஆனால், சட்டத்தரணியான கண்டி புதுமுகம் "என்னிடம் வாலாட்ட முடியாது. நான் என்ன கட்சி உறுப்பினரா? இல்லை, போனஸில் வந்தவனா? நான் யானைமேல் ஏறி வந்தவன். என்னை அசைக்க முடியாது" என்று வீராப்பு பேசுவதுடன் ஊடகங்களுக்கும் விடயத்தை கசியவிட்டுவிட்டாராம்.

பாவம். வெளுத்தது எல்லாமே பால் என்று நம்பி மோசம் போகும் ஆறுமுகசாமியார், இன்றும் கூட உள் வீட்டு விசயங்கள் தனது சகாக்கள் மூலம்தான் வெளிவருவதாக நம்பி உள்ளே இருப்பவர்கள்மீது நெருப்பை அள்ளிக்கொட்டுகிறாராம்.

என்ன செய்வது, ஊன்றி வைத்த கொம்பு உச்சியைப் பிளக்கின்றது என்பது புரியாமல் தம்பியார் தடுமாறுகின்றாரே என்று வேதனைப் படுகிறார் மற்றும் ஒரு ஆசாமியார். வினை விதைத்தவன் தினை அறுக்க முடியாது என்பது சரிதான் போங்க.

## நாட்டுக்கு மின்சாரம் கொடுக்கப்போய் நரிகளின் வலைக்குள் விழுந்த கதை

"சாண்பிள்ளை என்றாலும் ஆண்பிள்ளை என்பதைக் காட்டிவிட்டார் இரண்டாவது அதிகாரத்தில் இருக்கும் கதிர்காம மஹிந்தன்" என்று கூறிக்கொண்டே கன்டீனில் இருந்து வெளியே வந்தார் சிவப்புச் சட்டைக்கார போஸ்டர் சந்திரன்.

நண்பரைக் கண்டதும் "என்ன மச்சான் மலைத்துப் போய்விட்டீரா, நாங்கள் பிடித்தால் ஒரே பிடிதான், எப்படி எங்களுடைய சாதனை" என்றார்.

"ஆமாம் குரங்குகள் பிடித்தால் கொப்பு முறிந்தாலும் விடாதுகள் தானே" என்றோம்.

"இந்தா பாரு உன்னுடைய குசும்பு மட்டும் போகாதே" என்று கூறிவிட்டு கதை சொல்ல ஆரம்பித்தார் போஸ்டர் சந்திரன்.

"மச்சான் எங்கள் தலைவருக்கு எந்த இடத்தில் அமர்த்தினால் எதை சாதிக்கலாம் என்பது நன்றாகவே தெரியும்.

மின்சார சபை விடயத்தில் அதிஉயர் அம்மணிக்கே ஷொக் ட்ரீட்மென்ட் கொடுத்துவிட்டார். இரண்டு வாரம் மந்திரிசபைக் கூட்டத்தை பகிஸ்கரித்தோம்.

கடைசியில் மந்திரிசபையே எங்கள் சிவப்புக் கூடாரத்துக்குள் வந்து ஜாகை அடித்துவிட்டது.

உதவிக் கடன் கொடுப்பவர்கள் எல்லாம் வரப்போகின்றார்கள். நாம் பிளவுபட்டு இருந்தால் ஸ்திரமான அரசாங்கம் இல்லை. அதனால் யாரை நம்பிக் கடன் கொடுப்பது என்று கைவிரித்துவிடுவார்கள். எப்படியாவது ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மண்டியிட்டனர்.

ஆனாலும், எங்கள் தலைவர் விட்டுக் கொடுக்கவில்லை. 'இந்த சாக்குப் போக்கு எல்லாம் எங்களுக்கு தேவை இல்லை. கதிர்காம மஹிந்தன் எங்களுக்கு வாக்குறுதி அளித்தபடி மின்சாரசபை திட்டம் தொடர்பான அமைச்சரவைத் தீர்மானம் ரத்துச் செய்யப்பட வேண்டும். வாய் சவடால் சரிவராது. மேல் மாகாண சபையில் செய்தது போல் உதி உயர் மன்றில் செயற்படப் போகிறோம்' என்று ஒரு போடு போட்டு அனுப்பிவிட்டார்."

"அடடே கேட்க நன்றாகத்தான் இருக்கின்றது. அப்புறம் என்ன நடந்தது?" என்று தூண்டினோம்.

"அப்புறம் என்ன அனுராகம் பாடுபவரும், மங்கள மேளத்தாரும் அதிகார அம்மணியிடம் அப்படியே ஒப்பித்துவிட்டனர்.

என்னடா இந்த சிவப்புச் சட்டைக்காரர்களை நம்பி இன்னும் ஒருவருடம் ஓட்டலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறோம். இவனுகளும் யானை மேல் ஏறி நம்மை கவிழ்த்து விடுவான்கள் போல் இருக்கின்றதே. நாடு எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன நாட்டுக்கு நல்ல வெளிச்சம் கொடுக்கப் போற நமக்கே மின்சாரம் தாக்கிவிடும் போல் இருக்கே. அதை உதறிவிட வேண்டியது தான் என்று தீர்மானித்துவிட்டாராம். இந்த தகவலை இரவோடு இரவாக எங்கள் தலைவருக்கும் தெரிவித்துவிட்டார். இது சாதனைதானே!" என்றார் போஸ்டர் சந்திரன்.

"என்ன மச்சான் நீங்கள் இப்படி ஜம்பம் அடிக்கின்றீர்கள். ஆனால் அதை நடத்திக் காட்டியவர் கதிர்காம மஹிந்தன் என்றல்லவா வெளியே பேச்சடிபடுகின்றது" என மீண்டும் கிண்டினோம்.

"மச்சான் கிட்டவாரும் உமக்கு மேதின ஊர்வலத்தில் நடந்தது தெரியும் தானே? அதி உயர் அம்மணியின் ஊர்வலத்திலேயே அரசுக்கு எதிராக கோஷம் போட்டார்கள். 'நாளைய ஜனாதிபதி' என்றும் 'நாளைய பிரதமர்' என்றும் கோஷம் போட்டார்கள் இல்லையா?"

"ஆமாம் ஆமாம் அது தான் பழைய கதையாகிவிட்டதே!" என்றோம்.

நீர் ஒரு முந்திரிக் கொட்டை மச்சான். அப்படிக் கோசம் போட ஒரு கோஷ்டியை நீலத் தொப்பி போட்டு அனுப்பி வைத்ததே நாங்கள் தான். எங்கள் தலைவரின் ஆலோசனையின்படி ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஒரு 'பிரைன்வோஸ்' கொடுக்க நாங்களே செய்த வேலை" என்றார் சந்திரன்.

"அப்படியா சங்கதி! பிரதமரின் உறுதி மொழியை நிறைவேற்ற கதிர்காம மஹிந்தனும் இந்த திட்டத்துக்கு பக்க பலமாக இருந்தாராமே" என்றோம்.

"என்ன மச்சான் என்னை கஷ்டத்தில் போடுவதுதான் உங்கள் திட்டமோ! அது வெல்லாம் பரமரகசியம். ஆளை விட்டால் போதும்" என்று நழுவிவிட்டார் போஸ்டர்காரர்.


**பலராது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**

**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

*மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின்போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம்* (PSYCHOTHERAPY) *மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.*

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

மே 20 – 25 வரை சந்திக்கலாம் (விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**

யூன் 11 - 12 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**

மே 10 -15
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.




# மிக விரைவில்

# காங்கேசன் சீமெந்து

# வடக்கு , கிழக்கில்

# விநியோகஸ்தர்கள் தேவை




50 வருட அனுபவமும்

உயரிய தரமும், குறைந்த விலையும் கொண்டது

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
தலைவர்:
இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்
130, டபிள்யூ ஏ டி ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு - 2
தொலைபேசி : 2440211, 2440212 -2440203
தொலைமடல் : 2448866



JBW தொழிற்சாலையில் உருவாகும் அதி சிறந்த மோட்டார் சைக்கிள் இப்போது இலங்கையில்!

உடனடியாக விற்பனையாளர்கள் தேவை!




● ஹெல்மட் மற்றும் ஜக்கட் இலவசம்
● 40 கவர்ச்சிகரமான மொடல்களில்
● இரண்டு வருட உத்தரவாதம்

மக்வேன்ட் ஒகனைசேஷன் (பிரைவட்) லிமிட்டட்.

சுடர் ஒளி
மே 22 – 28, 2005
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## இடைக்கால சபையும் பொதுக்கட்டமைப்பும்

வடக்கு, கிழக்கில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை அமைப்பதற்கான யோசனைகளை விடுதலைப் புலிகள் அமைப்பு நோர்வே ஊடாக ஸ்ரீலங்கா அரசிடம் சமர்ப்பித்து ஒன்றரை வருடம் கழிந்துவிட்டது. இன்னும் இந்த விவகாரத்தில் எதுவித முன்னேற்றமும் இல்லை.

முன்னர் விட்ட இடத்தில் இருந்து சமாதானப் பேச்சுக்களைத் தொடர வேண்டுமானால், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்தே முதலில் பேச வேண்டும் என்று புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். இறுதித் தீர்வு குறித்தும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்தும் ஒரே சமயத்தில்பேசி முடிவு செய்யப்படவேண்டும்என்று அரசு தெரிவித்து வந்தது.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து முதலில் பேசுவதற்கு ஜே.வி.பி எதிர்ப்புத் தெரிவித்து வந்ததால் ஜனாதிபதி எந்த ஓர் உறுதியான முடிவையும் எடுக்க முடியாத நிலையில் இருந்து வந்தார்.

ஜனாதிபதியின் இந்த துணிச்சல் அற்ற – காலம் தாழ்ந்தும் – நடவடிக்கையை ஜே.வி.பி நன்கு பயன்படுத்திக்கொண்டு விட்டது. தென் இலங்கையில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிரான பிரசாரங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றது. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து ஜனாதிபதி நேரத்துக்கு நேரம் ஒவ்வொரு கதையைச் சொல்லும் அளவுக்கு பலவீனமான நிலைக்குள் ஜனாதிபதி தள்ளுண்டு போக ஜே.வி.பியே காரணம்.

தற்போது பொதுக்கட்டமைப்புக்கும் இதே கதிதான் ஏற்பட்டிருக்கிறது. ஆழிப் பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஐந்து மாதங்கள் ஆகின்றன. ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்புக் குறித்து உறுதியான அறிவிப்பு எதனையும் விடுக்க முடியாத நிலையில் ஜனாதிபதி குழம்பிப்போய் இருக்கிறார். பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி காலம் தாழ்த்தியதை ஜே.வி.பி நன்கு பயன்படுத்திக் கொண்டுவிட்டது.

பொதுக்கட்டமைப்பு என்பது ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு சம்பந்தமான சில திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஓர் அமைப்பு மட்டுமே.

ஆனால், இது தென் இலங்கையில் – இடைக்கால தன்னாட்சி அதிகார சபைபற்றிய சர்ச்சையையே பின் தள்ளும் அளவுக்கு – பெரும் அரசியல் விவகாரமாக பயன்படுத்தப்பட்டிருப்பதுதான் ஆச்சரியம் அளிக்கிறது.

தமிழ் மக்களுக்கு ஏதோ தனிநாடு வழங்குவதைப் போலவும் உரிமைகளையும் அதிகாரங்களையும் அள்ளி வழங்குகின்ற ஒரு திட்டம் போலவும் தென் இலங்கையில் பொதுக்கட்டமைப்புக் குறித்து பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

தனது அரசு கவிழ்ந்து விடுமோ வருட இறுதிக்குள் தனது அதிகாரம் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற பீதியில் இருக்கும் ஜனாதிபதியும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நேரத்துக்கு நேரம் ஒன்றைக் கூறி வருகிறார்.

"பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பவர்கள் அதற்கு மாற்றாக என்ன வைத்திருக்கிறார்கள்? யுத்தமா? அப்படியானால் அவர்கள் யுத்தத்துக்குச் செல்லத் தயாரா?" என்று ஜனாதிபதி கேட்கிறார். ஆகவே ஒன்றும் இல்லாத விவகாரத்தை வைத்துக்கொண்டு ஜனாதிபதி அதை ஊதிப் பெருப்பித்து வெறும் பூச்சாண்டி காட்டுகிறாரோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆனால் இது அதிகாரம் இல்லாத கட்டமைப்பு என்றும் ஜனாதிபதி கூறி வருகிறார்.

ஆகவே தற்போதைய நிலையில் தமிழ் மக்கள் இப்படியான பொதுக்கட்டமைப்பை நம்பிப் பயன் இல்லை என்றே தெரிகிறது.

பொதுக்கட்டமைப்பு ஏற்பட்டாலும் அது சரியாக இயங்குவதற்கு பேரினவாதிகள் விடப்போவதில்லை. ஆகவே இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் ஒரே தீர்வு இடைக்கால தன்னாட்சி அதிகார சபைதான். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து உடனடியாக பேச்சுக்களை நடத்தி அதனை உருவாக்கும் பட்சத்தில் பொதுக் கட்டமைப்பின் தேவையே இல்லாமல் போய் விடும்.

# ஜே.வி.பியும் ஜனாதிபதியும்

பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்தில் பெரும் பகுதி பூர்த்தியாகிவிட்டதாகவும் ஒரு சில வாரங்களில் இது சம்பந்தமான முக்கிய முடிவு எடுக்கப்படும் என்றும் தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்ற போதும் அது குறித்த சந்தேகங்களும் தமிழர் தரப்பால் பலமாக எழுப்பப்படுகின்றன.


ஜனாதிபதி

### ஜே.வி.பியும் பொதுக்கட்டமைப்பும்

கூட்டமைப்பு அரசாங்கத்தில் பிரதான பங்காளியான ஜே.வி.பி பொதுக்கட்டமைப்பு விடயத்தில் கிடுக்குப்பிடி பிடிக்கிறது. தொடர்ந்து பொதுக்கட்டமைப்பை எதிர்த்து பொதுக்கட்டமைப்புக்கு எதிராக தென்னிலங்கை மக்களை திசைதிருப்பி போராட்டங்களை நடத்துவது என இக்கட்சி கிளம்பியிருக்கும் நிலையில் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவோம் என்று ஜனாதிபதி கூறிவருகின்றார். இதுகூட கூட்டமைப்புக்குள் இருக்கும் ஜே.வி.பிக்கு எதிராக ஜனாதிபதி மேற்கொண்டுவரும் அரசியல் நகர்வின் ஒரு பகுதிதான் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### பொதுக்கட்டமைப்பு என்பது என்ன?

கடல் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளுக்கான புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்காக உருவாக்கப்படும் ஒரு கட்டமைப்பே இதுவாகும். இதில் அரசு புலிகளுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் தான் நிதி வளங்கள் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ளப்படும் என்ற சர்வதேச அழுத்தம் காரணமாகத்தான் இக்கட்டமைப்பு உருவாக்கப்படுகிறது என்பது வெளிப்படையானது.

### கூட்டமைப்பின் அவசியம்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அமைப்பின் மாநாடு கடந்த 16ஆம் 17அம் திகதிகளில் கண்டியில் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் சர்வதேச நாடுகளினதும், சர்வதேச அமைப்புக்களினதும் பிரதிநிதிகளால் பொதுக்கட்டமைப்பின் அவசியம் வலியுறுத்தப்பட்டதுடன் போர்நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து பேணுவதற்காக அரசையும் புலிகளையும் அவை பாராட்டின.


கண்டியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

### பாரியசவால்

தென்னிலங்கையில் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான கருத்துக்கள் பரப்பப்படும் வேளையில் ஜனாதிபதி கண்டி மாநாட்டில் ஆற்றிய உரையானது சர்வதேச சமூகத்துக்கு ஏற்புடையதாக இருப்பினும் தென்னிலங்கையில் அது பாரிய சவாலை எதிர்நோக்குகிறது.

அவர் தனது உரையில் ஆபத்தான முடிவுகளை எடுக்கவேண்டிய நிலையில் அரசு இருப்பதாகவும் இதனால் தம்மில் பலர் மோசமான ஆபத்து நிலையில் இருப்பதாகவும் தமக்கு உயிருக்கு ஆபத்து வடக்கு – கிழக்கு பயங்கரவாதிகளிடம் இருந்தோ அல்லது தெற்கு தீவிரவாதிகளிடம் இருந்தோ வரலாம் எனவும் தெரிவித்திருந்தார். இவ்வாறு கூறியபோது பொதுக்கட்டமைப்பை தீவிரமாக எதிர்க்கும் ஜே.வி.பி அமைச்சர் ஒருவருடன் ஹெலஉறுமய எம்.பி ஒருவரும் மாநாட்டு மண்டபத்தில் பிரசன்னமாகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### உடன்பாடு வருவது உறுதி

தொடர்ந்தும் அவர் தனது உரையில் 'தனது உயிருக்கு ஆபத்து நேர்ந்தாலும் ஆழிப்பேரலை நிவாரண உதவிகளை புலிகளுடன் பங்கிடுவது தொடர்பாக ஓர் உடன்பாட்டுக்கு வருவதில் தான் உறுதியாக இருப்பதாகவும் அடுத்துவரும் வாரங்களில் தான் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் எனவும் தெரிவித்தார். மீள் கட்டுமானத்துக்காக புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் தனது அரசில் பெரும்பான்மையானோர் தனக்குப் பின்னால் அணிவகுத்து தம்மை ஆதரிக்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

### அனர்த்தம் ஏற்பட்டு ஐந்து மாதங்கள்

கடல்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஐந்து மாதங்கள் ஆகின்றன. தற்போதுதான் பொதுக்கட்டமைப்பை விரைவில் உருவாக்குவோம் என ஜனாதிபதி கூற ஆரம்பித்திருக்கிறார். ஜே.பி.பியை பொறுத்தவரை தீவிர எதிர் நிலைப்பாட்டிலேயே அது தொடர்ந்தும் இருக்கிறது.

இவ்வாறான ஒரு கட்சியுடன் கூட்டு சேருவதற்கு முன்பு இதுபற்றிய விளக்கங்களை ஜனாதிபதி அக்கட்சியுடன் பேசி முடிவெடுத்தபின் கூட்டமைப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். எனினும் ஆட்சியமைத்து ஒருவருடத்தின்பின் ஜே.வி.பிக்கு எதிராக ஜனாதிபதி புலம்புவதில் அர்த்தம் எதுவும் இல்லை என்கின்றனர் நோக்கர்கள்.

### தமிழர் விரோத ஜே.வி.பி

ஜே.வி.பி. ஆரம்பம் முதலே தமிழர் விரோத போக்குடன் இருந்து வருகிறது. அதை உரிய முறையில் கையாளத்தவறிய ஜனாதிபதி கண்டி மாநாட்டில் சீறியது மட்டுமன்றி 'தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்டதால் எனது தந்தையரை சிங்கள இனவாத அடிப்படைவாதிகள் கொன்றனர். அதே காரணத்துக்காக எனது கணவர் விஜேயகுமாரன துங்கவை ஐக்கிய தேசியக்கட்சி – ஜே.வி.பி கூட்டு கொலை செய்தது. அதேபோல் இன்றும் சிங்கள அடிப்படைவாதிகள் என்னைக் கொல்ல முயற்சிக்கலாம் இதனை உணராமல் நான் இல்லை. இதற்காக நாட்டு நலனுக்கான திட்டங்களை கைவிடப்போவதில்லை. பொதுக்கட்டமைப்பு வேண்டாம் என்று எதிர்ப்பவர்கள் அதற்கு மாற்றாக என்ன வைத்திருக்கிறார்கள்? யுத்தமா? அப்படியானால் அவர்கள் யுத்தத்துக்கு செல்லத் தயாரா? அப்படி அவர்கள் தயாராக இருந்தால் அவர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் ஆயுதப்பயிற்சி வழங்கத்தயார்' எனவும் சொன்னார்.

இதில் என்ன வேடிக்கை என்றால் பெரும்பாலான பேரினவாதிகள் ஜனாதிபதியின் கூட்டு அரசாங்கத்துக்குள்ளும் ஜனாதிபதியின் கட்சிக்குள்ளுமே வீற்றிருக்கிறார்கள் என்பதுதான்.


### போராட்டங்கள்

ஜே.வி.பி ஒரு அடிப்படைவாத சிங்கள பேரினவாதக்கட்சியாகும். அண்மையில் ஜே.வி.பியால் கொழும்பு மாநகரசபை திடலில் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான போராட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எக்காரணம் கொண்டும் பொதுக்கட்டமைப்பு உருவாகுவதை அனுமதிக்கப் போவதில்லையென ஜே.வி.பியினர் இந்தக் கூட்டத்தில் சூளுரைத்திருந்தனர். அதேபோல் பௌத்த அமைப்புக்களும் சிங்கள மக்களைத் தூண்டிவிடுவதில் முனைப்பாக இருக்கின்றன.

ஜனாதிபதியின் உரை குறித்து ஜே.வி.பி உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் பேச்சுக்குறித்து தாம் அலட்டிக்கொள்ளப் போவதில்லையென தெரிவித்தார்.

அண்மையில் கூடிய ஜே.வி.பியின் அரசியல் குழு, பொதுக்கட்டமைப்பு ஒன்றை விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து அரசு ஏற்படுத்துவதை எதிர்ப்பது என்ற தமது கட்சியின் கொள்கையை எந்தக் காரணத்துக்காகவும் மாற்றப்போவதில்லை என்ற உறுதியான தீர்மானத்தை எடுத்துள்ளது.


விமல்

பொதுக்கட்டமைப்புக்கெதிராக நாடளாவிய ரீதியில் பொதுக்கூட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடத்துவது என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### தமிழருக்கு எதிரானபோர்

தென்னிலங்கையில் தீவிரமாக எழுந்துள்ள இந்த தமிழர் விரோதப்போக்கு இறுதியில் பொதுக்கட்டமைப்பை நோக்கியல்ல ஒரு போரை நோக்கியே கொண்டு செல்லும் என பலராலும் அஞ்சப்படுகிறது.

இதேவேளை இந்த முரண்பாடான நிலையால் புலிகளும் பலத்த விசனமடைந்துள்ளதுடன் தமது அடுத்த கட்ட நகர்வு குறித்து அவர்களின் தலைமை சிந்தித்து வருவதாகவும் தமிழ்தேசிய விடுதலைப்போராட்டத்தை அடுத்த கட்டத்துக்குள் கொண்டு செல்வது குறித்து தேசிய தலைவர் பிரபாகரனால் தீர்க்கமான முடிவுகள் மிகவிரைவில் எடுக்கப்படவுள்ளதாகவும் புலிகளின் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகிறது.

**பிங்கலன்**

பொதுக்கட்டமைப்பு உருவாகும் என சர்வதேசத்துக்கு கூறிவரும் அரசுக்கு நிதிவளங்கள், திட்டங்கள் ஊடாகவே வழங்கப்படும் என உதவி வழங்கும் நாடுகள் கூறியுள்ளமை பெரும் பேரிடியாக அமைந்துள்ளது.

நேரடியாக நிதிகிடைக்கும் என கனவு கண்டவர்களுக்கு உண்மையிலேயே பொதுக்கட்டமைப்பு தேவை ஏற்பட்டுவிட்டது. ஜனாதிபதி கூறிய சில வாரங்கள் வரை பொறுத்திருந்து பார்ப்போம்.

# வெற்றிக் குதூகலத்தில் ஜெயலலிதா!

**த**மிழகத்தின் காஞ்சிபுரம், கும்மிடிப் பூண்டி சட்டப்பேரவை தொகுதிகளின் இடைத் தேர்தலில் முதல்வர் ஜெயலலிதா வின் அ.தி.மு.க பெருவெற்றி பெற்றுள்ளது. கடந்த வார இறுதியில் நடந்த இத்தேர்தல் களில் ஜெயலலிதா மும்முரமாக பிரசாரம் செய்தமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு வீதியாக அவர் பிரசாரம் செய்தார். கருணா நிதியோ ஓரிரு பொதுக்கூட்டங்களோடு தனது பிரசாரத்தை நிறுத்திக்கொண்டார்.

என்ன செய்தாவது வென்றே தீரவேண் டும் என அ.தி.மு.க அமைச்சர்களை ஜெய லலிதா மிரட்டி இருந்தார்.

சென்ற ஆண்டு 40 தொகுதிகளில் லோக்சபாவுக்கான தேர்தல் நடைபெற்றது சகல தொகுதிகளிலும் ஜெயலலிதாவின் கட்சி மண்கவ்வியது. அந்தத் தோல்வியால் துவண்டு போயிருந்த அ.தி.மு.கவுக்கு இந்த இடைத்தேர்தல் வெற்றி புதிய பலத் தைத் கொடுத்துள்ளது என்பதில் ஐய மில்லை. இன்னும் சரியாக ஒரு வருடத்தில் தமிழக சட்டசபைத் தேர்தல் 'வரவுள்ள நிலையில் எதிரணியான தி.மு.க தலைமை யிலான கூட்டணிக்கு எதிராக துணிந்து போட்டியிடும் தெம்பையும் இந்த வெற்றி கொடுத்துள்ளது.

தி.மு.க தலைமையிலான ஏழு கட்சிகள் அடங்கிய கூட்டணியுடன் தனித்து நின்று மோதி வெற்றி பெற்றுள்ளதாக ஜெய லலிதா தேர்தல் வெற்றியின் பின் மார் தட்டிக் கொண்டார். ஆனால் சென்ற ஆண்டு லோக்சபா தேர்தலுக்கு முன் நடந்த சகல இடைத்தேர்தல்களிலும் அ.தி.மு.கவே வென்று வந்துள்ளது. எனினும் லோக்சபா தேர்தலில் ஒரு



ஆசனத்தைக் கூட அந்தக் கட்சியினால் வெல்ல முடியவில்லை. தி.மு.க தலைமை யிலான கூட்டணியே அப்போது 40 தொகுதிகளையும் தன்வசமாக்கிக் கொண் டது.

இந்த நிலையில் இம்முறை இடைத்தேர் தலில் இரு தொகுதிகளில் வெற்றி பெற்ற தைக்கொண்டு எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் 234 தொகுதிகளையும் அ.தி.மு.க வெல்லும் என நினைத்தால் அது பகற் கனவே. ஏழு கட்சிகளை எதிர்த்து தமது கட்சி வெற்றி பெற்றுள்ளதாக ஜெயலலிதா பெருமை பேசுவது ஒரு வகையில் சரிதான். எனினும் லட்சம் லட்சமாக பணத்தை வாரி இறைத்தும் பரிசுப் பொருட்களை வழங்கி யுமே இச்சாதனையினை அ.தி.மு.க நிகழ்த்தியுள்ளது.

"காஞ்சிபுரத்தில் ஏழு கட்சிகளை அல்ல எட்டுக்கட்சிகளை எதிர்த்தே வென்றோம். அந்த எட்டாவது கட்சி எதுவென எல்லோ ருக்கும் தெரியும்" எனவும் ஜெயலலிதா கூறியுள்ளார். எட்டாவது கட்சி என்று கூறி யது காஞ்சி சங்கரமடாதிபதி ஜெயேந்திர ரையே.

அவர் மீதான வழக்கில் தான் செய்தது சரியே என காஞ்சியுரம் தொகுதி மக்களே அங்கீகரித்துள்ளனர் எனவும் முதல்வர் பெருமைப்பட்டுக் கொண்டார். இவ்வாறே திராவிட கழகத் தலைவர் தி.வீரமணியும் கூறியுள்ளார். சமயத்தை வெறுப்பவரான வீரமணி சங்கராச்சாரியார் விடயத்தில் ஜெயலலிதாவுக்கு ஆதரவாக ஏற்கனவே கருத்துக் கூறிவந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

"பணத்தால் வென்ற வெற்றி இது" என்று கலைஞர் கருணாநிதி இதனை வர்ணித்துள்ளார். இந்த ஜம்பம் மாநிலம் முழுவதும் சட்டசபைத் தேர்தல் நடை பெறும்போது பலிக்காது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

எனினும் தி.மு.க தலைமையிலான ஏழு கட்சி கூட்டணி உருவான பின்னர் ஏற்படும் முதற்தோல்வி இது. இதற்கு முன் இடைத்தேர்தல்களில் ஆளும் அ.தி.மு.க வென்று வந்தபோதெல்லாம் தி.மு.க தலை மையிலான இக்கூட்டணி உண்டாகி யிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக் கது. அந்த வகையில் அக்கூட்டணிக்கு இது ஒரு பின்னடைவே. வெற்றி நமதே என இறுமாப்புடன் இராமல் வெற்றிக்காக உழைக்க தி.மு.க அணிக்கு இது ஒரு நல்ல பாடமாக அமையும்.

**எஸ்.சுரேந்திரஜித்**

தவிர, பேரவைக்கான தேர்தலில் தோற்ற பின் ஜெயலலிதாவை எடுத்தெறிந்து பேசி வந்த பி.ஜே.பி தலைவர்களும் சற்று சிந் திக்கத் தலைப்பட்டுள்ளனர். அடுத்த தேர் தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி கிடை யாது. தனித்தே போட்டியிடுவோம் என கூறிவந்த பி.ஜே.பி தலைவர்களை முழி பிதுங்கவைத்துள்ளது ஜெயலலிதாவின் இந்த வெற்றி. அடிக்கடி அணிமாறும் ராம தாஸூம் அ.தி.மு.க அணியில் சேர வாய்ப் புள்ளது. அவ்வணியில் பி.ஜே.பியும் சேர்ந் தால் தி.மு.க அணிக்கு வலுவான ஒரு போட்டி அணியாக அது உருவாகவும் கூடும்.


## வெளிநாட்டில் உயர்கல்வியை தொடரவிரும்புகின்ற மாணவர்களுக்கு London Institute வழங்கும் அரிய சந்தர்ப்பம்

## Foundation Degree Programme

London Institute of Further Education (LIFE), நம் நாட்டு மாணவர்களின் எதிர் கால நலன்கருதி பிரித்தானிய பல்கலைக் கழகங்களின் அங்கீகாரத்துடனும், வழி காட்டுதலுடனும் Foundation Degree Programme for Higher Education / Career எனும் பாடநெறியினை வடிவமைத்துள்ளது.

இக்கற்கை நெறியில் தகவல் தொழில் நுட்பம் (Information Technolohy), ஆங் கிலம், ஆளுமை விருத்தி ஆகிய பாடப் பரப்புகள் போதிக்கப்படுகின்றன.

தகவல் தொழில்நுட்பத்தினைப் பொறுத்தவரையில் Programming Techniques, Website Development, Graphic Designing, Information Technology Theories, Internet - Email Applications, Operating System, MS Office XP, Hardware and Networking உள்ளிட்ட இன்னும் பல அலகுகளை உள்ளடக்கிய பாடத்திட்டம் கற்பிக்கப்படும்.


மேலும் ஆங்கிலத்தில் Reading, Writing, Speaking, Listening ஆகிய அடிப்படை அம்சங்களினுடாக விரிவான பயிற்சி வழங்கப்படுவதனால் ஆங்கிலத்தில் மிக வும் பலவீனமாக (Weak) காணப்படுகின்ற மாணவர்களும் கற்கைநெறி முடிவில் சிறந்த ஆங்கிலத்தேர்ச்சி கொண்டோராக மாறிக்கொள்ள வாய்ப்பு கிடைக்கின்றது.

தகவல் தொழில்நுட்பம் (Information Technology), ஆங்கிலம் ஆகிய பாடப்பரப் புகளை பயிலும் நம் மாணவர்கள், தங் களது ஆளுமையினை வளர்த்துக்கொள்ள வும், தாம் பெற்ற அறிவினையும் ஆற்றல் களையும் வெளிக்கொணரவும், ஆளுமை விருத்தி (Personality Development) எனும் விசேட பயிற்சித்திட்டமொன்றும் இப்பாட நெறில் உள்ளடங்குகின்றது. இதன் மூலம் மாணவர்கள் தங்கள் ஆளுமையினை வளர்த்துக்கொள்வதோடு, எந்தச் சந்தர்ப் பத்திலும் தங்கள் திறமையினையும், ஆற் றல்களையும் தெளிவாக வெளிப்படுத்தும் திறனையும் அடைகின்றனர். Personality Development இன் மூலம் கிடைக்கின்ற அனு கூலங்களால் வாழ்வின் பல்வேறு சவால் களையும் தைரியத்துடன் எதிர்கொள்ளும் மனவலிமையினையும், எவ்வித சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் இலகுவாக வெற்றி கொள்ளும் தன்மையினையும் மாணவர் கள் பெற்றுக்கொள்கின்றனர்.

எனவே London Institute வழங்கும் Foundation Degree Programme மூலம் மிகக் குறுகிய காலத்தில் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் ஆகிய துறை களில் சிறந்த அறிவினைப் பெறுவதோடு, தங்கள் ஆளுமையினை சிறப்பாக விருத்தி செய்து கொள்ளும் சந்தர்ப்பத்தினையும் பெற்றுக்கொள்வதால் ஒரு புதிய மாற்றத் துடன் இக்கற்கை நெறியினை நிறைவு செய்து கொள்கின்றனர்.

இத்துடன் இப்பாடநெறி முடிவில் 4 சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அவையாவன;


(18 ஆம் பக்கம் பார்க்க)





**EXIDE**

களத்தில் முதன்மையான
இலங்கையின் முதல் தர பற்றரி
இன்றும் முன்னணியில்

பிரதான விநியோகிப்பாளர்:
பாண்டியன் வாணிபம், வன்னி விநியோகஸ்தர்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

BROWNS GROUP BG ESTD 1875
பிரவுண் அன் கம்பனி லிமிடட்
பற்றரி பணியகம்
இல. 65, கிருலை ரோட், கொழும்பு – 05.
தொ. பே:– 2599280, 2599281, 5377988/89
பெக்ஸ் :- 5344536

வடக்கு–கிழக்கு உள்ளடங்கலாக நாடு முழுவதும் உள்ள விநியோகஸ்தர்களிடம்



## இங்கிலாந்தில் உயர்கல்வியைத் தொடர ஓர் அரிய சந்தர்ப்பம்.

**Foundation Degree Programme**

GCE O/L தகைமையுடன் இங்கிலாந்தில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் அதற்கான பல்கலைக்கழக அனுமதியினையும், Student Visa வினையும் இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு Foundation Degree Programme துணை புரிகின்றது.

GCE O/L → Foundation Degree Programme → UK Degree



COURSE LENGTH 3 Months (Full Time)

COURSE STRUCTURE

- Computing
  Introduction to IT, Windows XP - OS, MS-Office XP, Internet & E-mail Applications, Website development, Programming Languages, Graphic Designing, Hardware & Networking
- English Reading, Writing, Listening and Speaking.
- Personality Development

விபரங்களுக்கு:

LIFE LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
35A, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk

# நெட் குறும்பு



ஆஹா... எம்மாம் பெரிய பொண்ணும் தம்மாத்துண்டு சைக்கிளும்...




## ஜோக்

இந்து ஆலயம் ஒன்றில் பிரசங்கம் செய்யும் அறிஞர் ஒருவர் ஒரு நாள் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அன்றைய தினம் அவரது பிரசங்கத்தில் அரிச்சந்திரனின் கதையைக் கூறி... அவன் வாய்மை காத்த திறனை விவரித்தார்.

பொய் ஒன்றைச் சொல்ல மறுத்ததால் மனைவி சந்திரமதியை அடகு வைக்க வேண்டி ஏற்பட்டதையும், மகன் லோகிதாசன் பாம்பு கடித்து இறக்க நேரிட்டதையும், அரசனான அரிச்சந்திரன் சுடலையில் வெட்டியான வேலை பார்க்க நேரிட்டதையும். ஒரு பொய் சொன்னாலே இந்த கஷ்டங்கள் எல்லாம் நீங்கி திரும்பவும் அரசனாக முடியும் என்ற நிலை இருந்த போதும் பொய் சொல்ல மறுத்த அரிச்சந்திரனின் கதையைக் கூறிப் பிரசங்கம் செய்தார்.


பிரசங்கத்தின் இறுதியில் தனது கதையில் உள்ள அறிவுரையைப் பிரசங்கம் கேட்டவர்கள் எந்த அளவுக்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்பினார்.

பிரசங்கத்தை உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருந்த ஒருவரை அழைத்து இந்தக் கதை மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட பாடம் என்ன என்று கேட்டார்.

உடனே அந்த நபர் சிறிதும் தயக்கமில்லாமல் சொன்னார். 'ஐயா.... பொய் சொல்ல மறுத்து - உண்மை பேசினால் வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட வேண்டி ஏற்படும் என்பதை உணர்ந்து கொண்டேன்' என்றான். பிரசங்கம் செய்தவருக்கோ இதனைக் கேட்டு வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது. இன்னொருவரை அழைத்து இதே கேள்வியைக் கேட்டார். அந்த ஆளோ... 'ஐயா.. வாழ்க்கையில் கஷ்டம் என்று வந்துவிட்டால் மனைவியைக் கொண்டுபோய் அடகு வைக்க முடியும் என்ற உண்மையை இந்தக் கதை மூலம் கற்றுக் கொண்டேன்' என்றார்.

பிரசங்கியாரோ இதனை கேட்டு மயங்கி விழுந்துவிட்டார்.

# சத்தமில்லாத சிரிப்பு



தினமும் ஒரு கிளாஸ் மதுபானம் குடித்துக் கொண்டே வந்தால் உங்கள் உடம்பை நோய் நொடி எதுவும் அண்டவே அண்டாதாம்.

# விந்தை உலகம்

அப்படி இப்படி என்று இப்போது அதுக்கும் ஒரு கல்லூரி தொடங்கப்பட்டுவிட்டது. அந்த மாதிரியான ஆட்கள் அதுபற்றி தெளிவான அறிவில்லாமல் அதிலேயும் – இதிலேயும் மாட்டி அங்கு அவலாகப் போய் விடக்கூடாதென்ற நோக்கில் அவர்கள் மீது அநுதாபம் கொண்ட அமைப்பு ஒன்றே இந்தக் கல்லூரியை ஆரம்பித்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள சான் பிரான்ஸிஸ்கோ நகரில் அந்த விதமான தொழிலைச் செய்வோருக்காக இந்தக் கல்லூரியை ஆரம்பித்திருக்கிறது அந்த அமைப்பு.

இந்தக் கல்லூரிக்குப் பூவேர்ஸ் காலேஜ் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இங்கே அதற்கான வாடிக்கையாளர்களை எப்படி வசப்படுத்துவது, மூலப்பொருட்களை எப்படி பேணிக்காப்பது, தொழிலில் உள்ள சூட்சமங்கள், நுணுக்கங்கள், சட்ட வரைமுறைகள் என்பன பற்றி போதிக்கப்படுகிறதாம்.

இங்கே பயிற்சியைப் பெறுவதற்கு அந்த தொழில் செய்வோர் அடிபிடிபட்டுக் கொண்டிருக்கிறார்களாம். அந்தத் தொழில் என்றால் என்ன இளப்பமா? சும்மா ஐந்து – பத்துக்கு அல்லாட வைக்கும் பல தொழில்களுக்கே பயிற்சி நிலையங்கள் – ஆலோசனையாளர்கள் என்று ஏகப்பட்ட பந்தாக்கள் இருக்கும்போது இன்று உலகில் கோடிக் கணக்கான வருமானமுள்ள தொழிலான இதுக்குமட்டும் பயிற்சிக்கல்லூரி தேவையில்லையா என்று அழிச்சாட்டியம் பண்ணியிருக்கிறார் அந்தக் கல்லூரியின் தலைவர்.

எல்லாம் சரிதான்... ஏதோ அந்தத் தொழில் அந்தத் தொழில் என்கிறாயே.... அது எந்தத் தொழில் என்று சொல்லி தொலையேன்டா என்கிறீர்களா? அட இது கூடத் தெரியவில்லையா சே.... அது தாங்க —அந்தத் தொழிலுங்க சார்.

# செய்து பாருங்கள்

நாங்கள் சொல்கின்ற இந்தச் செய்முறை மூலம் உங்கள் உள்ளங்கைகளின் நடுவில் ஒரு ஓட்டையை வரப்பண்ண முடியும். அதற்கு விரும்பினால் கீழே உள்ள செய்முறையைப் படியுங்கள்.



முதலில் ஒரு மட்டையை - அல்லது விறைப்பான காகிதத்தை எடுங்கள். அதனை வட்டமாகச் சுற்றி ஒரு குழாய் போல ஆக்கிக் கொள்ளுங்கள். அதனை அப்படியே ஒற்றைக் கண்ணுக்கு முன்னால் வைத்துப் பிடித்துக் கொள்ளுங்கள்.

இதேவேளை உங்கள் கண்களை எதிரே சுமார் 10 முதல் 15 அடி தூரத்தில் உள்ள சுவர் ஒன்றை நிலைக்குத்தாக பார்க்க வைத்துக் கொள்ளுங்கள். அதாவது ஒரு கண் உங்கள் பேப்பர் குழாய் ஊடாக சுவரை பார்த்துக் கொண்டிருக்க - மற்றக் கண் சாதாரணமாகவே சுவரைப் பார்த்தபடி இருக்கட்டும்.

இப்போது உங்களின் ஒரு கை பேப்பர் குழாயை பற்றியிருக்கும். சும்மாயிருக்கும் மற்றக் கையை எடுத்து கைகளின் விரல்களை விரித்தபடி சாதாரணமாகப் பார்த்தபடி இருக்கும் கண்ணுக்கு எதிரே - காகிதக் குழாய்க்கு அருகாகப் பிடியுங்கள். இப்போ உங்கள் உள்ளங்கையில் ஏற்படும் ஓட்டை வழியாக எதிரேயுள்ள சுவர் தெரியும். முயன்று பாருங்கள்.

# கண்ணாமூச்சி



உங்களுக்கு மட்டும்தான் ஹெயார்ஸ்ரைலும், ஹீல்ஸ் வைத்த பாதணியும் உபயோகப்படுமா? எங்களும் அதிக தூரம் இரைதேடச் செல்பவர்கள்தானே! அதனால்தான் இவை எங்களுக்கும் உபயோகப்படுகின்றன.

# இலங்கைத் தீவில் முதன்முதல் பௌத்த சமயம் தழுவியவர் திராவிடரான நாகரேயன்றி விஜய பரம்பரையினர் அல்லர்!

# திகவாவியும் தீர்த்தவாவியும்!

2

இலக்கியப் பொழில்

சொல்லேருழவன்
ம.க.அ.அந்தனிசில்

இந்த வெற்றுக்கதையுடன்தான் திகா என்ற இளவரசனும் அப்பிராந்தியத்துக்கு அறிமுகப்படுத்தப்படுகிறான். இவன் கவந்தீசனுக்கு எந்தவிதத்தில் உறவு முறையினன் என்பது யாருக்கும் தெரியாது. தீர்த்தவாவி என்ற பெயரை குளறுபடியாக்கி விடுவதற்கு திக என்ற பாத்திரப்படைப்பை உருவாக்கி பின்னர் திகவாப்பி என்ற பெயர் புனையப்பட்டதுபோல் தோன்றுகிறது.

இக் குளத்தை கவந்தீசன் கட்டியிருந்தால் குளத்துக்கு அவனது பெயரல்லவா சூடப்பெற்றிருக்க் வேண்டும். அல்லாமல் திக என்பவனது பெயர் சூடப்பெற்றிருப்பது பல வழிகளாலும் உண்மையை மூடி மறைக்கும் முயற்சிதான்.

அக்காலத்தில் கைமுனுவின் தந்தையான கவந்தீசனுக்கு அநுராதபுரியுடன் எந்தத் தொடர்பும் இல்லை. அநுராதபுரியில் எல்லாளன் (கி.மு. 145-101) ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். எல்லாளனின் கீழ் முப்பத்தியிரண்டு சிற்றரசு பிராந்தியங்கள் இருந்தன. அதற்குமுன் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் உறுகுணையில் தனக்கொரு சிற்றரசை நிறுவியிருந்தான் முத்தசிவனின் மகனான மகாநாகன். இச் சிற்றரசு உருவாக்கப்பட்டதன் பின்னணி என்ன?

தனது அண்ணனின் சிறுமகனை நஞ்சூட்டிக் கொன்றதான அபாண்டம் தன் மீது விழுந்துவிடுமோ என்று அஞ்சிய மகாநாகன் தனது பரிவாரங்களுடன் அநுராதபுரியை விட்டு வெளியேறி சில இடங்களில் தரித்து பின்னர் உறுகுணையில் மாகமத்தில் ஓர் சிற்றரசை நிறுவி அரசியற்றி வந்தான். அங்கு அவன் விகாரையொன்றினைக் கட்டி அவ்விகாரைக்கு மகாநாகவிகாரை எனப் பெயரிட்டான். நாகர் இயற்றிய விகாரைகள் பலவும் நாகவிகாரை என்றே அழைக்கப்பட்டு வருதலால் கவந்தீசனின் இரண்டாம் புதல்வனான சதாதிசையால் திகவாவியில் இயற்றப்பெற்ற விகாரையும் நாகவிகாரையென்றே பெயர் சூட்டப்பெற்றிருக்க வேண்டும். ஆனால், நாகர் என்பது திராவிடரை இனங்காட்டும் பெயராகையால் அதை மறைப்பதற்காகவே பின்னர் அவ்விகாரைக்கு திகவாப்பி விகார என சிங்கள இனவாதிகளால் புதிரான பெயர் சூடப்பெற்றிருக்கலாம்.

திகா என்பவன் அங்கு குளமும் விகாரையும் கட்டவில்லையாதலால் அவனது பெயரால் 'திகவாப்பி', 'திகவாப்பி விகார' போன்ற பெயர்கள் இட்டுக்கட்டிச் சொல்லப்பட்டிருப்பது சதிரன்றி வேறென்ன?

தமிழர்கள் மற்றும் தமிழர்கள் தொடர்பான பெயர்கள் எவ்வாறு மகாவம்சத்தில் புரிந்துகொள்ள முடியாத வகையில் சிதைக்கப்பட்டிருக்கின்றன என்பதை யாவரும் அறியமுடியும். அநுராதபுரியில் அறுபது ஆண்டுகள் அரசியற்றிய முத்தசிவனின் (கி.மு. 307 - 247) பெயரை மகாவம்சம் 'முட்டசீவ' என கொச்சையாக கூச்ச நாச்சமின்றி சொல்லியிருப்பது நல்ல எடுத்துக்காட்டன்றோ! அது மட்டுமன்றி அநுராதபுரியில் ஆட்சிசெய்த அரசர் பட்டியலில் நாக அரசர்களை மகாவம்சம் மூடி மறைத்து அவர்களை ஆரியர்களாக காண்பித்திருப்பது பெரும் பகல்மோசடியாகும்.

இம்மோசடியை பூசி மெழுகி மறைப்பதற்காகத்தான் நாகர்களை மனிதர்களல்ல என்றும், அவர்கள் பாம்பென்றும், வாலென்றும் சிங்கள வரலாற்றாசிரியர்கள் பக்கமேளம் வாசித்து வருகிறார்கள். அவ்வாறு உலகின்கண் நாகர்களை மானிடரல்லாதவர்களென ஒதுக்கி வைத்துவிட்டால் அவர்களின் வரலாற்றினை தம் கரங்களில்

நினைப்பது வெறும் கோழிக் கனவாகும். ஏடுகளில் எழுதப்படும் பித்தலாட்டங்கள் எல்லாம் சத்தியமாகிவிடுமா?

நாகர்களின் (திராவிடரின்) வரலாற்றை கபளீகரம் செய்ததாலேயே நாகர் என்ற பெயரைச் சொன்னதும் சிங்கள வரலாற்றாசிரியர்களுக்கு குலநடுக்கம் பிடித்து விடுகிறது. ஆரம்பத்திலேயே மகாவம்சம் நாகர் குலத்தை மூடி மறைத்து வரலாற்றை திசை திருப்பி எழுதிவந்ததன் எதிரொலியே இது.

இலங்கைத்தீவில் முதன்முதல் பௌத்த சமயம் தழுவியவர்கள் திராவிடரேயன்றி ஆரியரல்ல! முத்தசிவனுக்கு முன் அரசியற்றிய ஆரியர்களான பந்துகாபயனோ, அவனுக்கு முன் அரசியற்றிய அபயனோ, அவனுக்கு முன் அரசியற்றிய பந்துவாசுதேவவோ, அவனுக்கு முன் அரசியற்றிய விஜயனோ பௌத்த சமயம் சார்ந்திருக்கவில்லை. அவர்கள் பௌத்தர்களும் அல்லர்!



பின்னர் நாககுலத்தவனான முத்தசிவனின் இரண்டாம் புதல்வனான திசை என்பவன் கி.மு.247இல் பௌத்தசமயம் தழுவிக்கொண்டபோது பிறநாகர்களும் பௌத்த சமயத்தை ஏற்றுக்கொண்டனர். இதிலிருந்து முதன் முதல் பௌத்த சமயம் தழுவிக்கொண்டவர் திராவிடரென்பது யாவரும் புரியக்கூடியதே.

ஆதலின் திராவிடர்களின் சாதிப்பெயர்களுள் ஒன்றான நாகர் என்ற பெயரையோ, அவர்களால் இயற்றப்பெறும் 'நாக' என்ற பகுதி கொண்ட விகாரைகளையோ முற்று முழுதாக மூடிமறைத்து விடலாமென்பது எவ்வகையிலும் புத்திபூர்வமானதன்று.

கவந்தீசனின் இரண்டாம் மகனான சதாதிசை அங்கு நிறுவிய விகாரை நாகவிகாரை என்றே பெயர் கொண்டிருத்தல் வேண்டும். ஏனெனில் சதாதிசை நாகர் குலத்தைச் சேர்ந்தவனாவான்.

**இவ்வாரம் இலக்கியப் பொழில் பகுதியில் 'திகவாவியும் தீர்த்தவாவியும்' என்ற ஆக்கத்தின் இரண்டாவது - இறுதிப் பகுதி இடம்பெறுகிறது.**

ஆனால், பின்னாளில் அவ்விகாரையின் பூர்வீகம் தெரியாவண்ணம் 'திகவாப்பி விகார' என பெயர் மாற்றம் பெற்றிருக்கலாம்.

சதாதிசையை நாம் நாகர் குலத்தவனென்று கூறுவது பலருக்கும் ஆச்சரியமாக இருக்கிறதா? துட்டகைமுனுவும் சதாதிசையும் கவந்தீசனின் பிள்ளைகளென்பது யாவரும் அறிந்ததே. முத்தசிவனின் மூன்றாம் மகனான மகாநாகனின் பூட்டப்

வாப்பியை கட்டினானென்று சொல்லப்பட்டிருக்கும்போது இப்பெயர் மகாவம்சத்தில் இல்லையே!

சிங்கள வரலாற்றாசிரியர்களும் பாடநூல்களும் கவந்தீசன் என்ற பெயரை சொல்லியிருப்பதாலேயே நாமும் அதனை இதுவரை சொல்லிவந்தோம். ஆனால், இப்பெயர் சிங்கள பௌத்த வரலாற்று நூலான மகாவம்சத்தில் காணப்படாததால் இப்பெயர் தொடர்பாகவும் நாம் ஆராய வேண்டியுள்ளது.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் அநுராதபுரியில் மகாநாம என்ற பௌத்த குரவராலேயே சிங்கள பௌத்த வரலாற்று நூலான மகாவம்சம் தொகுக்கப்பட்டது. இதனை ஆதாரமாகக் கொண்டுதான் சிங்கள மக்கள் வரலாற்றை அறிந்து வைத்துள்ளார்கள். அத்தகைய முக்கியத்துவமான நூலில் கவந்தீசன் எனும் பெயர் காணப்படாமலிருப்பது எப்படி?

மகாவம்சத்தின் அத்தியாயங்களில் அதிக இடத்தைப் பிடித்திருப்பது துட்டகைமுனு தொடர்பான அத்தியாயமாகும். அப்படியிருக்கையில் துட்டகைமுனுவின் தந்தை என்று பிறரால் சொல்லப்படும் 'கவந்தீசன்' எனும் பெயர் மகாவம்சத்தில் காணப்படாமலிருப்பது பேராச்சரியமன்றி வேறென்ன?

மகாவம்சத்தில் தமிழ்ப்பெயர்கள் யாவும் நெடில் குறிலாகவும், குறில் நெடிலாகவும் வல்லினம் மெல்லினமாகவும், மெல்லினம் இடையினமாகவும், சிதைத்து உருமாற்றி கொச்சைப்படுத்தி வெளியிடப்பட்டிருப்பது ஏலவே சொல்லப்பட்டதே. அப்படியான கொச்சைப் பெயர்களைக் கூட பின்னரும் விருப்பு வெறுப் பின்படி ஏனைய பிரசுரங்களில் மாற்றிஅமைத்து விடுவதும் நடைபெற்றுவருகிறது. அவற்றில் ஒன்றுதான் கவந்தீசன் எனும் பெயர்.

மகாவம்சத்தில் துட்டகைமுனுவினதும் சதாதிசையினதும் தந்தையென காக்கவண்ண திஸ்ஸ எனும் பெயர் சொல்லப்பட்டுள்ளது. மாறாக கவந்தீசன் என்ற பெயர் சொல்லப்படவில்லை. இது பலருக்கும் தெரியாது. சிங்கள மக்கள் எல்லோருமே மகாவம்சத்தினை முழுமையாக படித்திருக்க மாட்டார்களாதலால் அவர்களும் பத்திரிகைகள், பாடநூல்கள் ஊடாக கவந்தீசன் எனும் பெயரையே அறிந்து வைத்துள்ளனர்.

(திசை என்பது நாகரின் மரபுவழிப் பெயர்களில் ஒன்று. இதனையே பாளி மொழியில் மகாவம்சம் 'திஸ்ஸ' எனக் குறிப்பிடுகிறது. வாசகர்கள் இதனை மனதில் கொள்ளவும்.)

அவ்வாறாயின் காக்க வண்ண திசை எனும் பெயர் வெளியே மறைக்கப்பட்டதேன். அதற்கான அதிமுக்கிய காரணம் யாது? யாதேனும் மாறாட்டம் செய்வதற்காகவே இப்படியான பெயர்கள் மறைக்கப்படுவது வழக்கம்.

தமிழில் காக்கை வன்னியன் எனும் ஆட்பெயர் உண்டு. கி.பி 18 ஆம் நூற்றாண்டில் வன்னியில் அரசியற்றிய தமிழ் குறுநில மன்னனான பண்டாரவன்னியனின் அமைச்சனின் பெயரும் காக்கை வன்னியன்தான். ஆதலின் அதற்கு முன் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வழங்கப்பெற்ற

மகாவம்சத்தில் காக்க வண்ண திஸ்ஸ என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். (திசை என்பது நாகரின் மரபுவழிப் பெயர்)

இப்பெயர் என்னதான் சிதைக்கப்பட்டிருந்தாலும் ஏதோ ஒரு வகையில் இப்பெயரில் தமிழ் தொனிப்பதாலேயே அப்பெயர் கவந்தீசன் என்று மாற்றப்பட்டிருக்கலாம்.

மகாவம்சம் எல்லாளன் - துட்டகைமுனு போரினை தமிழர், சிங்களவர் போராக காண்பிக்கிறது. ஆனால், அது தமிழர் சிங்களவர் போரல்ல என்றும் எல்லாளனின் படையில் சிங்களவர் அங்கம் வகித்ததாகவும், துட்டகைமுனுவின் படையில் தமிழர் அங்கம் வகித்ததாகவும் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸா கூறியிருந்ததை யாரும் மறந்து விடலாகாது. இவை பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தன. அப்படியானால் இப்போர் யார் யாருக்கெதிராக என்ன நோக்கத்திற்காக நடைபெற்றது. துட்டகைமுனு யார்? அவனின் தந்தையென்று மகாவம்சத்தில் சொல்லப்படும் காக்க வண்ண திஸ்ஸ (கவந்தீசன்) யார்? அநுராதபுரியில் அறுபது ஆண்டுகள் அரசியற்றிய முத்தசிவனின் கொப்பாட்டப்பிள்ளைதான் காக்கவண்ண திஸ்ஸ.

ஜே.ஆர்.ஆட்சியில் கலாசார அமைச்சராகவிருந்த கௌரவ ஜே.டபிள்யூ.எம். லொக்குபண்டார கொழும்பில் தமிழ்த்தின விழாவொன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுகையில் ''தேவாநம்பியதீசனின் தந்தையின் பெயர் 'முத்துசிவன்' எனும் தமிழ்ப்பெயர்'' என்று கூறியிருந்தார். உண்மையில் அவர் முத்தசிவன் எனும் பெயரையே அப்படிக் கூறியிருக்கலாம். முத்தசிவனின்இரண்டாம் மகனான திசை. அனுராதபுரியில் ஆட்சிபீடமேறியதும் கி.மு. 247இல் பௌத்த சமயம் தழுவி தனது பெயருடன் 'தேவாநம்பிய' எனும் பகுதியையும்இணைத்து தேவாநம்பியதிசை எனும் நாமகரணத்தை சூடிக் கொண்டான். தேவாநம்பிய என்றால் 'கடவுளின் நண்பன்' (FRIEND OF GOD) என்று பொருள். அதற்கு முன்னர் வட இந்தியாவில் கலிங்கத்துப் போரில் வெற்றி வாகை சூடிய அசோகச் சக்கரவர்த்தியும் பௌத்த சமயம் தழுவியபின் தனக்கு 'தேவாநம்பிய அசோகன்' என்ற நாமகரணத்தை சூடிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு இலங்கைத்தீவில் முதன் முதல் பௌத்த சமயம் தழுவியவன் திராவிட இனத்தவனான நாகர் குலத்தைச் சேர்ந்த முத்தசிவனின் மகனான (தேவாநம்பிய) திசைதான் அவனின் பூட்டப்பிள்ளை முறையினன்தான் காக்க வண்ண திஸ்ஸ. (மகாநாகன் தேவாநம்பிய திசையின் தம்பி என்பது குறிப்பிடத்தக்கது.)

**வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.**

அப்படி திராவிடனான தேவாநம்பிய திசையின் பூட்டப்பிள்ளையான காக்க வண்ணதிசை கட்டிய குளம் 'திக' என்ற பெயரால் திகவாப்பியென்று குறிப்பிடப்பட்டிருப்பது வெறும் புரட்டு என்பது ஏலவே சொல்லப்பட்டதே. கவந்தீசன் குளத்தைக் கட்டிவிட்டு இன்னொருவனின் பெயரை அக்குளத்திற்குச் சூடுவானா?

பௌத்த சிங்கள வரலாற்று நூலான மகாவம்சத்தில் கவந்தீசன் என்ற பெயர் சொல்லப்படவில்லை யாதலால் இப்பெயர் எப்படி உருவாக்கப்பட்டதென்பதையும் நாம் ...

தில் சொல்லப்பட்டுள்ள காக்க வண்ண திஸ்ஸ என்ற பெயரை குடைந்துதான் கவந்தீசன் என்ற பெயரை உருவாக்கி உள்ளார்கள்.

KA(KA) VAN(NA)TISSA KAVANTISSA
க(ாக்க) வன் (ன) திசை கவன்திசை

இவ்வாறு காக்க வண்ண திஸ்ஸ என்ற பெயர் குடையப்பட்டு கவந்தீசன் என்ற பெயர் உருவாக்கப்பட்டதேன்? காக்கவண்ண திசையின் பிள்ளைகள்தான் துட்டகைமுனுவும் சதாதிசையும் ஆவர். சதாதிசைதான் அங்கு விகாரையைக் கட்டினான்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# விஜயின் தங்கை மாற்றப்பட்டார்!



'அன்போ வா'
-ஸ்ரீதேவிகா-

'பாசமலர்' முதல் 'திருப்பாச்சி' வரை அண்ணன் தங்கை சென்டிமெண்டுக்கு தனி மரியாதை இருந்து வருகிறது. அதுவும் இயக்குனர் பேரரசுவுக்கு தங்கை சென்டிமெண்ட் பிள்ளையார் சுழி மாதிரி.

'திருப்பாச்சி'யைத் தொடர்ந்து 'சிவகாசி'யிலும் விஜய்க்கு ஒரு தங்கை இருக்கிறார். மல்லிகா மாதிரி ஒரு அழகான தங்கையைத் தேடி கடைசியில் ஸ்ரீதேவிகாவை ஒப்பந்தமும் செய்தனர். பிறகுதான் ஸ்ரீதேவிகாவுக்கு ஞானம் கிடைத்திருக்கிறது.

'ராமகிருஷ்ணா', 'அந்த நாள் ஞாபகம்', 'அன்பேவா' என தொடர்ந்து கதாநாயகியாக நடித்துவருகிறேன். திடீரென்று தங்கையாக நடித்தால் அதன் பின் கதாநாயகி வேடம் கிடையாது என்று மண்டைக்குள் மணியடிக்க, பேரரசுவிடம் பேசியிருக்கிறார் ஸ்ரீதேவிகா. அவரும் பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுத்துவிட்டார்.

இப்போது 'சிவகாசி'யில் மலையாள சேச்சியை தேடிப்பிடித்திருக்கிறார்கள். இப் படத்தில் நீண்ட நாட்களுக்குப்பின் வையாபுரி விஜய் படத்தில் நடிக்கிறார்.

# அர்ஜுனின் 'மணிகண்டா'

மலர் காம்பைன்ஸ் தயாரிக்கும் படம் மணிகண்டா. இப் படத்தில் அர்ஜுன் தந்தை — மகன் என இரட்டை வேடங்களில் நடிக்கிறார். தந்தை அர்ஜுனுக்கு ஜோடியாக உமாவும், மகனுக்கு ஜோடியாக ஜோதிகா — மாளவிகா ஆகியோரும் நடிக்கின்றார்கள்.

அர்ஜுனுடன் எட்டு வில்லன்கள் நடிக்கிறார்கள். (பி.வாசு, ஆசிஷ், வித்யார்த்தி, பசுபதி, ஹேமந்த், சத்யபிரகாஷ், ஓ.ஏ.கே. சுந்தர், தென்னவன், சம்பத்குமார்)

இம்மாதம் திரைக்குவரும் இப் படத்திற்கு தேவா இசையமைக்கிறார். கதை — வசனம் — ரத்ன குமார் எழுத, திரைக்கதை — டைரக்ஷனை செல்வா கவனிக்கிறார்.

15 வருடங்களாக தேர்தல் நடைபெறாத கீரிம்பட்டி என்ற கிராமத்தில் நடந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து இந்தப் படத்தில் கதை அமைக்கப்பட்டுள்ளது.

# சிந்து துலானியின் கவர்ச்சி நடனம்

அலையடிக்குது படத்தில் சிந்து துலானி நடிக்கும் கற்பழிப்பு காட்சியில் யுகேந்திரன் ஒரு ஏற்றுமதி நிறுவனத்தின் உரிமையாளர். அவன் ஒரு காமுகன். பல பொம்பளைகளை ஆசை காட்டி ஏமாற்றி கற்பழித்தவர். அவரைச் சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதற்காக சிந்துதுலானி விபசாரத் தொழில் செய்யும் பொம்பளைபோல் நடிக்கிறார்.

அவரை யுகேந்திரன் விலைபேசி கடற்கரைக்கு அழைத்து செல்கிறார். ஆள் அரவமற்ற இடத்தில், சிந்து துலானியை முழுமையாக பார்க்கவேண்டும் என்று யுகேந்திரன் கேட்கிறார். உடனே சிந்து துலானி உடைகளைக் களைந்து, நீச்சல் உடைக்கு மாறுகிறார்.

இப்படி ஒரு காட்சி சமீபத்தில் அலையடிக்குது படத்துக்காக படமாக்கப்பட்டது. இப் படம் இம்மாத இறுதியில் திரைக்கு வருகிறது.




# ஒரு பாடலுக்கு கிரண்

ஒரு பாடலுக்கு ஆடுகின்ற வாய்ப்பை பல நடிகைகள் பங்குபோட்டுக் கொண்டதால் நொந்து நூலாகிப் போனார் கிரண். இதனால் முகாமை திருப்பி மும்பைக்கு போனார். ஆனால், சில மாதங்கள் சென்னைப்பக்கமே தென்படாத கிரண், திடீரென ஒரு நாள் திரும்பி வந்தார்.

ஒரு பட பூஜையில் அவரைப் பார்த்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். வேண்டாத சதை அனைத்தையும் நீக்கி விட்டு சிக்கென ஃபிரெஷ் ஆகா வந்திருந்தார்.

இப்போது மீண்டும் வாய்ப்பு அவரது வீட தேடிப் போயிருகிறது.

அர்ஜுன் — சினேகா நடிக்கும் 'சின்னா' படத்தில் இவரை நடிக்க அழைத்தார்கள். அப் படத்தில் இவர் போட்டிருக்கும் ஒரு குத்தாட்டம், கவர்ச்சி நடிகைகள் மனதில் புளியைக் கரைத்து வார்த்த மாதிரி உள்ளதாம்.

எப்படியோ தனது இருப்பை நிலை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்ற போட்டியில் முழுமூச்சாக இறங்கியிருக்கிறார் கிரண்.

அவரின் ஆட்டத்தைப் பார்த்து இப்போதே பல இயக்குனர்கள் அவரது வீட்டுக் கதவைத் தட்டுகிறார்கள்.

# தேவயானியின் டென்சன்

சமீபத்தில் 'இன்றைய காதல்' என்கிற டைட்டிலில் ஒரு படம் தொடங்கப்பட இருந்தது. படத்தின் கதாநாயகன் நாற்பது வயதுக்காரர். படத்திற்கு கதாநாயகி தேவயானி. தொலைபேசியில் மட்டுமே தேவயானியிடம் பேசிவிட்டு பூஜை அழைப்பிதழைக் கொடுப்பதற்காக வீட்டிற்கு போயிருக்கிறார் இயக்குனர். அட்வான்ஸ் கேட்டிருக்கிறார் தேவயானி. விரைவில் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, அழைப்பிதழை நீட்டியிருக்கிறார் அந்த இயக்குனர்.

பிரித்துப் பார்த்தவருக்கு அதிர்ச்சி. காரணம், தேவயானியை பல போஸ்களில் அந்த கதாநாயகன் கட்டிப்பிடித்துக் கொண்டு நிற்பது மாதிரி கிராஃபிக்ஸ் செய்திருந்தாராம் இயக்குனர்.

தேவயானி டென்ஷனானதோடு பத்திரிகையைக் கிழித்து எறிந்துவிட்டாராம். தனது அனுமதியைப் பெறாமல் இவ்வாறு கட்டிப் பிடித்தபடி போட்டோக்களை எடுத்தது தொடர்பான பிரச்சினையை இப்போது நடிகர் சங்கத்திற்கு கொண்டுபோயிருக்கிறார் தேவயானி. அதுநடிகர்சங்கத்தில் புகைந்து கொண்டே இருக்கின்றதாம்.

# வல்லவனில் நான்கு கதாநாயகிகள்

மனசைத் தொடுகிற மாதிரி ஒரு விஷயத்தை சொல்லணும். அதற்காகத்தான் நான் நாலு வேடத்தில் நடிக்கிறேன். 3 பேரை கதாநாயகியாகத் தேர்வு செய்து இருக்கிறேன்.


'மன்மதன்' வெற்றியைத் தொடர்ந்து சிம்பு அடுத்து அடியெடுத்து வைத்துள்ள படம் 'வல்லவன்' இதில் 4 வேடங்களை ஏற்றுள்ள அவருக்கு காதல் சந்தியா, நயன்தாரா, ரீமாசென் ஆகியோர் ஜோடி. இந்த படத்தின் டைரக்டரும் சிம்புதான். அது பற்றி சொல்கிறார் சிம்பு:—

மன்மதன் படத்திலேயே நான் ஓரளவு டைரக்டர் ஆயிட்டேன். இப்போது எனது முழுத் திறமையையும் நிரூபிப்பதற்காக வல்லவனைத் தொடங்கியுள்ளேன்.

எனக்கு 20 வருஷமா சினிமாவைத் தெரியும். இந்த தொழிலுக்கு எனக்குப்பின்வந்து என்னைத்தாண்டிப் போனவங்களும் உண்டு. அதனால்தான் 'மன்மதன்' கதையில் இருந்து அனைத்து விஷயங்களிலும் நான் முழுகவனம் செலுத்தினேன். வெற்றி கிடைத்தது. தேறியுள்ளேன் என்ற பெயரும் கிடைத்தது. வல்லவன் வந்ததும் இவனை அசைக்க முடியாது என்று சொல்லுவாங்க.

'வல்லவன்' கதை எனது மாறுபட்ட அனுபவங்களால் கிடைச்சுது. இதில் 4 வேடங்களில் நடிக்கிறேன். பள்ளி மாணவன், கல்லூரி மாணவன், வேலை தேடும் வாலிபன், மற்றொரு சிம்பு மர்மமானவன்.

இந்தப்படத்தில் காதல், காமெடி, கிளாமர், அதிரடி, சென்டிமெண்ட் அத்தனையும் இருக்கும். மற்றவர்கள் இயக்கும் படங்களுக்கு கருத்து சொல்வது முறையல்ல. எனவே என் விருப்பப்படி 'வல்லவன் அமைய வேண்டும் என்பதற்கான நானே முழுக்க முழுக்க டைரக்ஷன் செய்



வது என்று முடிவு செய்திருக்கிறேன்.

ரசிகர்களின் சந்தோஷத்துக்கு நடுவில் அவங்க மனசைத் தொடுகிற மாதிரி ஒரு விஷயத்தை சொல்லணும். அதனால்தான் நாலு வேடத்தில் நடிக்கிறேன். இதில் நடிக்கும் மூன்று கதாநாயகிகளுக்கும் சொல்லிக் கொள்கின்ற மாதிரி நல்ல ரோல் உண்டு.

சும்மா வந்திட்டு போறமாதிரி இல்லை. அப்பாதான் எனக்கு கமிரா முதல் ரீரிக்கார்டிங் வரை எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அதை என் ஸ்டைலில் கொடுக்கிறேன். அவர் கிட்ட பெற்ற அனுபவம்தான் எனக்கு பாடம்.

எல்லா விஷயத்திலும் பத்து வருஷ அனுபவ முதிர்ச்சி எனக்கு இருக்கிறது. அதனால்தான் பத்து வருடத்திற்கு பின்னர் தொடங்க வேண்டிய வேலையை இப்போதே தொடங்கியுள்ளேன்.

அர்ஜுன் படத்தில்



'ஒருநாள் ஒரு கனவு'

# த்ரிஷாவை முந்தும் ஜோதிகாவின் படங்கள்

த்ரிஷாவின் நம்பர் 1 நாற்காலிக்குப் போட்டியாக கிளம்பியிருக்கிறார் ஜோதிகா. தெலுங்கில் இவர் நடித்த படம் 'தாகூர்'. சிரஞ்சீவி நடித்த இப் படம் தமிழில் வெளியான 'ரமணா' படத்தின் மொழிமாற்றுப்படமான இது வெள்ளிவிழாக் கண்டது.

அடுத்து நாகர்ஜுனுடன் சேர்ந்து 'மாஸ்' என்ற படத்தில் கிளாஸான ஒரு ரோல் செய்தார் ஜோதிகா. லாரன்ஸ் இயக்கிய இந்தப் படமும் ஆந்திராவை அலற வைத்தது.

இப்போது, 'சந்திரமுகி' படம் தமிழ் நாட்டைப் போலவே தெலுங்கிலும் லக... லக... லக... என்று ஓடுகிறது. 'சந்திரமுகி' லெவலுக்கு ரசிகர்கள் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் தெலுங்கில் வெளியாகிறது 'மன்மதன்'.

ஒன்றுக்கு நான்கு ஹீரோயின்கள், ஹைடெக் பாடல்கள், கலக்கல் கிராபிக்ஸ் காட்சிகள், அசத்தல் ஜோதிகா என ஆந்திராக்காரர்கள் விரும்பும் அனைத்தும்

[illegible]


ஆவலோடு எதிர்பார்க்கிறார் தயாரிப்பாளர்.

'மன்மதன்' ஆந்திராவில் ஓடினால், ஜோதிகா முதல் வரிசைக்கு வந்துவிடுவார் என்கிறார்கள்.

இதற்கிடையில் ஆந்திராவில் பிஸியாக இருக்கும் த்ரிஷா அங்கு படத்தை முடித்த கையோடு தமிழுக்கு வந்து தொடர்ச்சியாக மூன்று நான்கு படங்களை



'இங்கிலீஸ்காரன்'
-நமீதா-



# ...ல் எடையை ...றக்கும் கமல்

வெளிநாடுகளில் படமாக்கப்பட்ட 'ஜப்பானில் கல்யாண ராமனும்', 'உலகம் சுற்றும் வாலிபனும்' தவிர மற்ற அனைத்துப் படங்களும் தோல்வியே தழுவின. ஆனாலும், தொடர்ந்து வெளிநாட்டை மையமாக வைத்து படங்கள் வந்தவண்ணம்தான் இருக்கின்றன.

'வேட்டையாடு விளையாடு' அப்படியொரு படம். சுங்க அதிகாரியாக இருக்கும் கமல், கிரிமினலான கமலைத்தேடி அமெரிக்கா செல்கிறார். அங்கு நடக்கும் அக்ஷன் சம்பவங்கள் படத்தின் பிரதான கதை.

பெரிய கெட்டப் மாறுதல்கள் இதில் கமலுக்கு இல்லை. ஆனால், இந்தக் கேரக்டருக்காக உடல் எடையை குறைக்கிறார் கமல். நினைத்த நேரம் உடம்பை அதிகரிக்கவும், குறைக்கவும் கமல் கைவசம் மந்திரம் உள்ளது. 'ஆளவந்தானில்' வந்த ஆஜானுபாகுவான் கமலா என வியக்க வைத்தார் 'தனாலி' கமல். அதுமாதிரி ஒரு மாறுதலுக்கு தயாராகிறார் இந்த எலாஸ்டிக் மனிதர்.

'வேட்டையாடு விளையாடு' போலவே தனுஷின் 'திருடன் போலிஸ்' படமும் வெளிநாட்டில் தயாராகிறது. இப்படத்தின் சில பகுதிகளை ரோம், லண்டன், அவுஸ்திரேலியா உட்பட பல நகரங்களில் படமாக்குகிறார்கள்.

வெளிநாடுகளில் படப்படிப்பு என்று கூறிவிட்டு, வெறும் டூயட்டை மட்டும் சுட்டுக் கொண்டு வருகிறவர்களும் உண்டு.

'வேட்டையாடு விளையாடு' படமும் 'திருடன் போலிஸ்' படமும் வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்டு ஒரே நேரத்தில் வெளியாகவுள்ள படங்களாகும். 'திருடன் போலிஸ்' எப்படி என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# அந்நியனுக்குப் பின் 'மஜா'

மலையாளிகள் வித்தியாசமானவர்கள். படங்களின் பெயரை வைத்தே இதை புரிந்து கொள்ளலாம். உதாரணத்துக்கு சில. 'பூச்சைக்க ஒரு மூக்குத்தி' (பூனைக்கு ஒரு மூக்குத்தி) பெட்டைக்கோழி கூறுகிறது. இந்த வரிசையில் எளிமையான ஒரு தலைப்பு 'தொம்மனும் மக்களும்'.


இந்தப் படம்தான் அடுத்து விக்ரம் நடிக்கவிருப்பது. மலையாளத் தலைப்பை அப்படியே வைப்பது தமிழர்கள் தலையில் கல்லை வைப்பதற்கு சமம். ஆகவே 'மஜா' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

'மஜா'வில் விக்ரமுக்கு ஜோடியாக நடிப்பவர் அசின். மணிவண்ணன் அப்பாவாகவும், பசுபதி அண்ணனாகவும் நடிக்கிறார்கள். விக்ரம் ஷார்ப் அண்டு டெம்பர் பார்டி. கோபம் வந்தால் இவரது கையும் கால்களும்தான் பேசும். பசுபதியும் இவருக்கு சளைத்தவரல்ல. ஆனால் இவரிடம் கொஞ்சம் ஹியுமரும் உண்டு என்பது ஆறுதல்.

'அந்நியன்' வெளியாகி அதன் வெற்றியை முழுதாக ருசித்த பிறகே 'மஜா' என்று தீர்மானித்திருக்கிறார் விக்ரம். மலையாள 'தொம்மனும் மக்களும்' படத்தை இயக்கியவரே 'மஜா'வையும் டைரக்ட் செய்கிறார். தயாரிப்பவர் ராக் லைன் வெங்கடேஷ்.

படத்திற்குப் படம் வித்தியாசம் காட்டிவரும் விக்ரமுக்கும் இப்படத்தில் வித்தியாசமான தோற்றம் உண்டு என்று கூறுகிறார் டைரக்டர். இருந்தாலும் விக்ரம் உலக நாயகன் என்ற அளவிற்குப் பேசப்பட வேண்டும் என்பதே அவரின் அவாவாகும்.

'அந்நியனை'த் தொடர்ந்து சங்கர் தனது அடுத்த படமான 'றோபோவை' ஆரம்பிக்கப் போவதாக பேசப்படுகிறது. இதில் யார் நடிப்பார்கள் என்பது இன்னமும் முடிவாகவில்லை. 'அந்நியன்' வெளியாகிய பின்னர்தான் இது தெரியவரும்.



'அந்நியன்' -விக்ரம்-

# அர்ஜூன் படத்தில் அருண்குமார்

சொந்த இயக்கத்தில் சோடை போகாமல் தப்பித்தவர் அர்ஜூன். வரிசையாக படங்கள் காலை வாரிக்கொண்டிருந்த நேரத்தில் 'ஜெய் ஹிந்த்' என ஜெயித்தவர் இவர். தொடர்ந்து சேவகன் இவருக்கு சேவை செய்தது.

'சின்னா', 'ஆணை', 'மணிகண்டா' படங்களைத் தொடர்ந்து மீண்டும் டைரக்டர் நாற்காலியில் அமர்கிறார் அர்ஜூன். இவரே சொந்தமாக இயக்கி தயாரிக்கும் இந்தப்பட்டத்திற்கு 'மதராஸி' என்று பெயர் வைத்திருக்கிறார். 'சின்னா'வின் சினேகாதான் 'மதராஸி'யிலும் இவருக்கு ஜோடி.

இதுதவிர வேறொ படத்தையும் இயக்குகிறார் அர்ஜூன். முதல் முறையாக இதில் அர்ஜூனை தவிர்த்து வேறொருவர் கதாநாயகனாக நடிக்கிறார். நல்ல கதைக்காக காத்துக்கொண்டிருந்த அருண்குமாருக்கு அடித்திருக்கிறது அதிர்ஷ்டம். அர்ஜூன் இயக்கத்தில் கதாநாயகனாக அருண்குமார்தான் நடிக்கிறார்.

எணையோர் தேர்வு நடைபெறுகிறது.

# மும்பை முக்கனிகளின் '2005'

மலட்டி லிங்க் புரொடக்ஷன்ஸ் என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்க பிரபல மலையாளப்பட இயக்குநர் விஜய் ரோஷன் இயக்கும் முதல் தமிழ்ப்படம் 2005.

மலையாளத்தில் மாபெரும் வெற்றிபெற்ற 'மாங்கல்யா பல்லக்கு', 'மாமி', 'பிரேமக்னி' உட்பட நாற்பத்தாறு படங்களை இயக்கிய முன்னணி மலையாள இயக்குனரான விஜய்ரோஷன் தமிழில் இயக்கும் முதல் படம் இது.

தன் முதல் தமிழ்ப்படம் வெற்றிப்படமாக அமைய வேண்டும் என்ற ஆசையில் அனைத்து தரப்பு மக்களையும் கவரும் வகையில் க்ரைம் த்ரில்லர் கதையை தேர்வு செய்திருக்கிறாராம். '2005' படத்தின் தலைப்பு மட்டுமல்ல, கதையும் வித்தியாசமானதுதான்.

உச்சக்கட்டம், சிகப்பு ரோஜாக்கள், மன்மதன் வரிசையில் பரபரப்பாக பேசப்படும் க்ரைம் த்ரில்லர் படமாக உருவாக்கப்படும் இந்தப் படத்தில் மும்பை முக்கன்னிகள் நடிக்கின்றனர். இதில் ஆர்த்தி பூரி என்பவர் நாயகி வேஷம் போட, க்ரிஷ்மா, ஷிக்காஷா ஹிஜ் என்ற இரண்டு மும்பை அழகிகளும் கிளுகிளுப்பாக நடித்துள்ளனர். இவர்கள் மூவரும் நடிப்பில் மட்டுமல்லாது கவர்ச்சியிலும் போட்டி போட்டுக் கொண்டு கலக்கியிருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு ஜூனியர் சில்க்கின் கவர்ச்சி ஆட்டம் வேறு. மொத்தத்தில் 2005 இளைஞர்களை ஈர்க்கும் படமாக இருக்கும் என்பது நிச்சயம்.

நவீன்மயூர், ஷோப்ராஜ் இருவரும் கதாநாயகர்களாக நடிக்கிறார்கள். இவர்களில் நவீன்மயூர் ஆர்த்திபூரியை காதலிக்கும் நாயகனாக ரொமான்டிக் ஹீரோவாகவும், ஷோப்ராஜ் அக்ஷன் வேடத்திலும் நடிக்கிறார்.

ஒரு கொலையைத் தொடர்ந்து அங்கேறும் ஐந்து கொலைகள்தான் 2005 படத்தின் ஒரு வரிக்கதை.



இங்கிலீஷ்காரன் -நமீதா-

# சந்திரமுகி சாதனையை முறியடிப்பது யார்?

மறுபடியும் ரஜினியின் அடுத்த படம் வந்து முறியடித்தால்தான் உண்டு. இல்லையேல் 'சந்திரமுகி' படத்தின் வெற்றியை முறியடிக்க யாராலும் முடியாது.

படையப்பா வசூலையும் மிஞ்சி விட்டது சந்திரமுகியின் வசூல்! ரிஷிகேஷில் இருக்கும் ரஜினிக்கு படத்தின் வசூல் குறித்து தகவல்கள் சுடச் சுட போய்விடுகிறதாம்.

ரஜினி அடுத்து நடிக்கும் படம் குறித்து ஐந்து பேருடைய பெயர்கள் உள்ளதாம். அதில் முதலிடத்தில் இருப்பவர் எடிட்டர் மோகன். இவர் 'சந்திரமுகி' தயாரிப்பின் போதே 25 லட்சத்தை ரஜினியிடம் அட்வான்சாக கொடுத்திருக்கிறார். அதை வாங்கிக் கொண்ட ரஜினி, நான் எப்போது வேண்டுமானாலும் உங்களுக்குப் படம் பண்ணுவேன். என்னை அவசரப்படுத்தக் கூடாது என்றாராம். அதைக் கட்டளையாக ஏற்றுக் கொண்டாராம் மோகன். அதன் பின்பே காசோலைகள் பரிமாறப்பட்டதாம்.

ரஜினி அழைக்கிற எந்த நேரத்திலும் தயாராக இருக்க வேண்டுமே. அதற்காக சமீபத்தில் வந்த இந்திப்படம் ஒன்றின் உரிமையை வாங்கி வைத்திருக்கிறாராம் மோகன்.

இந்தியில் பலகேடிகளை அள்ளிய 'வக்த்' என்ற படத்தில் அமிதாப் நடித்த வேடத்தில் ரஜினியும், அக்ஷய்குமார் நடித்த வேடத்தில் ஜெயம் ரவியும் நடிப்பார்களாம்? இப் படத்தை இயக்குவது ஜெயம் பட இயக்குனர் ராஜாவே

# உங்களுக்கு ஐஸ் சொந்தமா?

அப்பா ஒயின்ஷோப் ஒன்றின் உரிமையாளர். பொண்ணை பார்த்தால் ஜொள்ளு அடித்தமாதிரி இக்கு வருகிறது. போதும் போதாததற்கு 'கற்க கசடற' படத்தில் காட்சிக்கு காட்சி கவர்ச்சி மழை பொழிந்திருக்கிறார் லட்சுமிராய். பெயருக்கு பின்னால் ஒட்டிக் கொண்டிருக்கிற ராய்தான் இவருக்குப் பிரச்சினையே.

நீங்கள் ஐஸ்வர்யா ராய்க்கு சொந்தமா என்கிறார்களாம் பலர். அவரும் நடிகை, நானும் நடிகை. அந்தவகையில் சொந்தம் தான் என்கிறார் லட்சுமிராய். சினிமாவில் நடிக்க வந்தது எப்படி என்ற கேள்வி ஒன்றை கேட்டாகவிட்டால் தூக்கம் வருமா? கேட்டோம்.

மாடலிங்கிற்காக நான் எடுத்த படம் ஒன்றை பார்த்த டைரக்டர் ஆர்.வி.உதயகுமார் என்னை தன் படத்தில் கதாநாயகி ஆக்கிவிட்டார். சௌந்தர்யா மாதிரி கனவுக்கன்னிகளை அறிமுகப்படுத்தியவர் ஆயிற்றே. கண்ணை மூடிக் கொண்டு ஓ.கே சொல்லிட்டேன். படமும் ரிலீஸ் ஆயிடுச்சு. தியேட்டர் பக்கம் போகமுடியலை, பிடுங்கிறாங்க ரசிர்கள். ஒரே ஆட்டோக்கிராஃப் மயம். நான்தானா என்று கிள்ளி பார்க்கத் தோன்றுகின்ற அளவு சந்தோஷத்தில் துள்ளுகிறார் லட்சுமி.

இளைஞர்கள் மனசில் இடம் பிடிக்க இவர் கண்டு பிடித்திருக்கும் பார்முலாவை கேட்கவில்லையே. முதலில் கவர்ச்சியாக நடித்து அவர்களின் கண்களில் விழுவாராம். அதன் பின்பு நடிப்புத் தேவதை என்று பெயரெடுத்து இதயத்தில் இடம் பிடித்துவிடுவாராம். இன்றைக்கு இளைஞர்கள் விரும்புவது கவர்ச்சியைத்தான். அதைத் தாராளமாக கொடுப்போம். அதில் தப்பு என்ன என்று கேட்கிற லட்சுமி, அதற்கும் ஒரு எல்லை வச்சிருக்கேன் தெரியுமா என்கிறார் உஷாராக.

தங்கை சொல்வதை பக்கத்தில் நின்று கண்கள் படபடக்க பார்த்துக் கொண்டிருந்த லட்சுமிராயின் சகோதரி பக்கம் திரும்பி அவங்க நடிக்க வருவாங்களா? என்று பார்வையை அவர் பக்கம் தாவவிட்டால், ஹலோ மாஸ்டர் என்று ... லட்சுமி. அவங்கள் நடிக்க வரமாட்டாங்க. தப்பி தவறி எதுவும் எழுதி விடாதீர்கள் என்றார் படபடவென்று.

நிறைய இயக்குனர்கள் கதைக் கேட்டிருக்கிறார்கள். கதை கேட்டதும் நல்லாயிருந்தா இன்னும் கொஞ்ச வருஷத்துக்கு தமிழ்நாடுதான் என்று தத்தி தத்தி தமிழ் பேசுது கிளி. அடுத்த ஆறு மாதத்திற்குள் பேராசிரியர் பெரியாதாசன் லெவலுக்கு தமிழ் பேசுவார்



# ராசி பலன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1, 8) உரிய செவ்வாய் 11இல் இருப்பது நல்லது. மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாணவாய்ப்பு உண்டு. மன அமைதி இருக்கும். (2,7) உரிய சுக்கிரன் இரண்டில் ஆட்சியாக இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். தாய் நலம். வாகன சுகம் உண்டு. (3,6) உரிய புதன் இரண்டில் இருப்பது நல்லது. இளைய சகோதரத்துக்கு நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. (9, 12) உரிய குரு 6இல் இருப்பது கூடாது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. சயன சுகம் இருக்காது. (10, 11) உரிய சனி மூன்றில் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் ராசியில் ஆட்சியாக இருப்பது நல்லது. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது கூடாது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. எதிரிகளால் தொல்லையிருக்கும். (2, 5) உரிய புதன் ராசியில் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். நாலுக்குரிய சூரியன் ராசியில் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (7, 12) உரிய செவ்வாய் 10இல் இருப்பது சிறப்பில்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. குடும்பத்தில் அமைதி இருக்காது. (9,10) உரிய சனி இரண்டில் இருப்பது தோசம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1, 4) உரிய புதன் 12இல் இருப்பது பலன் செய்யாது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் கூடாது. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (5, 12) உரிய சுக்கிரன் 12இல் இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. குழந்தைகள் கல்வியில ஆர்வம் காட்டுவர். (6, 11) உரிய செவ்வாய் 9இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளால் தொல்லையிருக்கும். மூத்த சகோதரத்துக்குகூடாது. நண்பர்களால் பிரச்சினை ஏற்படலாம். (7,10) உரிய குரு 4இல் கேதுவுடன் இருப்பதுதோசம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (8,9) உரிய சனி ராசியில் இருப்பது கூடாது. தகப்பனுக்கு நல்லபலன் இல்லை.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் விருச்சிகம் முதல் மகரம் வரை சஞ்சரிப்பதால் வாரத்தியிலும் பிற்பகுதியிலும் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். மன அமைதி இருக்கும். இரண்டுக்குரிய சூரியன் 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். (3,12) உரிய புதன் 11இல் இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,11) உரிய சுக்கிரன் 11இல் ஆட்சியாக இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரருக்கு நல்ல பலன் உண்டு. (5,10) உரிய செவ்வாய் 8இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகள் தான் தோன்றித்தனமாக செயல்படுவர். (7, 8) உரிய சனி 12இல் இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 10இல் இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் விசேஷம். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். மன அமைதி இருக்கும். பிரயாணவாய்ப்பு உருவாகும். (2, 11) உரிய புதன் 10இல் இருப்பது சிறப்பு அல்ல. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களுக்கு நல்லபலன் இல்லை. (3,10) உரிய சுக்கிரன் 10இல் இருப்பதில் பிரயோசனம் இல்லை. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (4,9) உரிய செவ்வாய் 7இல் இருப்பது தோசமான நிலை. பெற்றோருக்கு நலமில்லை. வாகன சுகம் இருக்காது. (6, 7) உரிய சனி 11இல் இருப்பது விசேஷம். எதிரிகள் நண்பராவர். உடல் ஆரோக்கியம் உண்டு. திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 9இல் இருப்பதில்பயன் இல்லை. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதில் பிரயோசனம் இல்லை. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழிலில் முன்னேற்றம் இருக்காது. மன அமைதி இருக்காது. (2, 9) உரிய சுக்கிரன் 9இல் ஆட்சியாக இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்ல பலன் உண்டு. (3, 8) உரிய செவ்வாய் 6இல் இருப்பது விசேஷம். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4, 7) உரிய குரு, ராசியில் கேதுவுடன் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். (5, 6) உரிய சனி 10இல் இருப்பது சிறப்பு என்றுகூற முடியாது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டமாட்டார். ராசிக்கு ராகு, கேது தொடர்பு கூடாது.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1, 8) உரிய சுக்கிரன் 8இல் ஆட்சியாக இருப்பது விசேஷம். இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது கூடாது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். மன அமைதி இருக்காது. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (2,7) உரிய செவ்வாய் 5இல் இருப்பது பலன் செய்யாது. கையில் பணம் இருக்காது. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். (3,6) உரிய குரு 12இல் மறைவது கூடாது. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. பகை தூரவிலகும். உடல் ஆரோக்கியம்பாதிக்கலாம். (4, 5) உரிய சனி 9இல் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். தொழில் ஸ்தானமான 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில் துறை முன்னேறும். (9, 12) உரிய புதன் 8இல் இருப்பதில் பயன் இல்லை. பிதாவுக்கும் கூடாது. சயன சுகம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1, 6) உரிய செவ்வாய் 4இல் இருப்பது தோசம். இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளின் தொல்லை இருக்கும். (2,5) உரிய குரு 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 8இல் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. இளைய சகோதரத்துக்கு கூடாது. (7,12) உரிய சுக்கிரன் 7இல் இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்காது. தொழிலுக்குரிய சூரியன் 7இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. சனி வழிபாடு ஆறுதல் தரும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் கேதுவுடன் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். மன அமைதி இருக்காது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (2, 3) உரிய சனி 7இல் இருப்பது கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (5, 12) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது நல்லது. குழந்தைகளின் செயல்பாடு திருப்திதரும். சயன சுகம் உண்டு. (6,11) உரிய சுக்கிரன் 6இல் இருப்பதில்பலன் இல்லை உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களால் தொல்லை வரலாம். எதிரிகளின் கையோங்கலாம். (7,10) உரிய புதன் 6இல் இருப்பது நல்லது. திருமணவாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**மகரம்: உத்தரடாம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பு. தொடங்கும் காரியங்கள் வெற்றிபெறும். பிரயாண வாய்ப்பு உண்டு. கையில் பணம் இருக்கும். மன அமைதி இருக்கும். (3, 12) உரிய குரு 9இல் இருப்பது நல்லது. இளைய சகோதரத்துக்கு நல்லது. சயன சுகம் உண்டு. (4,11) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது தோசம். வாகன வசதி இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களால் செலவு அதிகரிக்கும். தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (5,10) உரிய சுக்கிரன் 5இல் ஆட்சியாக இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். ராசியைக் குரு பார்ப்பது விசேஷம். சகலதோசமும் நிவர்த்தியாகும்.

**இவ்வார 'ராசிபலன்' 23-05-2005 முதல் 29 -05-2005வரை**

**பொ. சந்திரன்**

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 5இல் இருப்பது கூடாது. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். மன அமைதி இருக்காது. பிரயாணவாய்ப்பு தடைப்படலாம். சயன சுகம் இருக்காது. (2, 11) உரிய குரு 8இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. (3, 10) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (4,9) உரிய சுக்கிரன் 4இல் ஆட்சியாக இருப்பது நல்லது. வாகன வசதி இருக்கும். பெற்றோருக்கு நல்லது. அதிஷ்டம் இருக்கும். தெய்வ நம்பிக்கை வலுப்பெறும். 7க்குரிய சூரியன் நாலில் பலன் செய்யாது ஆனால், புதனுடன் கூடியபடியால் நல்ல பலனைச் செய்யும். திருமண பலன் உண்டு.

### இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| ராகு | புதன் | சூரி சுக்கிரன் | சனி |
| செவ் | செவ்வாய் பூரட்டாதி குரு; சுக்கிரன் ரோகிணி சந்; புதன் ரோகிணி சந்; சூரியன் ரோகிணி சந்; குரு அத்தம் சந்; சனி புனர்பூசம் குரு | | |
| | | | |
| | | | குரு கேது |

வைகாசி 9 முதல் 15 வரை

சந்திரன் விருச்சிகம் முதல் மகரம் வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1, 10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. ஆனால், கேதுவுடன் கூடியது தோசம். மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். மன அமைதி இருக்காது. (2, 9) உரிய செவ்வாய் 12இல் இருப்பதில் பிரயோசனம் இல்லை. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. (3, 8) உரிய சுக்கிரன் மூன்றில் ஆட்சியாக இருப்பது நல்லது. இளைய சகோதரத்துக்கு நல்லது. சிறு தூரப் பிரயாணம் அமையும். (4, 7) உரிய புதன் மூன்றில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. வாகன வசதி இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். ராசியை சனி பார்ப்பது கூடாது. சனி வழிபாடு ஆறுதல் தரும்.

# திகவாவியும் தீர்த்தவாவியும்!....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி பௌத்த சமயம் சார்ந்திருந்த திராவிடர்களான தந்தையும் மைந்தனும் கட்டிய குளத்தையும் விகாரையையும் சாதகமாகக் கொண்டு அது சிங்களவர்களின் நிலமென்றும் முற்காலத்தில் அங்கு சிங்களவர்களே வாழ்ந்தார்களென்றும் பசப்புவதில் உண்மை இருக்கப் போகிறதா? வடக்கிலும் கிழக்கிலும் பழைய விகாரைகளின் அல்லது புத்த சின்னங்களின் எச்சங்களை கண்ட மாத்திரத்தில் அங்கு முற்காலத்தில் சிங்களவர்கள் வாழ்ந்ததாக தொடர்ச்சியாக கூக்குரலிட்டு வருகிறார்கள். இது திராவிடர்கள் பௌத்தர்களாக இருந்ததை மறைக்கவும் அதன் மூலம் தமிழ் நிலத்தை கபளீகரம் செய்யவுமான தந்திரமாகும். இந்த தந்திரங்களை முன்னமேயே தமிழர் விமர்சியாமல் விட்டமைதான் இவர்களுக்கு பெரும் வாய்ப்பாக அமைந்ததெனலாம்.

இலங்கைத் தீவில் பிரிட்டிஷ் ஆட்சி முடிவுற்ற பின்னர்தான் மகாவம்சத்தை ஆதாரமாகக் கொண்டு வடக்குக் கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்

பட்டன. அம்பாறையில் உருவாக்கப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்திற்கும் மகாவம்சமே காரணமாய் அமைந்தது. ஆதியில் அங்கு யார் வாழ்ந்தார்களென்பதை மகாவம்சம் மறைத்து விட்டது. இது சரியான தகவல் அல்லவே.

மகாவம்சத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து நிகழ்வுகளிலும் கைமுனு தொடர்பாகவும் அவன் எல்லாளனுடன் நடத்திய போர் தொடர்பானதுமான அம்சங்களுக்கே மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அப்போர் தமிழர் சிங்

...பட்டுள்ளது. ஆனால், இப்போது அது தமிழர் சிங்களவர் போரல்ல என்று வெளியில் சொல்லப்படுகிறது இதுஏன்?

## மகாவம்சத்தில் பிழை!

மகாவம்சம் சொல்லும் நிகழ்வுகளில் அவற்றின் உண்மை நிலையை கண்டறிவதற்கு காசியப்பன் தொடர்பான கதையை இங்கு எடுத்துக்காட்டாக கொள்ளலாம்.

தனது தந்தையான தாதுசேனனை காசியப்பன் உயிருடன் சுவருள் வைத்துக் கட்டி கொலை செய்ததுதான் அந்தக் கதை.

அநுராதபுரியில் அரசியற்றிய காசியப்பன் (கி.பி. 478 - 496) தொடர்பாக மகாவம்சத்தில் சொல்லப்பட்டுள்ள இந்த வரலாற்று நிகழ்வு பிழைபாடானதெனவும் ஆதலின் மகாவம்சத்தில் சொல்லியிருக்கும் காசியப்பனின் வரலாற்று அம்சத்தை மட்டும் நம்புவதை தவிர்க்குமாறும் ஒரு நூல் வெளிவந்தது.

அதாவது பிற்காலத்தில் ஆனந்ததேரர் என்பவருக்கு சமஸ்கிருத மொழியில் எழுதப்பெற்ற காசியப்பனின் வரலாறு தொடர்பான வேறொரு ஆவணமொன்று கிடைக்கப்பெற்றதாகவும் அது மகாவம்சத்தில்

...காசியப்பன் தொடர்பான வரலாற்றுக்கு முற்றிலும் மாறுபட்ட வரலாற்று அம்சமாக இருந்த போதிலும் அதுவே உண்மையெனச் சொல்லி நூலாக்கம் செய்யப்பட்டது.

அவ்வாறு சமஸ்கிருத ஆவணத்தை உள்ளடக்கியே எழுதப் பெற்ற ஆங்கில நூலின் பெயர் DHATUSENA AND HIS TWO SONS (தாதுசேனனும் அவனது இரு புதல்வர்களும்) என்பதாகும். காசியப்பன் தொடர்பாக மகாவம்சம் சொல்லியிருப்பதை தவிர்த்து அதற்கு ஈடாக இந்நூலையே சகல பாடசாலைகளிலும் கற்...

...வித்திருந்தது.

இது கல்வி அமைச்சின் பணிப்புரையின் பேரிலேயே நடைபெற்றதென்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவ்வாறு காசியப்பனின் வரலாற்றை மகாவம்சம் தப்பிதமாக சொல்லியுள்ளதென்றால் அது சொல்லும் பிற வரலாற்று அம்சங்களின் நம்பகத்தன்மையை எவ்வாறு எடை போடுவது?

ஆரம்பத்திலேயே முத்தசிவன் என்ற பெயரை இனங்காண முடியாதவாறு 'முட்டசீவ' என்று கொச்சைப்படுத்தியும் அதன்மூலம் திராவிடரான நாகர் குலத்தவரை ஆரியரென மகாவம்சம் இனமாற்றம் செய்திருப்பதும் பாரிய தவறன்றோ?

முத்தசிவனின் கொப்பாட்டப் பிள்ளை தான் திகவாப்பி குளத்தைக் கட்டிய காக்கவண்ண திஸ்ஸ. அவனது இருபிள்ளைகள்தான் துட்டகைமுனுவும் சதாதிசையும் ஆகும். அந்தவகையில் முத்தசிவனின் எள்ளுப் பேரர்களே துட்டகைமுனுவும் சதாதிசையும். இவர்கள் நாகர்களென்பதை யாராலும் மறுக்க முடியுமா?

...மகாவம்சம் துட்டகைமுனுவை ஆரியனாக காண்பித்திருப்பினும் ஈ.ரி.கன்னங்கரா அவனை நாகர் குலத்தவனென தனது 'யாழ்ப்பாணமும் சிங்களப் பாரம்பரியமும்' எனும் நூலில் குறிப்பிடுகிறார். அது வருமாறு:

கல்யாணி நாட்டில் (களனி) அரசியற்றிய நாக அரச வம்சத்தின் வழித்தோன்றலே துட்டகைமுனு.... இதன் காரணமாக துட்டகைமுனு விஜயனின் அரச பரம்பரையைச் சேர்ந்தவனல்லன் என்பது தெளிவு.

DUTUGEMUNU WAS A DESCEND-...

FAMILY OF NAGAS. ...... IT IS THERE FORE CLEAR THAT DUTUGEMUNU WAS NOT CONNECTED TO THE DYNASTY FOUNDED BY VIJAYA. (P.3)

இப்படி கன்னங்கரா கூறியிருப்பதிலிருந்து துட்டகைமுனுவும் அவனது முதாதையோரும் நாகர் குலத்தவரென்ற பேருண்மை வெளிவந்துள்ளதல்லவா? அது மட்டுமன்றி விஜயனின் அரச பரம்பரைக்கும் நாகர்களுக்கும் எவ்வித உறவோ தொடர்போ இல்லையென்ற மற்றொரு உண்மையும் இங்கு வெளிப்பட்டுள்ளது. ஆம் ஆரியர் வேறு; நாகர் வேறு. ஆதலின் இத்தீவில் முதன் முதல் பௌத்த சமயத்தை தழுவிக் கொண்ட நாகரால் வடக்கிலும் கிழக்கிலும் இயற்றப்பெற்ற புராதன விகாரைகளையும் பிற கட்டுமானங்களையும் ஆரியர் கட்டியதாக கதை பண்ணி மதத்தின் பெயரால் அப்பகுதி நிலங்களை கபளீகரம் செய்வது பெரும் 'மண்கொள்ளை' யன்றோ.

(முற்றும்)

சுவிஸில் உங்கள் அபிமான

சுடர் ஒளி

விளம்பர முகவர்

சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (கனா)

MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

# காய்ச்சலும் கை கால் வீக்கமும் யானைக்கால் நோயின் அறிகுறி!

கே: எனக்கு வயது 20. அடிக்கடி காய்ச்சல் வரும். மருந்தெடுத்தால் மாறிப்போகும். இப்பொழுது கொஞ்ச நாளாக கைகால்களில் சிறுவீக்கம், வலியுடன் உண்டாகும். ஒரு வாரத்தில் வீக்கம் வந்த இடம் மறைந்துவிடும். ஆனால் சில காலத்தின் பின்பு இதே போல் இன்னொரு இடத்தில் உருவாகி மறையும். டாக்டரிடம் காட்டியபோது இது FILARIA என்கின்ற யானைக்கால் நுளம்பு கடிப்பதால் ஏற்படும் வியாதி என்று மருந்து தந்தார். தொடர்ந்து மூன்று மாதங்கள் அதே மருந்தை எடுக்க அறிவுரை கூறினார். யானைக்கால் நோய் என்றால் யானையின் கால் போல் கால் வீங்கும் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். எனக்கும் இப்படி வீங்குமா? இந்த நோய் பற்றி விளக்கமாக விபரிப்பீர்களா?

ப: FILARIA அல்லது யானைக்கால் நுளம்பு நோய் என்று பொதுவாக அழைக்கப்படும். இந்த நோய் உடல் திசுக்களில் நூல் போன்ற உருவமுடைய புழு வகையைச் சேர்ந்த ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது.

உலகெங்கும் காணப்படும் இந்த வகை ஒட்டுண்ணிகளில் இலங்கையில் காணப்படும் ஒட்டுண்ணியின் பெயர் WUCHERIYA BANCROFTI (வூச்சேரியா பாங்குரொவ்றை) இந்த ஒட்டுண்ணியை காவிச் செல்லும் நுளம்பு குயூலெக்ஸ் குவின்குயூ பேசியாற்றஸ் (CULEX QUINQUEFASIATUS) என்பதாகும்.

இந்த நோய் அதிகமாக தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்கள், தும்புத் தொழிற்சாலைகள், கழிவு நீர் தேங்கும் இடங்களில் காணப்படும். கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், புத்தளம், காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் கண்டறிப்பட்டுள்ளது.

என்றாலும் குயூலெக்ஸ் நுளம்பு வளரக்கூடிய சூழ்நிலைகள் உள்ள எந்த இடமும் இந்த நோயின் பாதிப்புக்கு உள்ளாகலாம். நோயுள்ள ஒருவரிடமிருந்து இந்த நுளம்பு இரத்தத்தை உறிஞ்சும் போது இந்த ஒட்டுண்ணிகள் நுளம்பின் குடலினுள் சென்று வளர்ந்து – சுகதேகி ஒருவரை இந்த நுளம்பு கடிக்கும்போது – மனிதரின் உடலினுள் செல்கின்றன. மனித இரத்தத்தில் இந்த ஒட்டுண்ணிகள் முதிர்வு பெற்று மனிதரின் நிணநீர் தொகுதியில் வாழ்கின்றன. இதனால் நிணநீர் குழாய்கள், அழற்சியுற்று, பெரிதாகி அடைப்புகள் ஏற்படுகின்றன.



இம்மாதிரி நிணநீர் சுற்றோட்டத்தில் அடைப்பு ஏற்படும் போது அந்த அடைப்புள்ள பகுதி நிணநீர் தடையினால் வீங்கி – கட்டிகளையும், வீக்கங்களையும் உருவாக்குகின்றது. இப்படி அடிக்கடி ஏற்படும் வீக்கங்களினால் அந்த உறுப்புகள் பெருமளவில் பருத்துவிடுகின்றன.

கால்களில் உள்ள நிணநீர் சுற்றோட்டத்தில் பைலேரியா ஒட்டுண்ணியால் ஏற்படும் தடை கால்களை யானைக்கால் அளவில் பருக்கச்செய்வதால் இந்த நோய் யானைக்கால் நோய் (ELEPHANTIASIS) என்று பெயர் பெற்றது. இன்று வெற்றிகரமான பைலேரியா தடுப்பு முறையினால் இந்த நோயுள்ள நோயாளர்களை காண்பது அரிது.

உங்களுக்கும் சில நிணநீர் குழாய் அடைப்பினால் கைகளில் கட்டிகள் வீக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய ஒட்டுண்ணித் தொற்றின்போது காய்ச்சல் அடிக்கடி ஏற்படுவதுண்டு.

காரணம் கண்டுபிடிக்க முடியாத அடிக்கடி வரும் காய்ச்சலுக்கு – பைலேரியா ஒட்டுண்ணி காய்ச்சல் என்று நிதானிப்பது வழக்கம். உங்கள் வைத்தியர் சரியாக நிதானித்த படியால் தான் – பைலேரியாவுக்கு உபயோகிக்கும் DIETHYL CARBAMAZINE மாத்திரைகளை தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு உபயோகிக்குமாறு கூறியிருந்தார்.

மற்றும் யானைக்கால் போன்ற வீக்கத்தை தவிர, விதை வீங்கி நீர் கோத்தல் (HYDROCOELE) வாதக்குணங்கள், ஒட்டுண்ணி சுவாசக்குழாயினுள் செல்வதால் விடாத இரவு இருமல், இரத்தத்தில் ஈஸனோபில் எனப்படும் குருதி அணுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் இருமல், ஆஸ்துமா (TROPICAL EOSINOPHILIA) போன்ற நோய்களும் ஏற்படுவதுண்டு.

கே: வயது 27 நீண்டகாலமாக மூக்கில் சளி. சுவாசிக்கும் போது துர்நாற்றம் இருப்பதை உணர்கின்றேன். மருந்துகள் உபயோகித்தும் பலனில்லை?

ப: மூக்கைச் சுற்றியுள்ள எலும்புகளில் காற்றறைகள் உண்டு. இவற்றை SINUS என்று சொல்வார்கள். இந்தக் காற்றறைகள் எதற்காக இறைவனால் படைக்கப்பட்டன என்பதற்கு இதுவரை எவராலும் சரியான விளக்கம் சொல்லப்படவில்லை. உயிர்களின் பரிணாம வளர்ச்சியின்போது – நீரில் வாழும் உயிரினங்கள் – அவை மிதப்பதற்கு வசதியாக – தலை எலும்புகளுக்குள் காற்றறைகள் இருந்ததாகவும், அவைகளின் எச்சமே – இந்த SINUS என்பதும் அநேகரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும்.

ஆனால், மனிதனைப் பொறுத்த வரையில் இது உபத்திரவம் தருகின்ற ஒரு உறுப்பு என்று சொல்லலாம். ஒவ்வாமை, புளுகாய்ச்சல், தடிமல் என்பவற்றின் போது இந்த காற்றறைகளில் தொற்று ஏற்பட்டு வேதனையைத் தருகின்றது. இதனை ACUTE SINUSITIS என்று கூறுவர்.

ஆனால் சில வேளைகளில் இந்த தொற்று இரண்டு அல்லது மூன்று மாதங்களாகியும் குணம் காணாவிட்டால் CHRONIC SINUSITIS என்று கூறுவர்.

இந்த நோய் உள்ளவர்களுக்கு தலைவலி, மூக்கடைப்பு, எந்நேரமும் மூக்கால் சளி கொட்டுதல், இச்சளி தூங்கும் நேரத்தில் குழாய்களினுள் சென்றால் சுவாசப்பை தொற்று என்பன ஏற்படும். அதுதவிர இச்சளி பழுதடைந்து சுவாசத்தில் துர்நாற்றம் தரவல்லது. சிலவேளைகளில் மேல்வாய்ப் பற்களில் ஏற்படும் தொற்றுகள், நோய் என்பனகூட SINUS களில் தொற்றை ஏற்படுத்தும்.


உங்களுக்கு ஏற்பட்டுள்ளது CHRONIC SINUSITIS. ஒரு மூக்கு, காது தொண்டை நிபுணரிடம் ஆலோசனை பெறவும். இதற்குரிய காரணங்களை அவர் கண்டறிந்து தகுந்த சிகிச்சை அளிப்பார். சில வேளைகளில் தொற்று வீரியமாக இருந்தால் SINUS WASHOUT என்கின்ற சிகிச்சை முறையில் இந்த SINUS காற்றறைகளை கழுவி சிகிச்சை செய்வார்.

கே:(1) ஆண். வயது 24. நான்கு ஆண்டுகளாக சுய இன்பம் அனுபவிக்கின்றேன். சமீபத்தில் திருமணம் செய்யவுள்ளேன். இது தாம்பத்திய வாழ்க்கையைப் பாதிக்குமா?

கே: (2) வயது 23. எட்டுவருடமாக சுய இன்பம் அனுபவிக்கின்றேன். எவ்வளவு சாப்பிட்டும் மெலிந்துதான் இருக்கின்றேன். சுயஇன்பம் தான் இதற்கு காரணமா?

கே:(3) வயது 20. ஆண். பல ஆண்டுகளாக சுய இன்பம் அனுபவிக்கின்றேன். சுய இன்பம் அனுபவிப்பதால் மலட்டுத் தன்மை ஏற்படுமா?

ப: சுய இன்பம் பற்றிய கேள்விகளுக்கு இதற்கு முன்னர் பல தடவைகள் பதிலளித்துள்ளேன். இந்த மாதத்தில் முதல் இரண்டு



வாரங்களில் மேற்கூறிய மூன்று கேள்விகளும் வந்துள்ளன. மேற்கூறிய வாசகர்கள் எனது முன்னைய பதில்களை வாசிக்கத் தவறியிருக்கலாம். என்றாலும் மாதத்திற்கு குறைந்தது ஐந்து கடிதங்களாவது சுய இன்பப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்டவையாகத்தான் வருகின்றன.

இதிலிருந்து என்ன தெரிகின்றதென்றால் நமது இளைஞர்களிடையே சரியான பாலியல் கல்வி போதிக்கப்படவில்லை என்பதுதான். பாலியல் சம்பந்தமான விஷயங்களைப் பற்றிய அறிவை இவர்கள் தங்களைப் போல அரைகுறையாகத் தெரிந்தவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்றார்கள். சரியான கருத்துகள் இல்லாத, பாலுணர்வை மட்டும் ஊட்டும் புத்தகங்களில் இருந்தும் பெற்றுக்கொள்கின்றார்கள். தங்களது பாலியல் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஏற்படும் சந்தேகங்களை விஞ்ஞான முறையில் விளக்கி தீர்க்கும் ஆசிரியர்களோ, வழிகாட்டிகளோ இல்லை. பாலியல் விஷயங்களை கெட்டவை, சபையில் கலந்தாலோசிக்க கூடாதவை, அந்தரங்கமானவை என்றெல்லாம் நமக்கு நாமே கட்டுப்பாடு விதித்து வாழ்ந்து கொண்டிருப்பதால்தான் எமது சமூகத்தில் பாலியல் நோய்களும், எய்ட்ஸ் வியாதிகளும், பாலியல் சேட்டைகளும், கற்பழிப்புகளும் தினமும் நடந்துகொண்டிருந்கின்றன.

இன்று குடும்பதிட்ட சங்கம், குடும்பநல ஸ்தாபனம் போன்ற சில சேவை ஸ்தாபனங்கள் இந்த விஷயங்களில் கவனமெடுத்து இளைஞர்கள் வாழ்வை வளமாக்க முன்னிற்கின்றன. இவர்களின் சேவைகள் தமிழ் இளைஞர்களை, குறிப்பாக வடக்கு – கிழக்கு இளைஞர்களை எட்டுவதில்லை. எனவே ஆசிரியர்கள், பெற்றோர், அறிஞர், மதகுருமார், வைத்தியர்கள் என்போர் ஒருங்கிணைந்து விரைவில் இளைஞர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்ட முன்வராவிடில் நிச்சயம் தமிழினம் பாழாகிவிடும்.

“இந்த பொது வேண்டுகோளோடு இந்த இளைஞர்களுக்குப் பதிலளிக்கவுள்ளேன். சுயஇன்பம் (MANSTURBATION) என்பது விலங்கினங்கள், மனிதர்களிடையே காணப்படும் ஒரு பாலுணர்வு வெளிப்பாடு. ஒரு காலப்பகுதியில் சுயஇன்பம் என்பது பிறழ்வுபட்ட பாலுணர்வு (PERVERSION) என்றும் – மூளைப்பிறழ்வுகளுக்கு (MENTAL DISORDERS) காரணம் என்றும் கருதப்பட்டு வந்தது. தற்பொழுது இது மனிதர்களின் பாலியல் உணர்வுகளை வெளிப்படுத்தும் சாதாரணமான செயல் என்று அறிப்பட்டுள்ளது.

உலகில் 97 வீதமான ஆண்களும் 80 வீதமான பெண்களும் தங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு காலத்தில் பாலியல் உணர்வின் வெளிப்பாடாக சுயஇன்பம் அனுபவித்துள்ளார்கள் என்று ஆய்வு மூலம் கண்டறிப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல பெண்களை விட ஆண்களே கூடுதலாக இந்த முறையில் பாலியல் உணர்வை வெளிக்காட்டுகின்றார்கள் என்றும், நல்லதொரு தாம்பத்திய வாழ்க்கையில் திருப்தி இருந்தாலும்கூட சுயஇன்ப முறையில் இன்பம் காணுகின்ற வாழ்க்கை முறை தொடர்கின்றது என்றும் அறிப்பட்டுள்ளது.

ஆனால் சுய இன்பம் உடல் நல பாதிப்பு தராது என்று அறிந்திருந்தும்கூட சமூகத்தில் இதுவரை ஏற்றுக்கொள்ளப்படாத அருவருக்கத்தக்க செயல் சுயஇன்பம் என்ற தப்பான கருத்தால் சுய இன்பத்தில் ஈடுபடும் இளைஞர்களுக்கு குற்ற உணர்வும், மன உளைச்சலும் ஏற்படுகின்றன. இவைதான் சாதாரணமாகப் பசியின்மை, உடல் மெலிவு என்பவற்றுக்கு காரணமாகின்றன.

ஆண்களுக்குரிய டெஸ்டோ ஸ்ரீறோன் (TESTOSTERONE) ஹார்மோன் அதிகமாக இருந்தால் பாலுணர்வு அதிகமாக இருக்கும். அதேவேளையில் முகப்பரு, தலை வழுக்கை விழுதல் என்பனவும் இந்த ஹார்மோனின் செயற்பாடுகளில் சில. எனவே இந்தஹார்மோனின் தாக்கத்தால் பாலுணர்வை வெளிப்படுத்தி சுயஇன்பம் காண்பவர்கள், முகப்பரு, வழுக்கை விழுதல் என்பவற்றையும் சுயஇன்பத்தினால் ஏற்பட்ட விளைவுகளாக தப்பாக கருதுகின்றார்கள்.

ஆனால் குற்ற உணர்வும், மன உளைச்சலும் நிச்சயம் தாம்பத்திய வாழ்க்கையில் இன்பம் காண்பதை பாதிக்கும். இந்த பாதிப்பு சுயஇன்பத்தால் அல்ல. அதனால் ஏற்படும் குற்ற உணர்வு, மன உளைச்சலால் என்பதை மனதில் கொள்ள வேண்டும். சுய இன்பத்தால் மலட்டுத்தன்மையோ, ஆண்மைக்குறைவோ ஏற்படாது என்பது உண்மை.

நல்ல எண்ணங்கள், நல்ல நண்பர்கள், நல்ல கூட்டங்கள், நல்ல செயல்கள், சேவைகள் என்பவற்றிக்கு மனதை திசை திருப்பி, மனதை நாம் ஆட்சி செய்தால் – வாழ்க்கை சிறப்புறும்



## என் குழந்தை எனக்கேதான்!

சமீபத்தில் இஸ்ரேலில் 'டெல் அவிவ்' நீதிமன்றத்தில் ஒரு விசித்திர வழக்கு நீதிபதிகள் முன் விசாரணைக்கு வந்தது.

ஒரு தாய், தன் குழந்தை பிறந்த சில நாட்களுக்குள்ளாகவே, அதைத் தத்துக் கொடுத்துவிட்டாள்.

ஆனால், சுமார் ஒன்றரை ஆண்டுக்குப் பின், அவளுக்குத் தன் குழந்தையின் நினைவு வரவே, அதைத் திருப்பிப் பெறுவதற்காகத் தன் கணவனுடன் சேர்ந்து, நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தாள்.

இந்த வழக்கு நாடு முழுவதும் பெரிய பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. சமூகத் தலைவர்களும், சட்ட நிபுணர்களும் ரேடியோவிலும், டி.வி.யிலும் சாதகமாவும் பாதகமாகவும் கருத்துக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் 'புக் ஆஃப் கிங்ஸ்' (Book of Kings) என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலமன் என்ற மன்னனின் அரசவைக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு வழக்கு எல்லோருடைய நினைவிற்கும் வந்தது.

அதில், இரண்டு பெண்கள் ஒரு குழந்தையைத் தங்களுடையதுதான் என்று உரிமை கொண்டாடி வாதாடினார்.

அரசன் சிறிது யோசித்தான்.

பின்னர், அந்தக் குழந்தையை இரண்டாக வெட்டி ஆளுக்கொரு பாதியாகக் கொடுத்துவிடும்படி உத்தரவிட்டான்.

அரசனின் இந்தத் தீர்ப்பைக் கேட்டதும் உண்மைத் தாய் பதறிப் போய் "வேண்டாம் வேண்டாம் என் குழந்தையை வெட்டாதீர்கள். அது எங்கேயிருந்தாலும் உயிரோடு சீரும் சிறப்புமாக இருந்தால் போதும்" என்று கெஞ்சினாள்.

மற்றவள், எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் பேசாமலிருந்தாள்.

உடனே அரசன், முதல் பெண் தான் உண்மையான தாய் என்று முடிவு செய்து, அந்தக் குழந்தையை அவளிடமே ஒப்படைத்தான்.



ஆனால் இந்த வழக்கில், இரண்டு பெண்களில் யாருமே தம் உரிமையை விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கவில்லை.

கடைசியில் இந்த வழக்கை விசாரித்த மூன்று நீதிபதிகளும், "பதினெட்டே மாதங்களான இந்தக் குழந்தை அதனைப் பெற்ற பெற்றோரிடம் இருந்தால் மட்டுமே அதற்கு அதிகநன்மை கிடைக்கும்" என்று கூறி அவர்களிடமே அதை ஒப்படைத்துவிடும்படி உத்தரவிட்டனர்.

அந்தக் குழந்தையைத் தத்தெடுத்த தம்பதியரில், கணவன், 'கிட்னி' வியாதியால் பாதிக்கப்பட்டிருப்பதை மனதில் கொண்டு தாங்கள் இந்த முடிவுக்கு வந்ததாக அவர்கள் கூறினார்கள்.

# இரண்டாகிறது ஈராக்

பேரழிவினை ஏற்படுத்தக்கூடிய பயங்கர இரசாயன ஆயுதங்கள் ஈராக்கிடம் இருக்கின்றன. அவற்றை அழிக்காது விட்டால் உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பேராபத்து என்று கூறி அமெரிக்கா நடத்திய அடாவடித்தனம் அல்லது ஆக்கிரமிப்புத்தான் ஈராக் மீதான அதன் போர். இன்று இந்த யுத்தம் ஈராக்கில் ஒரு உள்நாட்டு யுத்தமாக மாறி வருகிறது.

இந்த உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக கடந்த இரண்டு வாரகாலத்தினுள் நாநூறுக்கும் மேற்பட்டோர் பலியாகி இருக்கின்றனர். மேலும் 24,000 க்கு மேற்பட்ட ஈராக்கிய மக்கள் அமெரிக்காவும் அதன் நேச அணிகளும் அந்த நாட்டை முற்றுகையிட்ட பின்னர் பலியாகி உள்ளனர். இவர்களில் 12 சதவீதத்தினர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள்.



அமெரிக்காவும் அதன் நேச அணிகளும் ஈராக்கில் இப்போது மாறியுள்ள உள்நாட்டு யுத்த நிலைமையைக் கண்டு அசமந்தமாக இருக்கின்றன. எதுவும் தெரியாததுபோல் ஒளிந்து விளையாடுகின்றன.

அமெரிக்கா தொடுத்த யுத்தம் மக்களுக்கான அரசசேவைகளையும் சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகளையும் மட்டுமன்றி ஈராக்கியர்களின் அன்றாட வாழ்க்கையையும் சிதறடித்துவிட்டது. தற்போது சுனி முஸ்லிம்களுக்கும் ஷியா முஸ்லிம்களுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்கள் உள்நாட்டு யுத்தம் ஒன்றுக்குள் ஈராக்கை இட்டுச் சென்றுள்ளன.

ஈராக்கையே பின்னாபின்னப்படுத்தியிருக்கும் இந்தப் போரின் பின்புலத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான இஸ்ரேலுக்கு ஆபத்து ஏற்படுமானால் அது ஈராக்கினால்தான் ஏற்படக்கூடும் என அஞ்சியது அமெரிக்கா. தவிர ஈராக்கின் எண்ணெய் வளங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற உள்நோக்கமும் அதற்கு இருந்தது. அத்துடன் ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசெய்னால் தனது இராணுவ, பொருளாதார, வல்லாதிக்க நலன்களுக்கு எப்போதுமே ஆபத்து உண்டு என்ற அச்ச உணர்வும் அதைப் பீடித்திருந்தது. இந்தப் பயஉணர்வுகளிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ளவும் ஈராக் மீதான தனது பிடியை இறுக்கிக் கொள்ளவும் இந்த யுத்தத்தினை அமெரிக்கா ஆரம்பித்தது.

இன்று ஈராக்கியர்கள் என்ன கேட்கிறார்கள் தெரியுமா? "பேரழிவு தரும் இரசாயன ஆயுதங்களைக் கைப்பற்றுவோம் என்று சொல்லி எமது நாட்டுக்குள் இறங்கிய அமெரிக்க இராணுவம் இதுவரை எதையுமே கண்டுபிடிக்கவில்லை. இந்த நிலையில் ஈராக்கைவிட்டு இன்னும் அது வெளியேறாது இருப்பது ஏன்?" இதுதான் அவர்களின் கேள்வி.

இதைப் புரிந்துகொண்ட அமெரிக்கா அவர்களின் உள்ளக் குமுறலைத் தணிப்பதற்காக, நீங்கள் இழந்து போயுள்ள சுதந்திரங்களை இதோ வழங்குகிறோம் என்று கூறி அங்கு பொதுத் தேர்தல் ஒன்றையும் நடத்தி ஜனநாயகம் என்ற பெயரில் அரசொன்றையும் நிறுவியது. சதாம் ஆதரவு சுனி முஸ்லிம்களிடமிருந்து ஷியா முஸ்லிம்களிடம் ஆட்சி அதிகாரம் மாறியது.

ஆனால், இந்தத் தேர்தலின் பின்னர்தான் சதாமின் ஆட்சியில் தாங்கள் அனுபவித்த நடமாடும் சுதந்திரத்தைக் கூட மக்கள் இழந்திருக்கிறார்கள். தினமும் எங்கும் குண்டுகள் வெடிக்கின்றன.

ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் தற்கொலை குண்டுகள் வெடிப்பதைத் தொடர்ந்து சுனி முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழும் இடங்களிலும் குண்டுகள் வெடிக்கின்றன. ஈராக்கின் இரு முஸ்லிம் பிரிவுகளும் மோதிக் கொள்கின்றன.

ஈராக்கிய ஜனாதிபதி ஜலால்தலபானி ஈராக்கில் உள்நாட்டுயுத்தமொன்று வெடித்துள்ளது என்ற செய்திகளை முற்றாக நிராகரிக்கிறார். ஆனால், அரசியல் ஆய்வாளர்களோ ஈராக்கில் உள்நாட்டு யுத்தத்துக்கான கதவு திறந்துவிடப்பட்டுள்ளது என்றும் இந்த உண்மையை யாராவது மறைத்தால் அதுவெறும் கண்துடைப்பென்றும் சொல்கிறார்கள்.

இந்த இரு இனத்தவர்களுக்குமிடையே வெடித்துள்ள இந்த மோதலுக்குக் காரணம் என்ன?

நூற்றாண்டுகளுக்கு மேலாக சுனி முஸ்லிம்களின் கைகளிலேயே அரசியல் பலம் மட்டுமல்ல ஆயுதபலமும் இருந்தது. சதாம் ஹூசெய்னும் சுனி முஸ்லிம் தான். ஈராக்கின் சனத் தொகையில் இவர்கள் 20 சதவீதத்தினரே. ஏனையவர்கள் ஷியா முஸ்லிம்கள். அண்மைய தேர்தலில் ஷியா முஸ்லிம்கள் ஆட்சியைக் கைப்பற்றி இருக்கிறார்கள். இதை சுனி முஸ்லிம்கள் எதிர்க்கின்றனர்.

சுனி முஸ்லிம்களைச் சாந்தப்படுத்தி அவர்களைத் தமது கைக்குள் போட்டுக் கொள்ள ஷியா முஸ்லிம்கள் மேற்கொண்ட முயற்சிகளும் பூரண வெற்றி அளிக்கவில்லை.

ஈராக்கிய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அமெரிக்கப்படைகளைத் தமது நாட்டிலிருந்து வெளியேற்ற நடத்திய தீவிர யுத்தம் இன்று ஷியா – சுனி தீவிரவாதிகளுக்கிடையிலான உள்நாட்டு யுத்தமாக வெடித்துள்ளது.

இந்த நிலை தொடருமா அல்லது நிறுத்தப்படுமா என்று இப்போது எதிர்வு கூறுவது கடினம். இந்த மோதல் நீடிக்க வேண்டுமென்றே அமெரிக்காவும் அதன் நேச அணிகளும் விரும்புகின்றன. ஏனெனில் தமது படைகள் ஈராக்கில் தொடர்ந்து நிலைகொள்வதற்கான சந்தர்ப்பத்தை அது வழங்கும் அல்லவா?

எனவே ஷியா – சுனி முஸ்லிம்கள் தங்களிடையிலான மோதலை முடிவுக்கு கொண்டுவந்து தமது கூட்டுப் பலத்தை அமெரிக்காவுக்கு எதிராகத் திருப்புவார்களா?

அமெரிக்கா வியட்னாமில் படித்த பாடத்தை மீண்டும் ஈராக்கில் படிக்குமா? அல்லது இப்போது ஈராக் இரண்டுபட்டிருப்பது தொடர்கதையாக நீடிக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

**-மூர்த்தி-**

# திருகோணமலையை ஆக்கிரமிக்கும் பேரினவாதம்

திருகோணமலையில் தமிழர்களை மேலும் சிறுமைப்படுத்தும் நோக்குடன் பேரினவாதிகள் புத்தர்சிலைகளையும் விகாரைகளையும் நிறுவி இனக்கலவரத்தைத் தூண்ட முயன்று வருகின்றனர்.

சிங்களவர் செறிந்துவாழும் இடங்களில் சிறிய விகாரைகளை அமைத்தார்கள். புத்தர் சிலைகளை வைத்தார்கள் மேலும் அரசமரம் இருக்கின்ற இடமெல்லாம் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டன. இப்போது தமிழர் செறிந்துவாழும் பகுதிகளை பௌத்த மயப்படுத்தும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றனர் பேரினவாதிகள்.

திருகோணமலை கடற்படைத் தள எல்லையில் இருந்து உட்துறைமுக வீதி, கண்டி வீதி போன்ற நெடுஞ்சாலைகளில் புத்த விகாரைகள் பல அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே இருந்த விகாரைகளை தவிர சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் அதிகமான விகாரைகள் புதிதாக கட்டப்பட்டுள்ளன. ஒரு கிலோமீற்றருக்கும் குறைவான தூர இடைவெளியில் சிறு விகாரைகள் கட்டப்பட்டு புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.



ஹர்த்தாலின் போது வெறிச்சோடிய வீதி ஒன்று

இரவோடு இரவாக வைக்கப்பட்ட புத்தர் சிலை

பாலம் போட்ட ஆறு பத்தினி அம்மன் ஆலயத்திற்கு அருகிலும் வீரபாரம் விகாரை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அது அங்கிருக்கும் படையினரின் கைங்கரியம் என்பது எல்லோருக்கும் தெரியும். பாலம் போட்ட ஆறு பாலத்தின் மறுமுனையிலும் பன்சாலை ஒன்றை நிறுவி இருக்கின்றனர். தனியார் காணியில் அத்துமீறிச் செய்யப்பட்ட இச்செயலுக்கு தமிழர் தரப்பில் எதிர்ப்புக் காட்டப்பட்டது. எனினும் அப்போது அரசாங்கம் இந்த நடவடிக்கைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனைத் தொடர்ந்து பல விகாரைகள் முளைக்கத் தொடங்கின. இப்போது திருகோணமலையில் எப்பக்கம் திரும்பினாலும் புத்தர் சிலைகளை காண முடிகிறது.

மேலும் தமிழர்களின் காணிகளில் கூட நகரசபையின் அனுமதியின்றி புத்த விகாரைகள் அமைக்கப்படுவதன் நோக்கம் தமிழர் தாயகத்தில் அவர்களை மேலும் சிறுபான்மையினர் ஆக்குவதற்கே. திருகோணமலையை பௌத்தர்களின் பாரம்பரிய பூமியென்று பறைசாற்றும் இன்னொரு நோக்கமும் இந்நடவடிக்கைகளின் பின்னணியில் இருப்பது தெரிகிறது.

திருகோணமலை நகரசபைக்குச் சொந்தமான பேருந்து நிலயப்பகுதியில் ஆட்டோக்கள் தரித்துநிற்பதற்கு சிறு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அண்மையில் இங்கு சிறிய கண்ணாடிப் பெட்டியில் புத்தர் சிலையை வைத்து பேரினவாதிகள் வழிபட்டு வந்தனர். சிங்களக் காடையர்கள் ஒன்று கூடும் மணிக்கூட்டு கோபுரப் பகுதியையும் பஸ்தரிப்பு நிலையத்தையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கான அடித்தளமாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கையாலாகாத நகரசபை நிர்வாகமும் அந்த சிலையை அகற்றுவதற்கு முன்வரவில்லை.

கடந்த சனியன்று (14.05.2005) இந்த சிறிய சிலைக்கு அருகில் பெரிய புத்தர் சிலையொன்றும் வைக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழர் தரப்பு கொதிப்படைந்துள்ளது. சனியன்று இரவோடு இரவாக மேற்கொள்ளப்பட்ட இச்செயலுக்கு பாதுகாப்புத் தரப்பு பாதுகாப்பு வழங்கியதாக சொல்லப்படுகிறது. வெள்ளிமாலை நகரப் பகுதியும், கண்டி வீதியும் சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இவ்வழியாகவே இந்தச் சிலை கொண்டுவரப்பட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு ஜே.வி.பி எம்பிக்களான விமல் வீரவன்சவும், ஜெயந்த வீரசிங்கவும் வருகை தந்ததாக சொல்லப் படுகின்றது.

இந் நடவடிக்கையால் கொதிப்படைந்த திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை கடந்த 17 ஆம் திகதி கதவடைப்புக்கு அழைப்பு விடுத்து திருகோணமலை நகரை செயலிழக்க வைத்தது.

பாடசாலைகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் எதுவும் இயங்கவில்லை. போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. நகரம் வெறிச்சோடியது. பாதுகாப்பு கடமைகளில் பொலிஸாரும் படையினரும் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்நடவடிக்கைகளை அடுத்து திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் சர்வமத மாநாடு ஒன்று நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

ஆக்கபூர்வமான தீர்வு எதுவும் இவ்விடயம் குறித்து எட்டப்படாவிட்டால் திருகோணமலையில் அஹிம்சை வழிப்போராட்டங்கள் நடைபெறுவதை தவிர்க்க முடியாது போய்விடும்.

**-மனோ-**


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 79.00 | ரூ. 110.00 |
| (250300 Col. Cms) | | |

# குருதிப்புனல் பாய்ந்த குமுதினிப் படுகொலை

ஈழத்தமிழர்களின் வாழ்வில் ஆறாத வடுவாக பதிந்திருக்கும் குமுதினிப் படுகொலையின் 20 ஆம் ஆண்டு நினைவுதினம் தமிழர் தாயகப்பகுதி எங்கும் கடந்த 15 ஆம் திகதி உணர்வு பூர்வமாக நினைவு கூரப்பட்டது. பிரதான நிகழ்வு நெடுந்தீவு மாவலித்துறையில் இடம்பெற்றது.

படுகொலை நடைபெற்ற ஆழ்கடல் பகுதிக்குச் சென்ற மக்கள் கடலில் மலர்தூவி படகில் சுடரேற்றி தமது உறவுகளுக்கு வணக்கம் செலுத்திய காட்சி நெஞ்சை நெகிழ வைத்தது. தொடர்ந்து மாவலித்துறையில் குமுதினிப் படுகொலை நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வில், படுகொலை செய்யப்பட்ட 36 மக்களினதும் உருவப்படங்கள் பான்ட் வாத்திய இசை அணிவகுப்புடன் எடுத்துவரப்பட்டு குமுதினிப் படுகொலை நினைவாலயத்தில் வைக்கப்பட்டன.

படுகொலையுண்டோரின் நினைவுச் சுடரினை கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் ஏற்றிவைக்க நினைவாலயச் சுடரினை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார். மலர் மாலையினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி அணிவித்தார். இதனை அடுத்து நினைவுரைகள் இடம்பெற்றன. நினைவுரைகளை சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதிகளில் ஒருவரான அமுதாப், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து படுகொலையை எடுத்துக்காட்டும் வகையான கலை நிகழ்வுகள் நடைபெற்றன. அத்தோடு இப் படுகொலையை சித்திரிக்கும் வகையிலான அலங்கரிக்கப்பட்ட ஊர்திப்பவனி ஒன்றும் இடம்பெற்றது.

சிங்கள பௌத்த பேரினவாதிகள் காலத்துக்குக் காலம் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடும் காடைத்தனத்தின் ஓர் அங்கமாகவே குமுதினிப் படுகொலையும் இடம் பெற்றது.





அலைகடலின் தாலாட்டில் அமைதியாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த நெடுந்தீவு வாழ் மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்காக வெளியிடங்களுக்கு சென்று வருவது வழக்கம். அவ்வாறே அன்றொரு நாள் வெளியே சென்றவர்கள் ஊர் திரும்புவதற்காக குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவு செல்லும் படகில் பயணித்துக் கொண்டிருந்தனர்.

கடலன்னையின் சுகந்தக்காற்றை சுவாசித்தவண்ணம் சென்று கொண்டிருந்த அப்பாவிப் பொதுமக்கள், ஆதிக்க வெறியரின் கொலைக்கரங்கள் அன்று தம்மீது பாயப் போகின்றது என்பதை அறிந்திருக்கவில்லை.

அந்த நேரத்தில்தான் இந்தக் கொடூரம் அரங்கேறத் தொடங்கியது. குமுதினிப் படகை திடீரென இலங்கை கடற்படைக்கலம் வழிமறிக்கவே செய்வதறியாது மக்கள் திகைத்து நின்றனர். படகினுள் புகுந்த கடற்படையினர் பயணிகளை ஒவ்வொருவராக கண்டம் துண்டமாக வெட்டியும், குத்தியும் கொலை வெறியாட்டம் புரிந்தனர்.

ஆறுமாதக் குழந்தை உட்பட பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் என பலதரப்பட்டவர்களும் காடையர்களின் கொலைப் பசிக்கு இரையாகி துடிதுடித்து உயிரிழந்தனர். குமுதினிப் படகு முழுவதுமே குருதியால் கழுவப்பட்டது. படகில் நிரம்பிய குருதி வெள்ளத்தினுள் யாராவது இன்னும் உயிருடன் இருக்கிறார்களா என தேடித் தேடி இறந்த உடல்களை கூட இன்னொரு முறை கடித்துக் குதறிப்பார்த்தது கொலைக் கும்பல்.

படகில் பயணித்த 36 பேரினுடைய உயிர் பறிக்கப்பட்டது. கருநீலநிறமாக காணப்பட்ட கடலன்னை குருதிப்புனல் பாய்ந்து செந்நிறமாக காட்சி கொடுத்தாள். அன்று கடல் மட்டும் சிவக்கவில்லை. ஒவ்வொரு தமிழனுடைய கண்களும் அனலென சிவந்து அக்கிரமக்காரர்களை சுட்டெரிப்பதற்கு துடித்துக் கொண்டிருந்தன என்பதை கொலை வெறியர்கள் காலம் கடந்துதான் உணர்ந்து கொண்டனர்.

தமிழரின் போராட்டத்தை களத்தில் சந்தித்து முறியடிக்க முடியாதவர்கள் அப்பாவி மக்கள் மீது வன்முறை பிரயோகித்து எமது தமிழ் மக்களின் தாயகத்தை, விடுதலை வேட்கையை, சுதந்திர உணர்வை அடக்கலாம் என கொண்ட தப்பெண்ணம் இன்று வரை தொடர் கதையாகவே உள்ளது.

எந்தவொரு விடுதலை வேண்டிப் போராடும் இனத்திலும் அதை அடிமைப்படுத்த நினைக்கும் ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ந்தும் படுகொலைகள், வன்முறைகள் என்பவற்றை மேற்கொள்ளும் போதே ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரான விடுதலைப் போராட்டம் வீறுகொண்டெழும் என்ற அடிப்படைத் தத்துவம் எமது இனத்திற்கும் பொருந்தும்.

**செந்தணல்**

எமது நீண்ட விடுதலைப் போராட்டத்தில் நாம் கடந்து வந்த பாதையில் துயரத்தின் குறியீடாக காணப்படும் குமுதினிப் படுகொலையின் போது அநியாயமாக உயிர் பறிக்கப்பட்ட அனைத்து அப்பாவிப் பொது மக்களையும் ஒரு முறை நினைவு கூருகின்றோம்.

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எமது மனதை விட்டு அகலாத, மறையாத வடுவாக மனதில் பதிந்து காணப்படும் குமுதினிப் படுகொலையின் போது கொல்லப்பட்ட அனைவருக்கும் எமது இதய அஞ்சலிகள்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 161

சொற்சிலம்பம் 161 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் மே 28 ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூன் 5 ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூன் 12ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.159க் கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு – 14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 161

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | 5 | 6 |
| 7 | | | 8 | 9 | | | |
| | | 10 | | | | | |
| 11 | 12 | | | | 13 | | 14 |
| 15 | | | | 16 | | | |
| | | 17 | 18 | | | 19 | |
| | 20 | | | | 21 | | |
| 22 | | | | | | 23 | |

## சொற்சிலம்பம் போட்டி இல.159

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | ம் | 2 பா | 3 தி | | 4 அ | 5 ச | 6 தி |
| தி | | 7 த | ன | வ | ந் | த | ன் |
| 8 ப | 9 தி | க | ம் | | 10 த | ம் | |
| 11 தி | ற | ம் | | 12 மா | ர் | | 13 கு |
| | ப் | | 14 அ | லை | | 15 ந | டு |
| 16 கோ | பு | 17 ர | ம் | | 18 வி | ட | ம் |
| து | | 19 ச | மி | 20 பா | ரு | | ப |
| 21 மை | ய | ம் | | 22 சி | தி | ல | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல.161

**இடமிருந்து வலம்**

1. செருக்கு / வலி / காவல்
4. பாக்கு தரும் தரு.
7. இது அறுபத்திநான்கு.
8. ஆந்திரா, கர்நாடகம் ஆகியவற்றுக்குத் தெற்கான பிரதேசம்.
10. பருந்துவதற்கு உரிமன.
11. ஒரு பருப்பு வகை.
13. இதற்கும் உண்டோ அடைக்கும் தாள்?
15. பாண்டிய மன்னரின் பெயர் வகை.
16. நிலவடுக்குக்கு மேல் இருப்பது.
17. அன்பு கொண்ட அடிமை.
19. மிக / கூட.
20. சுவாசத்துடன் தொடர்பான நோய்.
21. முதுமை அடைய.
22. இணக்கம் காணப்பட்டது / ஒப்பந்தம்.
23. சாப்பிடு.

**மேலிருந்து கீழ்**

1. ஒன்றாகிய தன்மை.
2. பூச்சரம் / பிற்பகலுக்குப் பின்னர் வருவது.
3. புதிய தகவல் / புதுமையான செய்தி.
4. பாடல் / புலவன்.
5. வலது குறைந்தவன்.
6. குத்துவது இப்படி.
9. காந்திஜியின் கடைசி வார்த்தை.
10. இவன் புரட்சிக் கவிஞன்.
12. பிழை / தவறு / தப்பு.
13. பன்னிரண்டு அங்குலம்.
14. மகன்.
16. நெஞ்சு.
18. ஓர் அரிசி வகை.
19. விருந்தினன்.
20. தாண்டு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 158

1. யோசப் டொரிங்கடன் ஸ்டெக் 59/1, லேடி மெனிங் டிறைவ், மட்டக்களப்பு.
2. வ.ஆ. அதிருபசிங்கம் அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.
3. செ.சந்தனராசா 5, கருவேலடி வீதி, கொக்குவில்.

**பாராட்டுப் பெறுவோர்**

1. க.நிரஞ்சன், 22, பிரதிபிம்பாராம வீதி, களுபோவில.
2. க.அ.மலர் 141, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
3. ச.சொர்ணமலர் "சொர்ணமகால்" 17/ B மன்னார் வீதி, வவுனியா.
4. வி.தர்மராஜதுரை மணல் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.
5. இ.கிரானினி, 'மணியகம்' வாசிகசாலை வீதி, கொம்மாந்துறை, செங்கலடி.
6. ம.தில்லைநாதன் சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.
7. வ.மன்னார் அன்ரனி 16 சென்றஜேம்ஸ் மேற்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
8. எஸ்.ஜோர்ஜ் 155/11 ஜெம்பட்டா வீதி, கொழும்பு 13.
9. எஸ்.எஸ்.பவானந்தன் சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.
10. ஜெயசேகரா நகுலன் "...கம்" கேணியடி, கொக்குவில் மேற்கு.

# கண்டி மாநாட்டிலும் இனவாதக் கூச்சல்கள்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தொடர் கண்டியில் இடம்பெற்றபோது முக்கிய சர்வதேச நாடுகளின் முன்னிலையில் சிங்களப் பேரினவாதம் தனது முகத்தை தெளிவாக காட்டிவிட்டது. புலிகளுக்கெதிரான போராட்டம் என நினைத்து பேரினவாதம் செய்த கூச்சல்கள் நிச்சயமாக சர்வதேசத்தை தமிழர்களின் பால் ஒரு சிறிய அளவிலேனும் அனுதாபத்தை ஏற்படுத்திவிட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.



கடந்த 16ஆம் 17ஆம் திகதிகளில் கண்டியில் இடம்பெற்ற உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தொடரின் ஆரம்ப நிகழ்வு ஏல்ஸ்ட் ரீஜன்சி ஹோட்டலில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தொடருக்கு அரசியல் அங்கம் வகிக்கும் கட்சிகள் பங்குபற்றியிருந்த போதும் ஐக்கியதேசியக்கட்சி, தமிழ்தேசியக்கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் என்பன மாநாட்டின் நிகழ்வை புறக்கணித்திருந்தன. சகல கட்சித்தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியின் சார்பில் அமைச்சர் விஜித ஹேரத் பங்குபற்றியிருந்ததுடன். ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற குழுத்தலைவர் அத்துரலிய ரத்னதேரரும் பங்குபற்றிருந்தார்.

மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே ஹெல உறுமயவின் எம்.பி அத்துரலிய ரத்னதேரர் மாநாட்டு மண்டபத்துக்குள் வந்திருந்தார். மண்டபத்துக்குள் வந்த அவர் அங்கு வந்திருந்த உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரல்ட் மற்றும் உலகவங்கியின் பிரதித் தலைவர் பரடில் பட்டல் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினார். தமது (இனவாத) நிலைப்பாடு குறித்து விளக்கமளித்தார். ரத்ன தேரரின் கருத்துக்களை அருகில் நின்ற சுகாதார அமைச்சர் நிமல் சிறிபாலடிசில்வா உலகவங்கி பிரதிநிகளுக்கு ஆங்கிலத்தில் எடுத்துவிளக்கினார். இதனைத்தொடர்ந்து மகஜர் ஒன்றையும் இவர்கள் இருவரிடமும் தேரர் கையளித்தார்.

இதனையடுத்து மாநாடு ஆரம்பமானது. மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உரையாற்றினார். அதில் அவர் "ஆபத்தான சிக்கலான முடிவுகளை எடுப்பதற்காகவே அரசு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் எங்களில் பலர் மோசமான ஆபத்து நிலையில் உள்ளோம். ஆகையால் சவால்களை எதிர்நோக்கும் உறுதி எங்களுக்கு அவசியம். அந்தச் சாவால் வடக்கு – கிழக்கில் உள்ள பயங்கரவாதிகளிடமிருந்தோ அல்லது தெற்கு தீவிரவாதிகளிடம் இருந்தோ வரலாம்'' என்றார்.

தெற்குத் தீவிரவாதிகள் என அவர் குறிப்பிட்டது ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற சிங்களப் பேரினவாதிகளையே என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் பேசி முடித்ததுமே தனது ஆசனத்தில் இருந்து எழுந்த ஹெலஉறுமயவின் எம்.பி.ரத்னதேரர் தான் கருத்தொன்றினைத் தெரிவிக்க விரும்புவதாகக் கூறி பேச ஆரம்பித்தார்.

தென்னிலங்கையின் வீதிகளில் கூச்சல்கள் போட்டு பழக்கப்பட்ட இவர்கள், தமது வழமையான பாணியில், விடுதலைப்புலிகளுடன் இணைந்த பொதுக்கட்டமைப்பினை அமைக்க எடுக்கும் நடவடிக்கைகளை தாம் எதிர்ப்பதாகவும் இதற்கு நிதி உதவி வழங்க சர்வதேச சமுகம் முன்வரக் கூடாதெனவும் கூறினார்.

விடுதலைப் புலிகள் தமது கொலைக் கலாசாரத்தை நிறுத்தி தம்மிடமுள்ள விமானத் தளத்தை அழித்து தமது படையில் உள்ள சிறுவர்களை வீடுகளுக்கு அனுப்பி ஜனநாயக வழிக்குவந்தால் மட்டுமே அவர்களுடன் பொதுக்கட்டமைப்பினை அமைப்பது பற்றி சிந்திக்க முடியும் எனவும் கூறினார்.

பின்னர் இது தொடர்பான மகஜர்களை உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கு கையளிக்க வேண்டும் எனக்கூறி பிரதான மேடைக்கருகில் வந்து முதலாவது மகஜரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமே கையளித்தார். அதனை வேறு வழியின்றி ஜனாதிபதியும் பெற்றுக்கொண்டார்.

இதேபோல் ஏனைய உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளிடமும் மகஜரைக் கையளித்தார்.

அத்துரலிய ரத்னதேரரின் இந்த செயற்பாட்டை சற்றும் எதிர்பாராத ஜனாதிபதி பெரிதும் சங்கடப்பட்டதை அவதானிக்க முடிந்தது. அதேபோல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், வெளிவிகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும் இதனால் நெளிந்துகொண்டிருந்தனர்.

கண்டி மாநாட்டுக்கு முக்கியமான அரசியல் பிரதிநிதிகளை ஓரம்கட்டிய அரசாங்கம் அதற்கான விளைவுகளை மாநாட்டின் முதல்நாள் அனுபவித்துவிட்டதாக இதனை அவதானித்த ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

பேரினவாதிகள் முகம், நேரடியாகவே பெருமளவான வெளிநாட்டு பிரதிநிதிகள் முன்னிலையில் அம்பலப்படுத்தப்பட்டது.

ஏற்கனவே பொதுக்கட்டமைப்புக்கு எதிரான கோஷங்கள் தென்னிலங்கையில் அதிகரித்துவரும் நிலையில் அதன் ஒரு அங்கமே கண்டி மாநாட்டில் எதிரொலித்தது.

இதேபோல் ஹெலஉறுமய பிக்குகள், உதவும் நாடுகளின் கூட்டம் இடம்பெற்ற கண்டி நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

ஹெலஉறுமயவின் கண்டிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உடவத்தை நந்ததேரர் தலைமையில் அந்த கட்சியை சேர்ந்த 50 பிக்குகள் வரை இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.

ஜனாதிபதியின் உரைமுடிந்தகையோடு தலதாமாளிகைவரை ஊர்வலமாகச் சென்ற இவர்கள் அங்கு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

தமது உயிர் இருக்கும் வரை நாட்டைப் பிரிக்க அனுமதியோம் எனவும் கோஷமிட்டனர்.

மாநாட்டின் உள்ளேயும், வெளியேயும் மேற்கொள்ளப்பட்ட பேரினவாத எதிர்ப்புக்கள் சர்வதேச சமுகத்தைச் சேர்ந்தோரின் பேச்சுக்களில் எந்தவித தாக்கத்தையும் மாநாட்டில் ஏற்படுத்தவில்லை. இன்னும் சொல்லப்போனால் இந்த பேரினவாதக் கூச்சல்கள் எடுபடவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

உலகவங்கிப்பிரதிநிதி உரையாற்றிய போது, பொதுக்கட்டமைப்பின் அவசியம் குறித்து பேசியதுடன், யுத்த நிறுத்தம் தொடரவேண்டும்; ஒப்பந்தத்தை பேணி வரும் அனைத்து தரப்பையும் தாம் பாராட்டுகிறோம் என்று தெரிவித்தமையானது பேரினவாதக் கூச்சல்களுக்கு நல்ல நெற்றியடியாக இருந்தது.

கலன்

சர்வதேசம் உண்மை நிலையை புரிந்து கொண்டுவிட்டது. இனி இந்த பேரினவாத கூச்சல் எடுபடப்போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. பேரினவாதிகள் யதார்த்தத்தை புரிந்துகொள்ளப்போவதில்லை என்பதையும் கடந்தகால இலங்கையின் வரலாற்றில் இருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

# திருமலைத் துறைமுக அலுவலகமும்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனங்களுக்கு இடையே மோதலையும், அதிருப்தியையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தக் கூடிய இவ்வாறான முயற்சிகள் சமாதானத்தை விரும்புபவர்களால் அனுமதிக்க முடியாதவை ஆகும். வெறுமனே தன்னலம் கருதி இந்த இடமாற்றம் இரத்துச் செய்யப்படவேண்டும் என்று கோரப்படவில்லை. ஆழ்ந்து சிந்தித்ததால் அதில் பல்வேறு ஏதுக்கள் இருப்பது புலப்படும்.

பேரினவாதம் இடமாற்றம் வேண்டும் என்று இப்போது துடிக்கும் அலுவலகங்கள் நகரின் மத்தியில் உள்ளன. இவற்றுள் நிதி அலுவலகம், பிரதான அலுவலகம், பிரதி ஹாபர் மாஸ்டர் மற்றும் துறைமுக பாதுகாப்பு அலுவலகம் என்பன இங்குள்ளன. மேலும் வதிவு முகாமையாளர் இங்கு இருப்பதுடன் அவரதும் மற்றும் விருந்தினர் விடுதிகளும் இப்பகுதியிலேயே உள்ளன.

போக்குவரத்து, வங்கிகள், வைத்தியசாலை போன்ற அத்தியாவசிய வசதிகளும் பாதுகாப்பும் இங்கேயே உள்ளது.

மேற்சொன்ன அலுவலகங்களில் பெரும்பாலாகப் பணிபுரிவோர் தமிழர்கள், மற்றும் தமிழ் பேசுபவர்கள் – அதிலும் பெண்களே அதிகம் உள்ளனர். பாடசாலை, இருப்பிடம் என்று நிரந்தரமான நிலையில் சீனன் குடா செல்வது பாரிய அசௌகரிகத்தைத் தரும்.

சீனன் குடா அலுவலகத்துக்குச் செல்லும் போது எதிர் கொள்ளப்படும் மட்கோ சந்தி, அபயபுரம், கணேஸ்லேன் பகுதி, நான்காம் கட்டைச் சந்தி உள்ளிட்ட பல இடங்கள் சிங்களவர்கள் செறிந்து வாழும் இடங்களாகும். கடந்த காலங்களில் கலவரங்கள் மூண்ட இடங்களுமாகும். சிறு பான்மையினர் இங்கு தாக்கப்பட்டுள்ளனர். இயந்திரப்படகு (Tug) மூலம் போக்குவரத்து நடைபெற்றாலும் கூட பெண்கள் படகில் செல்லும் கடல்வழிப் பயணமானது ஆபத்து நிறைந்தது. அதையும் கடற்படையினர் தடுத்து நிறுத்திய சந்தர்ப்பங்கள் உண்டு.

பேரினவாதம், இடத்தை மாற்றுவதற்கு குறிப்பிடும் காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. தமிழினத்தைச் சிறுபான்மைப் படுத்தி தமது பகுதிகளுக்கு அனைத்தையும் கொண்டு செல்லும் நீண்ட காலத்திட்டத்துடன் இவர்கள் செயற்படுகின்றனர்.

இதற்கு சில அதிகாரிகள் துணை போவதுடன் சிலர் இரட்டை வேடமிடுகின்றனர். பல சங்கங்கள் ஓடித்திரிகின்றன. காழ்ப்பு மனப்பான்மையை உடையவர்கள் பின்புலமாகச் செயற்படுகின்றனர்.

இவற்றை எல்லாம் அறிந்த தமிழ் கூட்டமைப்பு எம்.பிகளான இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் கடந்த வருடம் இடை நிறுத்தலுக்கான முயற்சிகளை மேற்கொண்டு இருந்தனர்.

இப்போது அது மீண்டும் தூசிதட்டப்பட்டுள்ளது. அலுவலகங்களை மாற்றியே தீருவோம் என ஒற்றைக்காலில் நிற்கின்றனர்.

இது குறித்து பாதிக்கப்படவிருக்கும் ஊழியர்கள் க.துரைரெட்ண சிங்கம் எம்.பியுடன் பேசியுள்ளனர். இரா.சம்பந்தன் எம்.பியுடன் இணைந்து உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படாத விடத்து ஏதும் அசம்பாவிதம் இடம் பெற்றால் அதன்பிறகு துள்ளிக்குதிப்பது காலம் கடந்த ஞானமாகும். கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் தேவையா?

# வெளிநாட்டில் உயர்கல்வியை தொடரவிரும்....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

Diploma in Information Technology, Diploma in English Proficiency, International Computer Driving License (ICDL, UK), First Certificate in English (UK) இந்த சான்றிதழ்கள் நேரடியாக UK கல்வி நிறுவனங்களினால் வழங்கப்படுவதனால் இப்பாடநெறியின் அங்கீகாரமும், தரமும் அதி உயர்வாக காணப்படுகின்றதை மாணவர்களும், பெற்றோரும் உணர்ந்துள்ளனர். இதனால் உயர்கல்வியை வெளிநாட்டில் தொடர விரும்புகின்ற மாணவர்களும், உடனடித் தொழில் வாய்ப்பினை நாடுகின்ற மாணவர்களும், அனேகமானோர் இக்கற்கை நெறியில் இனைந்து கொள்கின்றனர்.

UK, Canada போன்ற நாடுகளில் உயர் கல்வியைத் தொடர்வதற்காக Student Visa க்களைப் பெறவிரும்புகின்ற மாணவர்கள் Foundation Degree Programme இனை வெற்றிகரமாக நிறைவு செய்கின்றபோது அந்த வாய்ப்பினை இலகுவாகவே பெற்றுக்கொள்கின்றனர்.

Student Visa க்களுக்கு விண்ணப்பிக்கின்ற போது உயர்ஸ்தானிகராலயங்களில் நேர்முகப்பரீட்சையை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதனை இலகுவாக நிறைவு செய்ய Foundation Degree Programme தகுந்த பயன்பாட்டினைத் தருவதால் Student Visa க்களைப்பெற்றுக் கொள்வதில், இப்பாடநெறியினை பூர்த்தி செய்யும் மாணவர்கள் எவ்வித சிரமங்களையும் எதிர்கொள்வதில்லை.

எல்லாவற்றிக்கும் மேலாக London Institute, தமது சர்வதேச வலைப்பின்னலின் ஊடாக UK, Canada ஆகிய நாடுகளில் உள்ள அனேகமான பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் நம்நாட்டு மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பினை இலகுவாகப் பெற்று தருவதால், மாணவர்கள் அதிக சிரமங்கள் இன்றி வெளிநாட்டு உயர்கல்வி எனும் கனவினை நனவாக்கிக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கிறது.

மேலும் London Institute, வழங்கும் மாணவர்களுக்கான சேவைகளில் வெளிநாட்டு பல்கலைக்கழக அனுமதி முதல் Visa க்களைப் பெறும் வரையிலான அனைத்து படிமுறைகளிலும் பங்களிப்புச் செய்வதனால் நமது மாணவர்கள் மிகக் குறுகிய காலத்தில் தங்கள் இலக்கினை அடைந்து கொள்ள வழிசெய்கின்றது.

அடுத்து தொழில்வாய்ப்பு பற்றிச் சிந்திக்கும் மாணவர்கள் Foundation Degree மூலம் உடனடிப் பயன்பெற வாய்ப்புக்கள் உண்டு. தற்போதைய தொழிற் சந்தையினை நோக்கும்போது, பெரும்பாலன தொழில் வாய்ப்புக்களுக்கு பிரதானமாக வேண்டப்படுவது கணனி மற்றும் ஆங்கிலம் தொடர்பான சிறந்த தேர்ச்சியாகும். Foundation Degree Programme இல் மாணவர்கள் பயில்கின்ற தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடப்பரப்புகள் மிக விரிவான விடயங்களை உள்ளடக்கியுள்ளதால் இதன் மூலம் பெறப்படுகின்ற அறிவும் அத்துடன் சர்வதேச தரசான்றிதழ்களின் வலிமையும் எந்தவித தொழில் வாய்ப்பினையும் இலகுவாக பெற்றுக் கொள்ள துணை செய்கின்றன!

மேலும் தொழில் வாய்ப்புகளுக்கான நேர்முகப்பரீட்சைகளுக்கு தோற்றுகின்ற போது. Foundation Degree Programme ஊடாக Personality Development எனும் ஆளுமை விருத்தி சிறப்பாக அமைவதன் காரணமாக நேர்முக பரீட்சைகளில் சிரமங்கள் இன்றி தெரிவு செய்யப்படுவதற்கும் வாய்ப்புண்டாகின்றது.

எனவே தற்போதய சூழ்நிலையில் G.C.E (O/L) or G.C.E (A/L) பரீட்சையினை நிறைவு செய்துவிட்டு ஓய்வு காலத்தினை மிகப் பிரயோசனமான, சர்வதேச தரம் கொண்ட பாடநெறியொன்றின் மூலம் பயன்படுத்த விரும்புகின்ற மாணவர்களும், வெளிநாட்டில் உயர்கல்வி அல்லது தொழில்வாய்ப்பு பற்றி சிந்திக்கின்ற மாணவர்களும் Foundation Degree Programme இனை பயில்வதன் மூலம் குறுகிய காலப்பகுதியில் அதி சிறந்த விளைவினையும், அடைவுகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே தங்கள் எதிர்கால இலக்குகளை இலகுவாக எய்தப்படவேண்டும் என எண்ணுகின்ற மாணவர்கள் மூன்று மாத முழுநேரப் பாடநெறியாக கற்பிக்கப்படுகின்ற Foundation Degree Programme இல் இணைந்து கொள்வதன் மூலம் உங்கள் வாழ்வில் துரித வெற்றிபெற வழிபிறக்கும் என்பது உறுதி.

திங்கள் முதல் வெள்ளி வரை நாள் தோறும் இடம் பெறும் இக்கற்கைநெறி குறுகிய காலத்தில் அதிசிறந்த பயன்களை வழங்குவதோடு கிடைக்கப்போகும் சான்றிதழ்களின் சர்வதேச அங்கீகாரமானது எப்போதும் எந்த இடத்திலும் உங்களுக்கு பெருமை சேர்க்கும் என்பது இப்பாடநெறி மூலம் கிடைக்கும் அதி சிறந்த பயன்பாடாகும்.

எனவே London Institute of Further Education இல் இணைந்து Foundation Degree Programme இனை [illegible] நீங்களும் பெற்றி [illegible] றோம்.

இப்பாடநெ[illegible] மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், இல 25 A ஹொஸ்பிட்டல் வீதி, தெஹிவளையில் அமைந்துள்ள London Institute இற்கு நேரடியாக விஜயம் செய்வதன் மூலமோ அல்லது தொலைபேசி எண்களான 0777 – 715788, 0115 518666 ஆகியவற்றுடன் தொடர்பு கொள்வதன் மூலமாகவோ பெற்றுக்கொள்ள முடியும்.

# மேல் கொத்மலை திட்டத்தில் கோடிகளின் மகத்துவம்

**மலையகக் கண்ணோட்டம்**

இரா. புத்திரசிகாமணி

எழில் கொஞ்சும் மலையகம் என்பார்கள். பசுமையான மலையகம் என்பார்கள். ஆனால், கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் முறையாக கறுப்பு மலையகத்தைக் காண முடிந்தது.

மலையகத்தில் ஏற்பட்ட இந்தப் புரட்சிக்கு அரசியல், தொழிற்சங்க பேதங்கள் இன்றி தணிகாசலம் அண்ணன் போன்ற சமூகத் தொண்டர்களும், சமூக நலன் விரும்பிகளுமே அத்திவாரம் இட்டிருந்தனர்.

தணிகாசலம் அண்ணனும் சில தொண்டர்களும் நிலைமையை அவதானிக்க பல இடங்களுக்கும் சென்றனர். மேல் கொத்மலைத்திட்டத்தால் மறையப்போகும் மலையக மண்ணைக் காப்பதற்கே இந்த ஆர்ப்பாட்டம்.

ஊர்வலமாகச்சென்றவர்களையும் டெவன் நீர்வீழ்ச்சிக்கு அருகில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தவர்களையும் பார்த்தபோது தணி அண்ணனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சில புத்திஜீவிகளும், தொண்டர்களும் தணி அண்ணனைச் சூழ்ந்து கொண்டனர்.

"அண்ணன் நாங்கள் எதிர்பார்த்ததை விட மக்கள் மிகவும் ஆர்வத்துடன் போராட்டத்தில் கலந்து கொண்டனர்" என்றார் ஓர் ஆசிரியர்.

"ஆமாம் மாஸ்டர் இதுவரை காலமும் நமது மலையக மக்கள் சம்பள உயர்வுக்காகவும், மற்றும் தொழில் பிரச்சினைகளுக்காகவும் தத்தமது தொழிற்சங்கங்கள் மூலம் போராட்டங்களை நடத்தியதைத் தான் கண்டோம்.

ஆனால், இம்முறை தமது அரசியல் தொழில் சங்க வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு அரசியல் போராட்டம் ஒன்றில் நேரடியாகக் குதித்து தமது உணர்வுகளை வெளிப்படுத்தியது மேலும் மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றார் தணி அண்ணன்.

"ஆமாங்க அண்ண! இந்த மலையகத்தைப் பாருங்கள். பசுமையான தேயிலைச் செடிகளையும், மலைகளையும், கறுப்புக் கொடிகள் மறைத்துவிட்டன. மலையகமே கறுப்பாகக் காணப்படுகின்றது."

## டேஸ்ட்கடை தணிகாசலம்

"உண்மைதான் மாஸ்டர். நமது மக்களை இருட்டில் இருந்து வெளிச்சத்துக்கு மீட்டு எடுக்க வேண்டும். இவ்வளவு காலமும் இந்த மலையகத் தொழிற்சங்கவாதிகள் தொழிற்சங்கக் கட்டுப்பாடு என்ற பெயரில் மக்களை ஒரு இரும்புக் கூட்டுக்குள் அடிமைகள் போல் அடைத்து வைத்துவிட்டனர். வெளி உலகத் தொடர்பு ஏற்படவிடாமல் தடுத்து வைத்து விட்டனர். ஆனால், மக்கள்சக்தி இன்று அந்த இரும்பு வேலிகளை எல்லாம் உடைத்து தகர்த்து விட்டது. இந்த வேகம் தொடரவேண்டும்."

"அண்ணன் இன்னும் ஒரு விடயத்தைப் பாருங்கள். எந்த ஒரு பெருந்தலைவரின் அழைப்பும் இன்றி மக்கள் ஒன்று கூடி விட்டனர்.




தோட்டத்தொழிலாளர்களுடன் இணைந்து கடைகளைப் பூட்டி, போக்குவரத்துகளை நிறுத்தி மாபெரும் ஹர்த்தாலாக நடத்திவிட்டனர்."

"தம்பி இப்போது நாம் நடத்திய போராட்டம் தனி ஒரு மனிதனுக்காகவோ, தனி ஒரு கட்சிக்காகவோ நடத்திய போராட்டம் இல்லை.

இதே போன்று சிலவருடங்களின் முன் ஒரு தொழிற்சங்கம் அஸ்கிரிய பீடாதிபதியையும் தூக்கிக் கொண்டு வந்து தங்கள் சங்கத்துக்கு விளம்பரம் தேடினர். ஆனால் அது பிசுபிசுத்துவிட்டது.

இதனால் இன்று நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டம் இந்த மலையகத் தலைவர்களுக்குப் பலத்த அடியாக அமைந்துவிட்டது என்பது மட்டும் உண்மை."

"அண்ணன் சரியாகக் கூறினீர்கள். நேற்று ஹட்டன் தலவாக்கலை நகரங்களில் சகல கடைகளும் முடப்பட்டிருந்தன. ஆனால் ஒரு மலையக தலைவரின் தூண்டுதலின் பேரில் பொலிஸாரைக் கொண்டு கடைகளை திறக்கச் செய்துள்ளனர்."

"மாஸ்டர் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். இந்த மலையக தொழிற்சங்கவாதிகளுக்கு மலையக வர்த்தகப் பிரமுகர்கள் பெரிதும் பக்கபலமாக இருந்தனர். தேர்தல் காலங்களில் லட்சம் லட்சமாக கொடுத்து உதவினர். ஆனால் இப்போது இவர்களின் சுயரூபம் தெரிந்துவிட்டதால் உண்மையானவர்கள் பக்கம் இவர்கள் சேர்ந்து கொண்டனர். இதனைப் பெரும் தலைவர்களால் சீரணிக்க முடியவில்லை."

"அண்ணன் சொன்னால் அதில் பிழை இருக்காது. இந்த மேல் கொத்மலைத்திட்டத்தில் கோடிக்கு பெரிய மகத்துவம் ஏற்பட்டுள்ளது."

"என்ன மாஸ்டர் கோடிக்கு மகத்துவம் ஏற்பட்டுள்ளதா?"

"ஆமாங்க அண்ணே! கோடி என்பதற்கு எத்தனை அர்த்தம் இருக்கு தெரியுமா? நம்ப மலையகத்தலைவர்கள் மேல் கொத்மலை திட்டத்தைக் காட்டி அரசிடம் வாங்கிய ரூபாய் நோட்டுக்களும் கோடி தான்.

லயன்களின் ஒதுக்குப் புறமாக சாக்கடை சென்று விழும் இடமும் கோடிதான்.

உயிரற்ற உடலுக்கு இறுதியாகப் போர்த்துவதும் கோடிதான்.

நடந்தது என்னவென்றால் நம் தலைவர்கள் நம்மை ஏலம் போட்டு பல கோடி ரூபாய்களை வாங்கிக் கொண்டு, மலையக மக்களை நடைபிணங்களாக்கி லயத்தின் கோடியில் நிறுத்தி இறுதியாக கோடித் துணியைப் போர்த்தி விட்டனர்.

அதுதான் மேல் கொத்மலைத்திட்டத்தில் கோடிக்கு மகத்துவம் ஏற்பட்டது என்று கூறினேன்." என விளக்கம் அளித்தார் மாஸ்டர்.

மாஸ்டரின் விளக்கத்தைக் கேட்ட தணி அண்ணன் வியர்த்துப்போனார். "என்ன மாஸ்டர் இவ்வளவு காலமும் நம்மை எல்லாம் கோடிக்கு ஏலம் போட்டு இவர்கள் சுகபோகம் அனுபவித்து வந்துள்ளவிடயத்தை இன்று நாம் நடத்திய போராட்டம் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துவிட்டது.

ஜப்பானிய அரசு இந்த மேல் கொத்மலைத் திட்டத்துக்கு வழங்கும் உதவிகளை நிறுத்துகின்றதோ, என்னவோ நமது மக்கள் மத்தியில் ஒரு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்திவிட்டது. இப்படி மூன்றாவது சக்தி ஒன்று உருவானது அரசியல் தொழிற்சங்கவாதிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தினாலும், மலையக மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திவிட்டது. அது போதும்" என்று கூறி தணி அண்ணன் விடை பெற்றார்.

## ஒட்டுக்கேட்ட ஊர் இரகசியம்!

தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சரும் தேசியப்பட்டியல் உறுப்பினருமான எம்.எஸ். செல்லச்சாமி தலவாக்கலை பிரதேசத்தில் உள்ள மாரியம்மன் கோவில் ஒன்றுக்கு ஒலி பெருக்கி உபகரணங்களை வழங்குவதாக உறுதியளித்திருந்தாராம்.

அவருடைய உறுதி மொழியை ஊர்ஜிதப் படுத்தி அப்பிரதேச செயலாளரும், கோயில் கமிட்டி செயலாளருக்கு எழுத்துமூலம் அவிறித்ததோடு, மேற்படி கோயில் கமிட்டி தலைவர் – செயலாளர் நீங்கள் தான் என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ஒன்றை உங்கள் பகுதி கிராம சேவகரிடம் பெற்றுவாருங்கள் எனவும் அறிவித்திருந்தாராம்.

பிரதேச செயலாளரின் அறிவித்தலின்படி மேற்குறிப்பிட்ட கோயில் கமிட்டியினர் கிராம சேவகரின் சான்றிதழுடன் சென்று அவரைச் சந்தித்தனராம்.

ஆனால், பிரதேச செயலாளரோ கடிதங்களை வாங்கி வைத்துக்கொண்டு இன்று போய் நாளை வாருங்கள், நாளைக்கு முறைப்படி வழங்குகிறோம் என்று கோயில் கமிட்டியினரை திருப்பி அனுப்பி வைத்து விட்டாராம்.

இவ்வளவு நாட்கள் பொறுத்திருந்தோம். இன்னும் ஒருநாள் தானே, நாளைக்கே வந்து பெற்றுக்கொள்வோம் என கோயில கமிட்டியினரும் திரும்பி விட்டனராம்.

மறுநாள் காலை கோயில்கமிட்டியினர் பிரதேச செயலாளரின் அலுவலகத்திற்குச் சென்றபோது அந்த தோட்டத்தின் இ.தொ.கா. தோட்டக் கமிட்டி தலைவரும் ஆதரவாளர்களுடன் வந்திருந்தாராம்.

குறிப்பிட்ட நேரத்தில் பிரதி அமைச்சர் செல்லச்சாமியும் நேரடியாக பிரதேச செயலகத்திற்கு வந்து சேர்ந்தாராம்.

ஆகா! அமைச்சரே நேராக வந்துவிட்டார். அவர்கைகளாலேயே வாங்குவதும் பெருமை தான் என கோயில் கமிட்டியினர் மகிழ்ச்சி அடைந்தனராம்.

என்ன துரதிர்ஷ்டம். பிரதி அமைச்சர் செல்லச்சாமி வந்ததும் வந்தார். வந்தவுடன் இ.தொ.கா. தோட்டக்கமிட்டி தலைவரை அழைத்து ஒலிபெருக்கி உபகரணங்களை கொடுத்தவிட்டுப் போய்விட்டாராம். கோயில் கமிட்டி தலைவரையோ, செயலாளரையோ ஏறெடுத்தும் பார்க்கவில்லையாம்.

என்ன ஐயா அநியாயம், இது காங்கிரஸ் பணமா அல்லது அரசாங்க அமைச்சின் நிதியா? பிரதேச செயலாளர் ஏன் கோயில் கமிட்டியினரை அழைத்தார் கிராம சேவகரின் சான்றிதழை ஏன் கேட்டார் என்பது புரியாமல் கோயில் கமிட்டியினர் விழிபிதுங்கி நிற்கின்றனராம்.

## மதுவின் சிறைக்குள் மலையகம்

இன்று மலையகம் மதுவின் சிறைக்குள் அகப்பட்டுத் தத்தளிக்கும் நிலை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது. இம்மக்களின் அன்றாட வாழ்வில் ஒன்றாக இது கலந்துவிட்டது. குறைந்த வருமானத்தைப் பெற்றுக்கொண்டு மது, புகைத்தல் போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமையாகி பணத்தை வீண் விரயம் செய்யும் பழக்கம் மேலும் அதிகரித்துச் செல்கிறது. மலையகச் சமூகம் பொருளாதாரத்தில் நலிவடைந்த சமூகமாகப் போவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இரு நூறு வருடங்கள் கடந்து சென்றிருந்தும் எந்த ஒரு முன்னேற்றத்தையும் காணாத சமூகமாக வாழ்ந்து கொண்டு அரசாங்க அனுமதி பெற்ற சாராயக் கடைகள், லயன் குடியிருப்புகளுக்கும் சர்வ சாதாரணமாக பரவியுள்ளது. தோட்டங்கள்தோறும் சிறு கடைகள் நடத்தும் சிலர் இதன் மூலந்தான் தாங்கள் சமூகத்தில் முன்னேற முடியும் என்ற தீய எண்ணத்தோடு இந்த வியாபாரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இது மட்டுமல்லாது இப்பிரதேசங்களிலுள்ள மலைகளில் இரவோடு இரவாக கசிப்பு (கள்ளச் சாராயம்) காய்ச்சல் மற்றும் ஒரு (தம்பு) ம் இருக்கத்தான் செய்கிறது.

இவ்வாறான முறையற்ற வேலைகளை செய்யும் சிலர் தமது சமூகத்தைப் பற்றி சிந்திப்பதில்லை. இச்செயலானது தன் கையை எடுத்து தன் கண்ணில் குத்துவது போன்றதாகும்.

இச்செயல் இவர்களுடைய பணத்தை மாத்திரம் வீண் விரயம் செய்வதில் நின்றுவிடாது உயிர்ப் பலி எடுக்கும் கோரத்தன்மையையும் கொண்டது. மனிதனுக்கு கேடு விளைவிக்கும் [illegible] போன்ற பொருட்களை சேர்த்து தயாரித்து இதற்கு ஆத்தாகள்ளு என்று பெயரிட்டு வியாபாரம் செய்து வருகின்றார்கள்.

இதைத் தொடர்ந்து குடித்து வந்த சிலர் திடீர் திடீர் என்று மரணமானார்கள். இன்னும் சிலர் சுய அறிவை இழந்து வருகின்றனர் என்று இப்பிரதேசத்தில் உள்ள வைத்திய அறிக்கைகள் கூறுகின்றன. இச்சமூக விரோத செயலைச் செய்யும் சிலருக்கு அரசியல்வாதிகளினதும், காவல் துறையினரதும் செல்வாக்கு உண்டு. இதன் காரணமாகத் தான் உயிர்ப்பலி எடுக்கும் வெறித்தனமான செயல் தொடர்ந்து முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த நிலையில் அரசாங்கம் மலையகத்தில் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான சாராயக் கடைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கியுள்ளது. அதில் தலவாக்கலை தொடக்கம் [illegible] வரையில் சுமார் 36 சாராயக் கடைகள் உள்ளன. இதில் லயன் குடியிருப்புகளில் இயங்கும் சட்டவிரோதமான மினிபார்கள் எண்ணில் அடங்கா. அரசாங்கம் இவ்வியாபாரத்துக்கு அனுமதி வழங்கி இருந்தாலும் இது ஒரு சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் அதன் உயிர் நாடியான கல்விக்கும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

### மலையகப் பாதையேல் எங்கும் மதுக் கடைகள் மூடப்படவேண்டும்

பெற்றோர் தங்களின் பிள்ளைகளை வேலைக்காக வெளிப் பிரதேசங்களுக்கு அனுப்புவது தங்களின் வறுமையின் நிமித்தமே. ஆனால், நடப்பதோ வேறொன்று. தொழில் செய்யும் இளைஞர்கள், தவறான முறைகளிலும் செலவு செய்து தங்களையே, தாங்கள் அழிக்க முற்படுகின்றார்கள்.

வருடத்துக்கு ஒரு முறை வீடு திரும்பும் இந்த இளைஞர்கள், பெற்றோரின் எதிர்பார்ப்பை முறியடிக்கின்றார்கள். அரசாங்கம் வழங்கும் சாராயக் கடைகளுக்கான அனுமதிப்பத்திரம் மலையக கட்சிகளின் முக்கிய புள்ளிகளுக்கும் இல்லாமல் இல்லை.

சிலர் இதனை தமது பெயரில் இல்லாவிட்டாலும் தமக்கு நெருங்கிய உறவினர்களின் பெயர்களில் வைத்துள்ளனர். அரசியல் ரீதியான பழிவாங்கல் போதாது என்று இவ்வாறான முறைகளிலும் மலையக மக்களை பலிக்கடாக்களாக பயன் படுத்துவதை, மலையக தலைமைகள் உடன் நிறுத்த வேண்டும்.

### கண் மூடித்தனமாக சிறுவர்களை பழிவாங்க முற்படுபவர்களை தூக்கியெறிய முற்படுங்கள்

தம்முடைய சமூகத்தின் தலைவிதியை மாற்றக்கூடிய இந்த இளைஞர்களோ மதுவின் பிடிக்குள் சிக்குவது கவலை அளிக்கிறது. மலையக சமூகத்துக்கு இன்னும் எத்தனையோ அரசியல் பிரச்சினைகள், அத்தியாவசியமான பிரச்சினைகள் இருக்கின்றன. இக்காலத்தில் அதைப்பற்றி எல்லாம் சிந்திக்காது மினிபார்களுக்கு முக்கியத்துவம் வழங்கி சமூக விரோத செயலில் ஈடுபடுவது கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போன்றதாகும்.

குமரன் விவேகானந்தன்




# விக்கல் வருகிது!

ஷான்பூர் என்ற கிராமத்தில் வர்மா என்ற மருத்துவர் வசித்து வந்தார். இவர் மிகச் சிறந்த மருத்துவர். நோயைச் சரியாக கண்டு பிடித்து உடனடியாக அதற்கு மருந்து கொடுத்து குணமாக்கி விடுவார்.

எனவே, இவரைத் தேடி பல ஊர்களில் இருந்தும் மக்கள் வந்து கொண்டே இருப்பர்.

வர்மாவும் பலவிதமான பச்சிலைகளை அரைத்து விசேட மருந்துகளைத் தயாரித்து மக்களின் பிணியை உடனுக்குடன் போக்கி வந்தார். எனவே மக்கள் வர்மாவை தெய்வமாகவே மதித்தனர்.



அரசன் எவ்வளவோ வசதிகள் செய்து தருகிறேன் என்று சொல்லியும் கேளாமல் தன்னுடைய சின்னக் குடிசையிலேயே ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் வாழ்ந்து வந்தார் அவர்.

மக்களிடம் இவ்வளவு பணம் என்று கேட்கமாட்டார்.

அவர்கள் கொடுப்பதை மட்டும் வாங்கிக் கொள்வார். வர்மாவிடம் சின்னு என்பவன் உதவியாளனாக இருந்தான். இவன் ரொம்பத் துடுக்குத்தனம் நிறைந்தவன்! குடு குடு என்று காரியங்களைச் செய்வான். வர்மாவிடம் வைத்தியம் கற்றுக்கொண்டு தானும் அவரைப்போல் புகழ்பெற வேண்டும் என்பது சின்னுவின் ஆசை.

ஒருநாள் பச்சிலை ஒன்றை இடித்துக் கொண்டிருந்தார் வர்மா. அவருக்குத் தேவையான பச்சிலைகளை எடுத்துக்கொடுத்து உதவி செய்து கொண்டிருந்தான் சின்னு.

''சின்னு! சில நோய்களுக்கு நம்மால் இன்னும் மருந்து கண்டுபிடிக்க முடியவில்லை. இப்போது தொடர்ந்து விக்கல் வருகுதென்று வைச்சுக்கோ! அதுக்கு எந்த மருந்தும் கிடையாது. ஓங்கி ஒரு அடி கன்னத்தில் அடித்தால் போதும். அந்த அதிர்ச்சியிலேயே விக்கல் நின்றுவிடும். அதைத்தவிர வேறு வழியில்லை.'' என்றார்

எல்லாவற்றையும் அக்கறையுடன் கேட்டுக் கொண்டிருந்தான் சின்னு.

இரண்டு நாட்களுக்கு பின் –

மாட்டு வண்டியில் இரண்டு மனிதர்கள் வந்து கொண்டிருந்தனர். ஒருவன் அவசரமாக வண்டியை விட்டு இறங்கி, மருத்துவரிடம் ஓடி வந்தான்.

''விக்கல்.... தொடர்ந்து விக்கல் எடுக்குது. ஏதாவது மருந்து இருக்கா வைத்தியரே?'' என்றான் அவசரமாக.

வர்மா பச்சிலைகளை அரைத்துக் கொண்டிருந்ததால், சின்னு எழுந்து வந்தான். அவனுக்குத் தான் விக்கலைப் போக்க வழி தெரியுமே. எனவே அவனே வைத்தியம் பார்க்க முடிவு செய்தான்.

வந்த மனிதரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். ''இப்போது விக்கல் நின்றுவிடும் இதுதான் விக்கலுக்கான மருந்து. வேறு மருந்தே இல்லை'' என்றான் பெருமையாக.

'பொம்' என்று வீங்கிய கன்னத்தை துடைத்துக் கொண்டே ''ஏ... எனக்கு விக்கல் இல்லை; என் அண்ணனுக்குத் தான். அவர் வண்டிக்குள் உட்கார்ந்திருக்கிறார்'' என்றார் வந்தவர்.

''சின்னு! அவசரப்பட்டு வைத்தியம் பார்க்கக் கூடாது அது ஆபத்தில் முடிந்துவிடும்'' என்றார் வர்மா.

திருதிரு என்று விழித்தான் சின்னு.

## சிறார்களின் கைவண்ணம்




## பிரிகேட் பறவை!

**விரைவு கப்பலை போன்ற பறவை!**

இந்தப் பறவைக்கு ஆக்கிரமிக்கும் பார்வையும், கொடுமையான வளைந்த அலகும் உண்டு. இது தொடர்ந்து வேட்டையாடுகின்ற திறமை கொண்டது. தன்னால் உணவுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பறவைகளையோ அல்லது பிராணிகளையோ இது தப்பிச் செல்ல விடுவதில்லை. அத்தனை பொல்லாத பறவை. சுழற்காற்றை எதிர்த்து செல்லும் சில பறவைகளில் இதுவும் ஒன்று. இதனுடைய உணவானது புதிதாக குஞ்சு பொரிக்கப்பட்ட கடல் ஆமைகள், மீன்கள், சிறிய பறவைகள் ஆகும்.

இப்பறவை தன்னுடைய கூடுகளை மரத்தில் கட்டும். ஆண் பறவை தனது சிவப்பு தொண்டைப் பகுதியில் உள்ள பையை விரிவடைந்த பலூனைப் போல் காட்டும். இவை மிகவும் இலகுவாக மனிதர்களோடு பழகும். இவற்றை மிகவும் சுலபமாக பழக்க முடியும். தீவுகளுக்கிடையில் செய்திகளை அனுப்ப இவைகளுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வகை பறவைகள் மிக உஷ்ணமான அமெரிக்க பகுதியிலும், சூடான கடற்கரை பகுதிகளின் அருகிலும் வசிக்கும்.

## 33 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

# தொடரும் தவிப்பு

தன் கணவர் விஜயன் மற்றும் குடும்பத்தாருடன் வயிற்றில் குழந்தையோடு தமிழ்நாட்டு மண்ணில் காலடி வைத்த போது செல்வலட்சுமியின் மனமெங்கும் ஒருவித நிம்மதி பரவியது. குண்டுச் சத்தத்திற்கு நடுவேயான வாழ்விற்கு ஒரு முற்றுப்புள்ளி. இனி உயிருக்குப் பயந்து வாழ வேண்டியதில்லை. சுதந்திர மனிதர்களாக தாய்மண்ணில் வாழப்போகும் மகிழ்ச்சி.

தமிழ்நாட்டைத் தாய்நாடாகக் கொண்ட போதும் பிழைப்பிற்காக இலங்கை சென்ற குடும்பம் செல்வலட்சுமியுடையது - செல்வலட்சுமி சுருக்கமாக செல்வி பிறந்து வளர்ந்ததெல்லாம் ஈழ மண்ணில்தான் எனினும், தாய்நாட்டுத் தாகம் உள்ளூர இருந்தது. அங்கேயே விஜயனை மணந்து இன்று ஒரு குழந்தைக்குத் தாயாகும் சூழலில் போதிய வருமானமின்றி உயிருக்குப்பயந்து ஒவ்வொரு நொடியும் கழிப்பது கொடுமையாய் இருந்தது.

தாய்மண்ணிலே தன் குழந்தையை ஈன்றெடுத்த மகிழ்ச்சி செல்விக்கு. 6 மாதங்கள் நிமிடமாய் ஓடின. தூத்துக்குடி அகதி முகாமில் பெரிதாகப் பிரச்சினை என்று இல்லாவிட்டாலும் போதிய வருமானம் இல்லை.

சென்னை சென்றால் வாய்ப்புகள் அதிகம் இருக்கலாம் என்ற நம்பிக்கையில் சென்னை வந்து ஒரு வாடகை வீடு எடுத்து வசிக்கத் துவங்கினார். செல்வி எதற்காக தாய்நாட்டிற்கு வரத் துடித்தாரோ அதற்கேற்றாற் போல் நிம்மதியான வாழ்க்கை. பொருளாதார பிரச்சினைகள் இருந்தபோதிலும் சமாளிக்கக்கூடியதாகவே இருந்தது.

அகதி முகாமில் உடன் இருந்தவர்கள் பழகியதுபோல்நட்புடன் சென்னைவாசிகள் பழகாதது செல்விக்கு ஒரு குறையாகவே இருந்தது. எப்போதாவது கணவர் அழைத்து வரும் ஈழத்து நண்பர்கள் ஒரு பெரிய ஆறுதல். முன்பின் அறியாதவர்களாயினும் தான் பிறந்த மண்ணை சேர்ந்தவர்கள் என்ற பாசத்தில் அவர்களை உபசரிப்பதில் தனி சுகம். அப்படி விருந்தோம்பிய சுகமே தனக்குப் பேரிடியாய் வரப்போவது செல்விக்கு முன்பே தெரிந்திருந்தால்....?

அந்தக் கொடிய நாளும் வந்தது. ஜூலை 9, 1991. எட்டு மாதக் கைக் குழந்தையுடன் அவரை கொண்டு சென்றது சி.பி.ஐ. கணவர் தந்தை இருவரும் உடன் வந்ததால் சிறிதளவு மன தைரியத்துடன்தான் சென்றாள். ஆனால், நடந்ததோ வேறு.

'மல்லிகை' – பூக்களில் மெல்லியதை இந்தக் கொடியவர்களின் இருப்பிடத்திற்கு பெயராய் சூட்டியது யாரோ!

மல்லிகைக்குள் நுழைந்த நிமிடமே மூவரும் வெவ்வேறு திசையில் பிரிக்கப்பட்டனர். துவங்கியது கொடுமைப்படலம். உடல் ரீதியாக துன்புறுத்தாமலேயே இத்தனை கொடுமைகள் செய்யமுடியும் என்பது செல்விக்கு பேரதிர்ச்சியாக இருந்தது.தான் எதற்காக கொண்டுவரப்பட்டிருக்கிறோம் என்பதுகூடப் புரியாத நிலையில் மேலும் பல புதிரான புரியாத கேள்விகள். ஏதேதோ பெயர்களைக்கூறி தெரியுமா என்பதும், முன்பின் பார்த்திராத மனிதர்களைக் காட்டி இவன்தானே, அவன்தானே என அடையாளம் காட்ட சொல்வதும் செல்விக்கு ஏதோ ஒரு புதிய உலகத்திற்கே வந்ததுபோல் இருந்தது. சரியான உணவின்றி, உறக்கமின்றி 21 நாட்கள்..... அழும் குழந்தையை சமாதானப்படுத்தக்கூட தெம்பின்றி..... உடலளவில், மனதளவில் முற்றிலும் சோர்ந்து துவண்டுவிட்டார்.

21ஆம் நாள் அந்தக் கட்டிடத்தைவிட்டுவெளியே அழைத்துவரப்பட்டதும் வந்த நிம்மதி, சில நிமிடங்களிலேயேகாணாமல் போனது. ஒரு சிறையிலிருந்து மற்றொன்று என்பதுபோல், சி.பி.ஐ. பாதுகாப்பிலிருந்த சைதாப்பேட்டை சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டாள். ஒரே ஆறுதல் அங்கு ஏற்கனவே இருந்த அவளுடைய மாமனார்தான். அவர் மூலம் தெரிந்த விசயங்கள் மேலும் மனநிம்மதியை அழிப்பதாகவே இருந்தன. கிராமத்திலிருந்த உறவினர்கள் பலரும் இரண்டிரண்டு நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட கோரம்.

மல்லிகையில் நடந்தது பெருமளவு இங்கும் தொடர்ந்தது. அங்குதான் அறிமுகமானாள் சாந்தி. தன்னைப் போலவே கைக்குழந்தையுடன் இருந்த அவள் மீது இயல்பாக ஒரு நட்புணர்வு தோன்றியது. அந்தப் பெண் பட்ட துன்பங்கள் நட்பை இறுக்கியது. செல்வியின் கணவரைப் போலவே சாந்தியின் கணவரும் சி.பி.ஐ.பிடியில்.



சாந்தியின் அலறல்....
எதிரொலியாய்
அலறும் மகனின் குரல்.

தன்னைவிட அதிகமாய் சாந்தியை அதிகாரிகள் துன்புறுத்தியது செல்விக்கு சாந்தி மீது பரிதாபத்தை ஏற்படுத்தியது. அவளை சி.பி.ஐ. அதிகாரிகள் அழைத்துச் சென்ற நேரங்களில் தன் மகனைப்போல் அவளது மகனையும் பார்த்துக்கொள்ள துவங்கினாள்.

எத்தனையோ நாட்கள் மதியம் 2 மணிக்கு அழைத்துச் செல்லப்பட்டு சாந்தி மறுநாள் அதிகாலை 3 மணி வரை விசாரணை என்ற பெயரில் துன்புறுத்தப்பட்டு சக்கையாய் வெளிவரும் நிலை.

முகாமுக்குள்ளேயே இருந்த ஒரு அறை தான் விசாரணை அறையாய் பயன்படுத்தப்பட்டது. அந்த அறையிலிருந்து சாந்தியின் அலறல் வெளிப்படும் ஒவ்வொரு முறையும் அதன் எதிரொலியாய் பயந்து அலறும் அவளது மகனின் குரல் அறைக்கு வெளியே.

மிகக் கொடுமையான காலகட்டங்கள்.

நாங்கள் கேட்பதை எழுதிக்கொடு உன்னை விட்டுவிடுகிறோம் என ஆசை வார்த்தைகள். செல்வி மிகுந்த தைரியத்துடன் மறுத்துவிட்டாள். 'சுபாவும் தணுவும் என் வீட்டில்தான் தங்கியிருந்தனர். தணுவுக்குக் குண்டை நான்தான் கட்டிவிட்டேன். இதை மட்டும் ஒத்துக்கொள் உனக்கு அதிகம் பிரச்சினை வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன்' என்றார் விசாரணை அதிகாரி.

'நீங்கள் கூறுபவர்களை எனக்குத் தெரியாது. நடக்காத ஒன்றை என்னால் எழுதித்தரமுடியாது' எனச் செல்வி பிடிவாதமாக மறுக்க.

'சரி! அப்படியானால் உன் கணவரை யாவது நாங்கள் சொல்லும்படி நடக்கச் சொல். உன்னை விட்டுவிடுகிறோம். உன் குழந்தைக்கு வசதி வாய்ப்புகள் செய்து தருகிறோம்' – மீண்டும் ஆசைவார்த்தைகள்.

செல்விக்கு வேகமாக யோசனை ஓடியது.... தகப்பனும் சிறையில்... மாமனார் தன்னுடன் சிறப்பு முகாமில்... வெளியே தாயும், மாமியாரும் ஆதரவின்றி.... போதாதென்று உறவினர்களுக்கு வேறு அவ்வப்போது பொலிஸ் தொல்லை..... பிள்ளைக்கு வசதி செய்கிறார்களோ இல்லையோ இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் விடிவு வர கணவரிடம் பேசுவதுதான் ஒரே வழியென முடிவெடுத்தாள். நாளும் அதிகாரிகளிடம் பட்ட கொடுமைகளால் மிகுந்த மனச்சோர்வுக்கு ஆளாகியிருந்த அவருக்கு இதைத் தவிரவும் வேறு முடிவு தோன்றவில்லை.

அவள் சம்மதித்த மறுநிமிடமே விசாரணை அதிகாரி மல்லிகையிலிருந்த விஜயனுடன் தொலைபேசி தொடர்பு ஏற்படுத்தித் தந்தார். விஜயனின் முதல் கேள்வி – குழந்தை நலமா? – நலமென உரைத்த செல்விக்கு நாக்கு வறண்டது. மீண்டும் விஜயனே பேசினார்.... 'என்னதான் சொல்றாங்க?' அதற்கு மேல் அடக்கமுடியாது வெடித்த அழுகையூடே, 'அவங்க சொல்றபடி செஞ்சிருங்க என்னால தாங்க முடியல....' எனக் கதறினாள் செல்வி... அடுத்த வார்த்தை பேசும்முன் தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஆனால், செல்விக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அதிகாரிகளின் விசாரணைக் கொடுமைகள் தொடரவில்லை எனினும் சிறப்பு முகாம் சிறைவாசம் தொடர்ந்தது.

மேலும் ஒரு 8 மாதம். இதற்கிடையே செங்கல்பட்டு சிறைக்கு மாற்றப்பட்டிருந்த விஜயனுக்கு வழக்கறிஞர் துரைசாமி பரிச்சயமானார். அவர் மூலமாக வழக்குத் தொடுத்து செல்வி சிறப்பு முகாமிலிருந்து வெளியே வந்தார்.

10 நாட்கள் ஊருக்குச் சென்று அத்தை வீட்டில்தங்கிவிட்டு பொருட்களை எடுத்துச் செல்ல மீண்டும் சைதை சிறப்பு முகாமுக்கு வந்த செல்விக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அவருக்கு முன்பே அங்கு வந்து காத்திருந்தனர் சி.பி.ஐ அதிகாரிகள். உடனே தங்களுடன் கிளம்புமாறு உத்தரவிட்டனர். செல்விக்கு அடி வயிறு கலங்கியது. இந்த முறை எத்தனை நாட்களோ? என்ன என்ன சித்திரவதைகளோ என நினைக்கையிலேயே பகீரென்றது. எதற்கும் மாற்றுடை எடுத்துக் கொள்ளலாமென நினைத்தாள். ஆனால், எதற்கும் நேரம் கொடுக்கவில்லை அவர்கள். இழுத்துச் சென்றுவிட்டாள். இந்த முறை ஏதோ ஒரு புதிய இடம். எங்கு செல்கிறோம் என்பது செல்விக்குப் புரியவில்லை. இறுதியில் வந்துசேர்ந்த இடம் பூந்தமல்லி சிறை என்பதை அவர்கள் பேச்சிலிருந்து ஒருவாறு புரிந்து கொண்டனர். மல்லிகையோ, சிறப்புமுகாமோ – விசாரணைக் கூடங்கள். ஆனால், இந்த முறை சிறைக்கு ஏன் கூட்டிச் செல்கிறார்கள்? ஏதோ விபரீதம் நடக்கப் போகிறதென்று மட்டும் செல்விக்கு புரியத் தொடங்கியது.

சிறையில் ஒரு தனி அறையில் அவளையும் குழந்தையையும் வைத்துப் பூட்டிவிட்டுச் சென்றனர். பசித்தது. குழந்தையும் பசியால் அழத்துவங்கினான். ஒன்றரை வயதுப் பாலகனுக்கு என்ன தெரியும்? அவனுக்குக் கூட உணவளிக்காமல் சென்றுவிட்டனரே பாதகர்கள். பெற்ற மனம் பதறியது. அழுது அழுது சோர்ந்து உறங்கியே விட்டான் பிள்ளை.

(தவிப்பு தொடரும்.....)

## யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?

# அனல் காற்றின் கொடூரம்

சென்னையில் அனல் காற்றுடன் 106 டிகிரி வெய்யில் கொளுத்துகிறது. ஒரே நாளில் வெப்பத்தின் அளவு 5 டிகிரி உயர்வதால் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர்.


பொதுவாக அதிகபட்ச வெய்யில் கொளுத்தும் 'அக்னி நட்சத்திரம்' கடந்த 4ஆம் திகதி தொடங்கியது என்றாலும் முதல் நாளிலேயே மழை பெய்ததால் வெயிலின் உக்கிரம் சற்று தணிந்து காணப்பட்டது.

அன்று முதல் படிப்படியாக வெப்பம் அதிகரித்து சென்னையில் வெய்யில் அளவு 100 டிகிரியை தாண்டிவிட்டது.

கோடை வெய்யில் சென்னை நகர மக்களை வாட்டி வருகிறது. அனல் காற்றும் சுட்டெரிக்கிறது. சென்னை நுங்கம்பாக்கத்தில் 106.34 டிகிரியும், மீனம்பாக்கத்தில் 105.62 டிகிரியும் வெய்யில் அளவு கடந்தவாரம் பதிவாகி இருந்தது.

கடும் வெய்யிலினால் வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது. தலையில் தண்ணீர் நனைத்த துண்டு, கைக்குட்டைகளைப் போட்டபடி சிலர் வெய்யிலைச் சமாளிக்கின்றனர்.

இரு சக்கர வாகனங்களில் செல்பவர்களும், ஹெல்மட் அல்லது முகமூடி அணிந்து செல்கின்றனர். பெண்கள்



ரயிலில் பயணித்தவர்களையும் அனல் காற்று முகம் சுளிக்க வைத்து வருகிறது.

வீடு, அலுவலகங்களில் இருந்தவர்களையும் கோடை வெப்பம் விட்டு வைக்கவில்லை. மின்விசிறிகளும் அனல் காற்றை உமிழ்ந்துவிடுவதால் அதன் பயன் பாடு பலனற்றுப்போகிறது.

வெய்யில் தாக்கத்தினால் பலர் நீர்க்கடுப்பு போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டு சென்னை பெரியாஸ்பத்திரிக்கு வந்து சிகிச்சை பெறுகின்றனர்.

வெய்யில் கொடுமையால் வெளியே தலை காட்ட முடியாமல் வீட்டுக்குள் முடங்கிக்கிடப்போர் மாலையில் கடற்கரை மற்றும் அருகில் உள்ள பூங்காக்களுக்குச் சென்று தம்மை ஆசுவாசப்படுத்திக்கொள்கின்றனர். சென்னை மெரினா, பெசன்ட்நகர் மற்றும் எலியட்ஸ் கடற்கரைகளில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

நீச்சல் குளங்களில் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் கூட்டம் நிரம்பி வழிகின்றது. சென்னை மெரினா, செனாய் நகர், வேளச்சேரி மற்றும் அண்ணா நீச்சல் குளங்களில் கோடைக்கு இதமான குளியல் போட பலர் குவிகின்றனர்.

வெய்யிலால் மகிழ்ச்சி அடைபவர்கள் குளிர்பான வியாபாரிகள் தான். இளநீர் மற்றும் குளிர்பானக் கடைகளில் விற்பனை அமோகமாக இருந்துவருகிறது. ஐஸ்கிரீம் பார்லர்களில் விற்பனை சூடு பிடித்துவருகிறது.

# பித்தன் பதில்கள்

*செ.சரஸ்வதி, குப்பிளான்.*

கே: பித்தா! காதலில் விழுந்த ஆணையும் – காதலில் விழுந்த பெண்ணையும் எப்படி அடையாளம் காண்பது?



ப: அடிக்கடி கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டு கப்பல் கவிழ்ந்து விட்டதுபோல் எப்போதும் யோசித்துக் கொண்டு லூசுகள் போல் அடிக்கடி சிரித்துக் கொண்டிருந்தால் அவன் காதலில் விழுந்துவிட்டான் என்று அர்த்தம்.

வீட்டை விட்டுக் கிளம்புவதற்கு முன்னர் ஒரு சட்டையைப் போட்டுவிட்டு பின்னர் அதனை மாற்றி வேறொன்றைப் போட்டு அதுவும் பிடிக்காமல் வேறொன்றுக்கு மாறி அதுவும் பிடிக்காமல் திரும்பவும் முதலிலே போட்ட சட்டையைப் போட்டுக் கொண்டு அரை லூசுகள் போல் தனக்குத் தானே கதைத்துக் கொண்டு திரிந்தால் அவள் காதலில் விழுந்துவிட்டாள் என்பது அர்த்தம்.

*என்.ஜானகி, வேலணை.*

கே: அன்பின் பித்தா! மனைவியிடம் அடி வாங்கும் கணவன்மார்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: ம்... ஹ¨ம்... குகைக்குள்ளே புகுந்து சிங்கத்தை சீண்டிப்பார்க்கிறீர்? ஐயரிடமே விபூதியைப் பற்றி விளக்கம் சொல்லக் கேட்கிறீர். பழனிக்குச் சென்று பஞ்சாமிர்தம் பற்றியும், திருநெல்வேலிக்குச் சென்று அல்வாவைப் பற்றியும், திருப்பதியிலே போய் மொட்டைத் தலையர்கள் பற்றியும் விலாசம் விசாரிக்கிறீர். கடலிலே போய் உப்பைத் தேடுகிறீர், கள்ளிலே மப்பைத் தேடுகிறீர். வேண்டாம் கண்ணு....



வேண்டாம். நாங்களெல்லாம் இதில PHD முடிச்சிருக்கோம். இருந்தும் சொல்ல வெளிகிட்டம் என்றால் நாடு தாங்காது கண்ணு... தாங்காது.

*த.ரஜனி வாதிட், கல்முனை.*

கே: பித்தா! சந்திரமுகி படத்தையும் நானா ரஜினியையும் இந்தக் கிழி கிழிச்சீரே படம் பிய்ச்சுக் கொண்டு ஓடுதே! இனியாவது கொஞ்சம் அடங்குகிறீரா?

ப: நானா படம் பிய்ச்சுக்குதோ கிழிச்சுக்குதோ என்னட அபிப்பிராயம் அதே... தான். ... ரஜனி நானா... வடிவேலு நானாவோட பொண்டாட்டிகூட அடிக்கிற லூட்டி சின்னஞ் சிறுசுகளோட உட்கார்ந்து படம் பாக்கிற மாதிரியா ஈக்கு.... சே... காது கூசல்ல... இது சுப்பர்ஸ்ரார் நானாவுக்கு ஒணுமா.... செல்லுங்க....

*வி.ராஜ்மோகன், கிளிநொச்சி.*

கே: அன்பின் பித்தா! நடிகர் விஜய்யின் அடுத்த படம் என்ன? தயவு செய்து அறியத்தாருங்கள். நான் அவரின் தீவிர ரசிகன்?

ப: 'சிவகாசி, திருப்பாச்சியை' இயக்கிய பேரரசு இந்தப் படத்தை இயக்குகிறார். "M குமரன்" நாயகி அஸின்தான் கதாநாயகி.

*கயா, மல்லாவி.*

கே: அன்பின் பித்து மாமா! உங்களால் என்னை மருமகளாக ஏற்றுக் கொள்ள முடியுமா? நான் உங்கள் மகனை காதலிக்கிறேன். மாட்டேன் என்று மட்டும் சொல்லி விடாதீர்கள்?

ப: எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. நீங்கள் 20 வருடங்கள் வரை காத்திருக்கத் தயாரா?

*எஸ். மோகனதாஸ், முறிகண்டி.*

கே: ஹாய் பித்தா? எப்போதாவது ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு காசில்லாமல் உழுந்தரைத்த அல்லது விறகு கொத்திய வரலாறு உண்டா?



ப: நான் எப்போதும் வீட்டில் சாப்பிட்டு விட்டே உளுந்தரைத்துக் கொடுப்பதும், விறகு வெட்டிக் கொடுப்பதும் வழக்கம். இந்த லட்சணத்தில் ஹோட்டல் எல்லாம் எனக்கு ஜ¬ஜ¬பி... ஆனால் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஏனென்றால் இப்போ எந்த ஹோட்டலில் உளுந்தை ஆட்டுகிறார்கள்? கரண்டைப் போட்டால் தோசை மா ரெடி.. விறகு யார் கொத்துகிறார்கள்? எங்கும் காஸ்! பிறகு எப்படி?

*செ.தாரங்கன், ஆனைக்கோட்டை.*

கே: பித்தா.... எனக்கும் ஒரு ஜோக் சொல்லுமேன்?

ப: புகழ் பெற்ற புத்தக நிறுவனம் ஒன்று பெரிய அளவான பத்துப் பாகங்களைக் கொண்ட கலைக் களஞ்சியத் தொகுதி ஒன்றை வெளியிட்டது. அதனை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு விற்பனைப் பிரதிநிதி ஒருவரை நியமித்து அவரை வீடு வீடாகத் திரிந்து விற்கப் பண்ணியது.

விற்பனைப் பிரதிநிதியும் அந்த புத்தகத் தொகுதிகளைக் கொண்டு திரிந்து விற்பனை செய்து வந்தார். இடையிலே மாளிகை போல இருந்த வீடு ஒன்றின் கதவைத் தட்டினார். வீட்டிலிருந்து வயோதிபர் ஒருவர் எட்டிப் பார்த்தார்.

அவரிடம் விற்பனைப் பிரதிநிதி அந்த மொத்தமான புத்தகத் தொகுதிகளைக் காட்டி அதன் சிறப்புகளைப் பற்றி நீண்ட நேரமாக விளக்கினார்.

புத்தகங்களை வாங்கிப் பார்த்த பெரியவர் ஏதோ நினைத்தபடி அந்தப் புத்தகத் தொகுதியைத் தூக்கிக் கொண்டு வீட்டினுள் சென்றார். சிறிது நேரத்தில் வெளியே வந்த அவர், அந்தப் புத்தக தொகுதியின் முதல் இரண்டு பகுதிகள் அடங்கிய புத்தகங்களை மட்டும் வாங்கிக் கொள்வதாக கூறினார்.

விற்பனைப் பிரதிநிதிக்கோ ஆச்சரியம். "ஏன் ஐயா இரண்டு புத்தகங்கள் மட்டும் வாங்குகிறீர்கள், புத்தகத்தின் 10 தொகுதிகளையும் வாங்கினால்தானே முழுமையான பயனைப் பெறமுடியும்" என்றார்.

அதற்கு அந்தப் பெரியவர் சொன்னார். "எங்கள் வீட்டினுள் இருக்கும் பெரிய அலுமாரி ஒன்றின் கால் உடைந்து விட்டது. அதற்கு முட்டுக்கொடுப்பதற்கு இந்த இரண்டு புத்தகங்களுமே போதுமானவை. எனவேதான் இந்த இரண்டு புத்தகங்களையும் வாங்குகிறேன்." என்றார்.

விற்பனைப் பிரதிநிதிக்கு தலை சுற்றிக் கொண்டு வந்தது.

*தரகர் பொன்னன், உடுவில்.*

கே: பித்தனுக்கு! தங்களுக்கும் தங்கள் மனைவிக்கும் ஒத்துப்போவதில்லையாமே? அப்படியானால் விவாகரத்துச் செய்துவிட்டுவாரும். நீர் கேட்கும் சீதனத்துடன் அழகான பெண் ஒருவரை உமக்குப் பேசி முடித்து வைக்கிறேன்.. ஓ... கே... யா?

ப: பாராடா பார். நான் இருக்கிற இடத்தை தேடித் தேடி வாறாங்கப்பா... யோவ் உன்னை நான் கேட்டனா. ஏனய்யா.. ஆரின்ர குடும்பத்தில கும்மியடி நடக்குது எண்டு பார்த்து குழப்பம் பண்ணப் பார்க்கிறா... யோவ்.. ஏற்கனவே கொதிக்கிற எண்ணெய்ச் சட்டிக்குள்ளயிருந்து தப்பி... எரியிற அடுப்பில விழ நான் தயாராயில்லை. சும்மா அங்க இங்க சுரண்டி அவனைச் சங்கடத்தில மாட்டிவிட்டு கொமிஷனை வாங்கிக் கொண்டு போக தொங்கப்போட்டுக் கொண்டு (நாக்கை) அலையாதையும் பொத்திக் கொண்டிரும். இல்ல இழுத்து வைச்சு அறுத்துடுவன் மவனே.

(அப்பாடா... இந்தக் கேள்விக்கு நான் என்ன பதில் எழுதப் போகிறேன் என்று கண்காணித்துக் கொண்டிருந்த மனைவி இப்போதான் வெளிய போனாள்) அது சரி...ஹி....ஹி எப்பிடி வடிவான பெட்டையா இருக்குதே? எவ்வளவு சீதனம் கறக்கலாம்?

*எம்.விஜி, புதுக்குடியிருப்பு.*

கே: அன்பின் பித்தனே! பிள்ளைகள் மத்தியில் திறமை, அழகு என பலவிடயங்களை வைத்துப் பாகுபாடு காட்டும்பெற்றோர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்? அவர்களுக்கு நீர் கூறும் அட்வைஸ் என்ன?

ப: நான் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். திறமையுள்ள பிள்ளை, அழகான பிள்ளை என்று ஊட்டி ஊட்டி வளர்த்த பிள்ளைகள் பல தங்களது திறமையின் அடிப்படையில் முன்னேறி அழகின் அடிப்படையில் வாழ்க்கையை தேடிக்கொண்ட பின்னர் தாய் – தந்தையைக் கவனிக்காமல் அவர்கள் தங்கள் திறமைக்கும் – அழகுக்கும் இடைஞ்சல் அவமானம் என்று கருதி வயோதிப மடங்களில் அவர்களை தள்ளிவிட்டதைப் பார்த்திருக்கிறேன். எனவே எவரையும் ஒதுக்காதீர். வீடு கட்டுவோரினால் ஒதுக்கப்பட்ட கல்லே வீட்டுக்கு மூலைக்கல்லாகலாம்.

*என். ஜானகி, வேலணை.*

கே: அன்பின் பித்தா! தற்கால நட்பை நம்பலாமா?



ப: சட்டைப்பையிலே கையை வைக்காத வரை நம்பலாம். ஆனால், அப்படி கிடைப்பது ரொம்ப அருமையோ அருமை.

*பி.என். சங்கர்பால, யாழ்.பல்கலைக்கழகம்.*

கே: பித்தா! உண்மையைச் சொல்லும். இன்றைய இளைஞர்கள் அதிகமாக விரும்புவது மதுவையா? மாதுவையா? உங்கள் உணர்வை வைத்துச் சொல்ல வேண்டாம். ஏனெனில் உங்களை நான் ஆணெனக் கருதவில்லை?



ப: உங்கள் கடைசி வரிகளைப் பார்த்தால் ஏதோ ஆண்தான் மதுவையும் – மாதுவையும் தேடுவது போலவும் அவர்களுக்குத்தான் இது பற்றிய உணர்வு இருப்பதாகவும்(என்னை வேறு மட்டம் தட்டி) குறிப்பிட்டிருக்கறீர். ஐயோ... இல்லை கண்ணு. இப்போதெல்லாம். ஆண்களைவிட பெண்கள் தான் மதுவையும், மாதுவையும் தேடி அலையாக அலைகிறார்கள். ஆண்கள்.... பாவம்.... மாதுவை மட்டும் அதிகமாக விரும்புகிறார்கள். ஏனென்றால் மாதுக்களுக்குள் – மது அடங்கி இருக்கிறதே! எனவே ஏன் வீணாகப் பிரத்தியேகச் செலவு என்று... பரந்த நோக்கம் அவர்களுக்கு.

*ஏ.சசிகலா, மல்லாவி.*

கே: அன்பின் பித்தனே! கேள்வி ஞானம் சிறந்ததா? அனுபவ ஞானம் சிறந்ததா?

ப: கே.ஞானத்தைவிட – அ.ஞானம் சிறந்தது ஏனென்றால், கேள்வி ஞானம் மூலம் காரியத்தில் இறங்கும் பலர் அனுபவ ஞானத்தின் மூலம்தான் உண்மையான ஞானத்தை பெறுகிறார்கள். பட்டுத் திருந்துவது என்று சொல்வார்களே அது அனுபவ ஞானத்தில்தானே உள்ளது.

---

# ஆண்களின் உடலில் இல்லாதது பெண்களின் உடலில் இருக்கிறது அது எது?

ஆண்களின் உடலில் இல்லாத ஒன்று பெண்களின் உடலில் மட்டும் இருக்கிறது. அது எது தெரியுமா? அதுதான் "ஈஸ்ட்ரோஜன்" எனப்படும் சுரப்பி அல்லது ஹார்மோன்.

இந்த சுரப்பி தான் பெண்களை ஆண்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இது பெண்களின் கருமுட்டையிலிருந்து உருவாகி சுரக்கத் தொடங்கும்போதுதான் ஒரு பெண் பருவமடைகிறாள்.



பெண்களின் தோள், இடுப்பு, மார்பு, கருப்பை, பால் சுரக்கும் நாளங்கள் நீண்ட கூந்தல் ஆகியவற்றை இந்த ஈஸ்ட்ரோஜன் சுரப்பிதான் வளர்க்கிறது. ஆண்களைவிட பெண்கள் நளினமாகவும், மென்மையாகவும் நடமாடக் காரணமே ஈஸ்ட்ரோஜன் சுரப்பி தான்.

இதன் வேலை இத்துடன் முடிந்துவிடுவதில்லை. உடலின் இரத்த ஓட்டம், எலும்புகளின் உறுதி, அறிவு முதிர்ச்சி, கொலஸ்ட்ரோலைக் கட்டுப்படுத்தல், மாரடைப்பைக் கட்டுப்படுத்தல் போன்ற எண்ணற்ற தொழிற்பாடுகளில் இந்த சுரப்பிக்கு முக்கிய பங்கு உண்டு.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈஸ்ட்ரோஜன் ஒரு கருத்தடைச் சாதனமாகவும் செயல்படுகிறது.

---

# சொர்க்கத்தில் நரகம்

'திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது. வாழ்க்கை நரகத்தில் நடக்கிறது' – என்று சொல்லப்படுவது சரிதானோ என்னவோ....? விவாகரத்துக்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கின்றன.

கணவன் – மனைவி இடையேயான சந்தேகமும், கணவனிடம் இருக்கும் மதுப் பழக்கமும், செக்ஸ் குறைபாடுகளும் 40 சதவீதம் அளவிலான விவாகரத்துக்களுக்கு காரணமாக இருக்கின்றன. திருமணத்திற்கு முன்பிருந்த 'பந்தங்களை'த் தொடர்வது அல்லது திருமணத்திற்குப் பின்னால் வேறு 'தொடர்பு'களை ஏற்படுத்திக் கொள்வதால் 35 சதவீதமானோர் விவாகரத்துக்கு மனுச் செய்கிறார்கள். கணவன் அல்லது மனைவியிடம் இருக்கும் மனோரீதியான ஊனங்களால் 15 சதவீதம் பேரும், என்ன பிரச்சினை என்று சொல்லாமலே 'எனக்கு அவரைப் பிடிக்கவில்லை. என்னால் சேர்ந்து வாழ முடியாது. விவாகரத்து கொடுத்து விடுங்கள்' – என்று சொல்லும் அளவுக்கு 10 சதவீதம் பெண்களும் இருக்கிறார்கள்.

தற்போது விவாகரத்துக் கோருபவர்களில் பெரும்பகுதியினர் பெண்கள். இவர்களின் தாம்பத்திய வாழ்க்கை விரைவில் கசந்துவிட என்ன காரணம் என்பது மனோதத்துவ நிபுணர்களுக்கே புரியாத புதிராக இருக்கிறது. வசதி படைத்தவர்கள், நடுத்தர வருவாய் கொண்டவர்கள், நகரப் பகுதிகளில் வசிப்பவர்கள் ஆகியோரே விவாகரத்தில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.



விவாகரத்து கேட்ட பெண்களில் ஒரு பகுதியினர் அது கிடைத்தும் தங்கள் சார்பில் வாதாடிய வழக்கறிஞர்களுக்கு விலை உயர்ந்த பரிசுகளைக் கொடுத்து மகிழ்ச்சியைக் கூட வெளிப்படுத்துகிறார்கள். ஆயிரங்காலத்துப் பயிர் இப்படி அரைகுறையாய் அழிந்து போவதை எப்படித்தான் வேலி போட்டுக் காப்பாற்றுவது என்பது தான் புரியாத புதிராக இருக்கிறது.

# நெஞ்செரிவா?

தொண்டைக்குச் சற்று கீழ் மார்பு எலும்புகளுக்கு நேர் கீழாக உள்ள பகுதியில் எரிவது போன்ற உணர்வைத்தான் நெஞ்செரிவு என்கிறோம்.

இந்த வலி சில சமயங்களில் மார்பை நோக்கியோ, கழுத்து அல்லது தொண்டையை நோக்கியோ வரும். இதற்கும்



மாரடைப்பிற்கும் வித்தியாசம் உண்டு. நெஞ்செரிவு மாரடைப்பின் அறிகுறி அல்ல. வயிற்றில் சேரும் அதிகப்படியான அமிலத்தன்மைதான் இந்த நெஞ்செரிவுக்கு முக்கிய காரணம்.

வாயுக் கோளாறுகள், ஆஸ்பிரின் போன்ற மாத்திரைகளை அதிக அளவில் எடுத்துக் கொள்வதாலும் நுரையீரலுக்கும் வயிற்றுப் பாதைக்கும் இடையே ஏற்படும் கோளாறுகளாலும் நெஞ்செரிவு ஏற்படுகின்றது.

நெஞ்செரிவு உள்ளவர்கள் காப்பி, மதுபானம், புகையிலை, அதிக உணவு எடுத்துக் கொள்ளுதல், சில பழங்கள் சாப்பிடுதல் என்பவற்றை தவிர்க்க வேண்டும்.

வழக்கமாக படுக்கைக்குச் செல்வதற்கு இரண்டு மூன்று மணி நேரத்திற்கு முன்பாகவே உணவு சாப்பிடும் பழக்கத்தைக் கொண்டுவரவேண்டும். இறுக்கமான ஆடைகளும் அணியக் கூடாது. படுக்கும் போது தலைக்கு 4 முதல் 6 அங்குலம் உயரத் தலையணை வைத்துப் படுக்கவேண்டும். எடை அதிகமாக இருப்பவர்கள் உடல் எடையைக் குறைப்பது நல்லது.

நெஞ்செரிவு என்பது ஆபத்தான விஷயமல்ல. ஆனால் கறுப்பு, பழுப்பு நிறத்தில் வாந்தி, இரத்தம் கலந்த வாந்தி என்றால் மருத்துவர்களை அணுகிச் சரியான சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

# சோப்பு பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டியவை

துணிகள் துவைக்கப் பயன்படுத்தும் சலவை சோப்புகளில் இரசாயனத் தன்மை உள்ளது. அதனால் அவை உடலுக்குள் சென்று விடக்கூடாது. குழந்தைகள் இருக்கும் இடங்களில் சலவை சோப்பை வைக்கக்கூடாது. சிலருக்கு மென்மையான சருமமாக இருக்கும். அவர்கள் அதிக இரசாயனத் தன்மை



கொண்ட சோப்புகளை பயன்படுத்தக் கூடாது. குறிப்பாக பளிச்சென்ற நிறம் கொண்ட சலவைசோப்புகளில் இரசாயனத்தன்மை அதிகமாக இருக்கும்.

இந்த வகை சோப்புகளை பயன்படுத்தி துணிகளை துவைக்கும்போது, துணிகளை நன்றாக அலசிவிட வேண்டும். சலவைசோப்பின் இரசாயனத் தன்மை அழுக்கோடு சேர்ந்து வெளியேறிவிட வேண்டும்.

வறண்ட சருமத்தைக் கொண்டவர்கள் 'டியோடண்ட்'களையும் 'ஆன்டிபயக்ரிக்ஸ்' சோப்புகளையும் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். இவைகளை பயன்படுத்தும்போது சூரிய ஒளி உடலில்பட்டால் இரசாயன நிகழ்வுகள் ஏற்பட்டு சருமத்தில் ஒவ்வாமை உருவாகிவிடும்.

வறண்ட சருமம் கொண்டவர்கள் குளியல் சோப்பை பயன்படுத்தும் போது அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். குளிக்கும் போது நன்றாக சோப்பை கழுவி விட்டு விடவேண்டும். சோப்பின் தன்மை எதுவும் சருமத்தில் இருந்து விடக்கூடாது. வறண்ட சருமம் கொண்டவர்கள் ஒரு நாளைக்கு ஒரு தடவை மட்டுமே சோப்பு தேய்த்துக் குளிக்கவேண்டும்.

சில வகை 'கிளீனிங் லிக்யூட்'களில் இரசாயனத்தன்மை அதிகம் உள்ளது. கிட்டத்தட்ட அவை விஷத் தன்மை கொண்டவை என்றே சொல்லலாம். அதனால் அவைகளைப் பயன்படுத்தும்போது அவை உடலிலோ குறிப்பாக கண்களிலோபட்டு விடக் கூடாது. அவை வயிற்றுக்குள்சென்றால் வயிற்றை நாசமாக்கி விடும். கிளீனிங் லிக்யூட்களில் இருக்கும் அமோனியா வாயுகண்கள், சுவாச உறுப்புகளை பாதிப்பதுடன் பல் வேறு நோய்களை உருவாக்கும் தன்மை கொண்டது.

கழிவறைகளை சுத்தம் செய்யும் திரவங்களில் 'லை' என்ற இரசாயனப் பொருள் உள்ளது. இவை உடலில்பட்டால் சருமத்தில் பாதிப்பையும், சுவாசித்தால் நுரையீரலில் அவஸ்தையையும் ஏற்படுத்தும்.

சலவை சோப் மற்றும் கழிவறையை சுத்தப்படுத்தும் திரவங்களில் இருக்கும் இரசாயனத்தன்மையை உணர்ந்து எச்சரிக்கையாகவே அவைகளைப் பயன்படுத்த வேண்டும்.

## பெண்

## இறால் கட்லெட்

**தேவைப்படும் பொருட்கள்**

* இறால் – 500 கிராம்
* உருளைக்கிழங்கு – 250 கிராம் (வேகவைத்துப் பிசைந்தது)
* பச்சை மிளகாய் – 5 (சிறிதாக நறுக்கவும்)
* பெ. வெங்காயம் – 2 (சிறிதாக நறுக்கவும்)
* முட்டை – 2 அடித்துக் கலக்கவும்
* சுட்ட ரொட்டித்தூள் – 100 கிராம்
* கறிவேப்பிலை – தேவைக்கு (சிறிதாக நறுக்கவும்)
* மல்லி இலை – தேவைக்கு (சிறிதாக நறுக்கவும்)
* மஞ்சள் தூள் – சிறிதளவு

**செய்முறை:-**

* இறாலை சுத்தப்படுத்தி உப்பு, மஞ்சள் தூள் கலந்து வேக வையுங்கள்.
* சிறிதளவு எண்ணெயில் பெரிய வெங்காயத்தை தாளிக்கவும். அத்தோடு பச்சைமிளகாய், கறிவேப்பிலை, மல்லி இலை போன்றவைகளையும் சேர்த்து தாளித்து இறக்குங்கள். அதில் உருளைக் கிழங்கையும், இறாலையும் கலந்து பிசைந்து உருண்டையாக்கி 'கட்லெட்' போல வட்டமாகத் தயாரிக்கவும். முதலில் அதனை முட்டைக் கூழில் அமுக்கிவிட்டு பின்பு ரொட்டித்தூளில் அமுக்கி எடுத்து வறுக்கவும். பிரவுன் நிறமானதும் எடுத்து விடுங்கள்.

# வனப்பான இளமைக்கு சத்துணவு

ஆரோக்கியமாக வாழ்வது மனிதனின் பிறப்புரிமை என்றாலும், அதற்கு நல்ல சத்தான உணவு, சுத்தமான குடிநீர், சுத்தமான சுற்றுப்புறம், தூய்மையான காற்று, உடற்பயிற்சி மற்றும் ஓய்வு தேவை.

ஆனால் இதில் முதல் அடிப்படைத் தேவை எது தெரியுமா? சத்துணவுதான்.

உடல் வளர்ச்சி, சக்தி சிதைவடைந்து போன கலன்களை புதுப்பிக்கும் ஆற்றல், நோய் எதிர்ப்பு, உடலின் ஒட்டுமொத்த பாதுகாப்பு ஆகியவற்றை அளிப்பதுதான் சத்துணவு. எனவே அதில் அதற்குத் தேவையான எல்லாப் பொருட்களும் அடங்கி இருக்க வேண்டும்.

பருவ நிலை, உழைப்பு, தட்பவெப்ப நிலைக்கு ஏற்றபடி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உணவு சாப்பிடுவது நல்லது. அதிக பணச் செலவு இல்லாமல் சத்துக்கள் நிறைந்த உடல் ஆரோக்கியம் காத்து, என்றென்றும் இளமை காக்கும் உணவுகளாக உட்கொள்ளக்கூடிய சில உணவு வகைகள் காணப்படுகின்றன.

கலப்புத் தானிய உணவு சாப்பிடுவது நல்லது. அதாவது 3 வேளையும் ஒரே தானியம் சாப்பிடுவதற்கு பதில், கொஞ்சம் அரிசி, கொஞ்சம் கோதுமை, கேழ்வரகு போன்ற மற்றைய தானியங்களையும் பயன்படுத்துவது நல்லது.



முழு பயறு வகைகள், பருப்பு வகைகளைக் காட்டிலும் விலை குறைவு. இது தவிர 'பி' விற்றமின்கள் பயறுக்களில் அதிகம் உள்ளது. ஆகவே இவற்றை அதிகம் பயன்படுத்த வேண்டும்.

பயறு வகைகளை முளைகட்டவிட்டுச் சாப்பிட்டால் நமக்கு கூடுதலான விற்றமின் பி,சி, சத்தும் கிடைக்கிறது. உணவில் உள்ள இரும்புச் சத்தும் நன்றாக கிடைக்கப்பெறும். மேலும் அடுப்பில் வைத்து சமைப்பதற்கான நேரமும் எரிபொருளும் மிச்சம். எனவே இது சிக்கன உணவும் ஆகும்.

தானியமும் பயறும் ஒன்றாக சேர்த்துச் சாப்பிட்டால் அதிலிருந்து கிடைக்கும் புரதச் சத்து, குணத்திலும், தரத்திலும் உயர்ந்திருக்



கும். இட்லி, பொங்கல் வடை போன்றவைகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

உணவில் தினமும் கீரை இருப்பது அவசியம். ஏனென்றால் அதிலிருந்து 5 வித சத்துக்கள் கிடைக்கின்றன. விலையும் மற்றக் காய்கறிகளை விடக் குறைவு. முருக்கைக் கீரை போன்றவைகளை வீட்டுத் தோட்டத்தில் இருந்தே பறித்துக் கொள்ளலாம். இது தவிர சலிப்பு ஏற்படாதபடி பொரியல், மசியல், துவையல், பச்சடி, வடை போன்ற பல வகைகளை சாப்பிடலாம்.

பல பெண்கள் பால் குடிப்பதை தவிர்த்து வருகிறார்கள். இது நல்லதல்ல.

பால் அத்தியாவசியமான ஒன்று. எனவே பால் மற்றும் பால் பொருட்களான தயிர், மோர் போன்றவை உணவில் அவசியம் இடம் பெற வேண்டும்.

பழங்கள் சாப்பிட்டால் இளமை அழகுக்கு எழில் சேர்க்கும். குறிப்பாக பப்பாளி, கொய்யாப் பழம், வாழைப்பழம், வெள்ளரிக்காய், மாம்பழம், நெல்லிக்காய் போன்றவை மிகவும் நல்லது.

உடல் தோற்றத்தை அழகுபடுத்தி பொலிவு ஊட்டுவதில் காய்கறிகளுக்கும் முக்கிய பங்கு உண்டு. பச்சைக் காய்கறிகளை வாரத்தில் இரு நாட்களாவது சாப்பிட வேண்டும். இதன் மூலம் காய்கறிகளில் உள்ள சத்துப் பொருட்கள் அழிந்து போகாமல் அப்படியே உடலோடு ஐக்கியமாகிவிடும். நோய் தடுக்கும் சக்தியாகவும் விளங்கும். காய்கறிகளில் உள்ள நார்ப் பொருட்கள் மலச்சிக்கல், பெருங்குடல் புற்றுநோய் போன்றவை வராமல் தடுக்கிறது. மேலும் பற்களை உறுதியாக வைத்துக் கொள்ள உதவுகிறது. இவற்றை அப்படியே நறுக்கி 'சிலைட்ஸ்' ஆகவோ அல்லது துவையலாகவோ அல்லது தயிர் சேர்த்து பச்சடியாகவோ சாப்பிடலாம்.

உணவுப் பொருட்களை சமைப்பதிலும் கவனம் தேவை. முடிந்தவரை அதில் உள்ள சத்துப் பொருட்கள் வீணாகிப் போகாமல் சமைப்பது மிகவும் அவசியமானதாகும்.

# பயணத்தின்போது அழகாய் ஜொலிக்க...

நம்மில் பலர் அடிக்கடி தூர இடங்களுக்கு பிரயாணம் செய்கிறோம். அப்போது பஸ், ரயில்களில் நீண்ட நேரம் பயணம் செய்ய வேண்டி உள்ளது. அப்போது நாம் செய்து கொண்ட 'மேக் – அப்' சில நிமிடங்களில் சீர்குலைந்து முகமே அழகற்றதாக மாறிவிடும். இப்படி அடிக்கடி கலைந்து போகிற மேக்– அப்பை சரிப்படுத்த அற்புதமான யோசனை.



ரயிலிலோ, பஸ்ஸிலோ பயணம் செய்து கொண்டிருக்கும் போது மேக் – அப் கலைந்து போனால் 'அய்யய்யோ திடீரென்று இப்படி ஆகிவிட்டதே .. என்ன செய்வது?' என்று கவலைப்படுகிறீர்களா? இனி அந்தக் கவலையே வேண்டாம்.

ரயிலில் இருந்தபடியே முகத்தை பேஷியல் டிஷ்யூ மூலம் சுத்தப்படுத்தி, பிறகு மாய்சரைசர் அல்லது ஸ்கின் டோனர் பயன்படுத்தவும்.

உதடுகளில் லிப்ஸ்டிக் கலரை லேசாக ஒற்றி எடுக்கவும். பொட்டு கலைந்து போயிருந்தால், அதையும் லேசாக சரி செய்து கொள்ளுங்கள்.

கண்களில் மை மற்றும் ஐ–லைனர் கலைந்து போயிருந்தால் அதை சுத்தம் செய்துவிட்டு மீண்டும் புதிதாக இடவும்.

கூந்தல் கலைந்து போய் இருந்தால் லேசாக வாரி, சரி செய்யவும். ஸ்லைடு அல்லது கிளிப் மூலம் தலைமுடியை ஒழுங்குபடுத்தவும்.

தேவைப்பட்டால் சிறிதளவு வாசனைத் திரவியத்தை தெளித்துக் கொள்ளவும்.

உங்கள் செருப்புக்களை பழைய துணியால் துடைத்து சுத்தம் செய்யுங்கள். வீட்டில் நகைகள் அணிய நேரமில்லாவிட்டால் அதை மணி பார்சில் போட்டு எடுத்துவரவும். அலுவலகம் வந்ததும் அவற்றை அணிந்து கொள்ளலாம்.

பயணத்தின் போது மேக் – அப் சாதனங்களுடன் சிறிய டவல் ஒன்றையும் ஹான்ட் – பேக்கில் எடுத்துக் கொள்ளுங்கள்.

நாம் சொன்னபடி மேக் – அப்பை சரி செய்து கொண்டால் சுற்றுலாவின் போது எப்போதும் மிக அழகா இருப்பீர்கள்!

எங்கே சுற்றுலா செய்வதுடன் சுற்றி உள்ளவர்களையும் வசீகரியுங்கள்.

## திருகோணமலையில்...
## சுடர் ஒளி  உதயன்  விளம்பர பணிமனை

**எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.**

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாரச்சி மாவத்தை, கொழும்பு - 14.
011 4734401 - 3, 011 2399666 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670




## EXPOAIR  எக்ஸ்போ எயார்

*your friend in the skies...*

வானத்தில் உங்கள் நண்பன்...

**யாழ் – கொழும்பு**
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999 / 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290 / 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com




யாழ். நகரில் குறைந்த விலையில்
நிறைந்த ரகங்கள்!
நிகரில்லாத் தரங்கள்!

அழகிய புடவைத் திணுசுகளின்
குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்

நாளைய நாகரிகத்தை
நாம் இன்றே அறிமுகப்படுத்துகின்றோம்
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்
உண்மை புரியும்.

## கிறீன் பலஸ் எம்போறியம்

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.




மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்...

உங்களின் இக்காலத் தெரிவுக்கு...

## குமரகுரு

### புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.

குமரகுரு புடைவை
அழகுப்பொருள் வாணிபம்
யாழ் சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
TEXTILE & FANCY HOUSE
Yarl Road, Kilinochchi.

Tel: 021 228 5971

ரூபா. 7/= மட்டுமே PC

- PP / ID படங்கள் துரித சேவை
- டிஜிட்டல் அல்பம்
- டிஜிட்டல் ஸ்டுடியோ

## ஹில்ஸ்
### கலர் போட்டோ (பிரை) லிமிட்
298 - 1/ 4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு – 06. Ph: 2508430



இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர். பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, மே. 22 ஆம் திகதி வெளியிடப்பட்டது.